உதயன்

24 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 080 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 02 வியாழக்கிழமை (14/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


# வலி.வடக்கில் படைகளுக்கு உரிமையில்லை எதிர்த்துப் போராட அனைவரும் திரள்வோம்

## மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறைகூவல்

யாழ்ப்பாணம், பெப்.14

விமான நிலைய விஸ்தரிப்புக்காகவும், துறைமுக விஸ்தரிப்புக்காகவும் பொது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படும் என்று சொல்வதற்குப் படைத்தளபதிக்கு உரிமை கிடையாது. அவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்?

வலி.வடக்கு மக்களை மீளக்குடியமர்த்துமாறு உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ள நிலையில் அந்தக் காணிகளைப் படையினர் எவ்வாறு கையகப்படுத்த முடியும்?

எனவே வலி.வடக்கு மக்கள் நாளை வெள்ளிக்கிழமை நடத்தவுள்ள வாழ்வுரிமைப் போராட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு எமது உரிமைக்காகக் குரல் கொடுப்போம் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேரும் இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா,

பார்க்க பக்கம் 04




**தப்பிக்க மாட்டார் மஹிந்த**
எவ்வாறான தந்திரங்களைக் கையாண்டாலும்... 08

**சாதித்தது வடகொரியா**
அணு ஆயுத சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது... 09

**மோதலை தடுக்க சென்ற பொலிஸ் மீது பொல்லடி**
அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தில்... 15

**சாதனையுடன் தீவுகள் வெற்றி**
ஆஸிக்கெதிரான மகளிர் உலகக் கிண்ண 'சுப்பர் -6' போட்டியில்... 23


# இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை

## ஜெனிவா மாநாட்டுக்கு நவநீதம்பிள்ளை பரிந்துரை



ஜெனிவா, பெப்ரவரி 14

இலங்கையில் மீறப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் இதற்கான ஒரு பொறிமுறையை வகுக்கவேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பரிந்துரை செய்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அவர் இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளார்.

இலங்கை தொடர்பில்

பார்க்க பக்கம் 04

### சிறீதரன் எம்.பி. 4ஆம் மாடிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகத்திலிருந்து வெடிபொருள்கள் மற்றும் சி.டிக்கள் மீட்கப்பட்டமை தொடர்பில், பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார் 4ஆம் மாடிக்கு விசாரணைக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகம் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் சோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்தது.

அதன்போது குறித்த அலு

பார்க்க பக்கம் 04

### குளவி கொட்டி ஒருவர் சாவு

#### தெல்லிப்பழையில் பரிதாபம்

தெல்லிப்பழை, பெப்.14

காணி துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் குளவி கொட்டியதில் உயிரிழந்தார். மற்றும் ஐவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டியில் இடம்பெற்றது. அதன்போது இதே இடத்தைச் சேர்ந்த வல்லி திருநாவுக்கரசு (வயது-64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த ஐவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிறு காயங்களுக்குள்ளான நால்வர் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பினர். உடுவிலைச் சேர்ந்த சின்னத்துரை தியாகராசா (வயது-61) என்பவர் தொடர்ந்து சிகிச்சை

பார்க்க பக்கம் 23

### மாணவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம்,பெப்.14

கைது செய்யப்பட்டுப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் நேற்று புதன்கிழமை வவுனியாவில் வைத்து அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மாணவர்கள் விடுவிக்கப்பட்டதை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கிய விசேட உத்தரவுக்கு அமையவே இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் பரமலிங்கம் தர்ஷானந்த்

பார்க்க பக்கம் 23

### சம்பந்தனை சந்திப்பதற்கு விரும்புகிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம்,பெப்.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஜெனிவாவில் எழுந்துள்ள நெருக்கடியைச் சமாளிக்கவும், பொது நல

பார்க்க பக்கம் 04

### அரசியல் வேறுபாடின்றி அனைவரும் வாருங்கள்

#### உண்ணாவிரதத்துக்கு மீள்குடியமர்வுக் குழு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

வலி.வடக்கு மக்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கட்சி, அரசியல் வேறுபாடின்றி சகலரும் கலந்து கொண்டு, மக்கள் மீளக்குடியமர்வுக்கு ஆதரவு வழங்குமாறு வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்வுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

வலி.வடக்கு மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுக் குழு, வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்வு பணிகளுக்கான நடவடிக்கைக்குழு என்பன இணைந்து மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 4 மணிவரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. தெல்லிப்

பார்க்க பக்கம் 04

### பல்கலைக்கழக மாணவர்கள் போன்று அரசியல் கைதிகளையும் விடுவியுங்கள்

#### அரசிடம் கோருகிறார் மனோ

கொழும்பு, பெப்.14

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்தது போன்று, மிக நீண்ட காலமாக அல்லலுறும் தமிழ் அரசியல் கைதிகளையும் அரசு விடுதலை செய்ய வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெற்கிலும், வடக்கிலும் ஒரே மனநிலையில் தான் பல்கலைக்கழக மாணவர்கள் சிந்திக்கிறார்கள். ஆனால் தெற்கிலே ஒரு விதமாகவும், வடக்கிலே இன்னொரு விதமாகவும் மாணவர்கள் நடத்தப்படுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் தமிழ் மாணவர்கள் கைது செய்யப்

பார்க்க பக்கம் 04

### கூட்டமைப்பைப் பிரித்தாளும் தந்திரம் ஒருபோதும் பலிக்காது

#### அரசுக்குக் கூறுகிறார் மாவை எம்.பி.

யாழ்ப்பாணம்,பெப்.14

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் பிரித்தாளும் தந்திரத்துக்கு நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். அரசின் இந்தச் சூழ்ச்சிகள் எல்லாம் எம்மிடம் எடுபடமாட்டா.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால், நேற்று புதன்கிழமை நண்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டி

பார்க்க பக்கம் 23

# நாவற்குழி வீடமைப்புக் காணியில் யாழ். குடும்பங்கள் வசிக்கத் தடை

**உயர் அதிகாரி உத்தரவிட்டுள்ளதால் அங்கிருந்து வெளியேறுமாறு கூறியதாக அந்தக் குடும்பத்தினர் தெரிவித்தனர்.**

தென்மராட்சி,பெப்.14

இரவில் வரும் தென்னிலங்கை வாசிகளுக்கு இடம் கொடுக்கும் படையினர் பகலில் கொட்டில் அமைக்கச் செல்லும் யாழ்.மாவட்டத்தில் நிரந்தரக் காணியில்லாத குடும்பங்களை விரட்டுவதாகப் பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

நாவற்குழியில் உள்ள வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் குடியமரச் செல்லும் யாழ்.மாவட்ட மக்களே இவ்வாறு துரத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதல் நாள் அங்கு காணி பார்வையிடச் சென்ற தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்று அங்கு குடியிருக்கக் கூடிய ஒரு இடத்தைப் பார்வையிட்டுத் தெரிவு செய்தது. அதன் பின்னர் மறுபடியும் குடிசை அமைப்பதற்காக அங்கு சென்ற வேளையில், அந்த இடத்தில் சிங்களக் குடும்பம் குடியமர்த்தப்பட்டுள்ளதாகப் படையினர் கூறியுள்ளனர். இதனையடுத்து குடிசை அமைப்பதற்கு வேறு இடம் பார்த்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த படையினர் கொட்டில் போட வேண்டாமென உயர் அதிகாரி உத்தரவிட்டுள்ளதால் அங்கிருந்து வெளியேறுமாறு கூறியதாக அந்தக் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட குடும்பம் நேற்றுப் புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் அப்பகுதி கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்தது.(த-9)

## அளுத்கமையில் சடலம் மீட்பு

கொழும்பு,பெப்.14

நாட்டில் தற்போது சடலங்கள் மீட்கப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில், அளுத்கமையில் நேற்று சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

அளுத்கமையில் வாய்க்கால் ஒன்றிலிருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அந்தச் சடலத்திற்கு அருகில் சைக்கிள் ஒன்று இருப்பதாகத் தெரிவித்த பொலிஸார், சடலம் நேற்று மதியம் வரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் இறந்தமைக்கான காரணம் தெரியவரவில்லை. (சி)



யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார்.

வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவும் மற்றும் அமைச்சர்கள் இருவரும் காணப்படுகின்றனர்.

## பாப்பரசர் தெரிவு பற்றிய விளக்கம்

கொழும்பு, பெப்.14

பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பர் எதிர்வரும் 28ஆம் திகதி தமது பதவியிலிருந்து விலகவுள்ளதாக அறிவித்தைத் தொடர்ந்து புதிய பாப்பரசர் தெரிவு தொடர்பாக வெளியான செய்திகள் பற்றி தேசிய கத்தோலிக்க சமூக தொடர்பு மையம் விளக்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாப்பரசர் தெரிவானது முழுக்கவும் கருதினால்கள் குழுவின் பொறுப்பில் நடைபெறுவதாகும். அதுவும் கருதினால்கள் இரகசியமாகக் கூடி நான்கு சுவர்களுக்கு நடுவில் நடைபெறும் தெரிவாகும். எனவே இந்தத் தெரிவில் பங்குகொள்வோரின் பெயர்கள் முன்கூட்டியே தெரிவு செய்யப்படுவதில்லை. இந்த நிலையில் வெளியாகியுள்ள செய்திகள் வெறும் ஊகங்கள் மட்டுமே.

பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பருக்காகவும், கத்தோலிக்க திருச்சபையின் மேன்மைக்காகவும் செபம் செய்யும்படி கத்தோலிக்க மக்களையும் கேட்டுக்கொள்கிறோம்-என்றுள்ளது. (ப)

## வைத்தியசாலை திறப்பு விழாவில் தனிச் சிங்களத்தில் தேசிய கீதம்

**இறுதி நிகழ்வாக தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அது தனிச் சிங்களத்திலேயே இசைக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம்,பெப்.14

மஹிந்த ராஜாபக்ஷ நேற்றுக் கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் தனிச் சிங்களத்திலேயே தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனால் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகள் பலர் முகஞ் சுழித்ததை அவதானிக்க முடிந்தது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஜப்பானால் 2 ஆயிரத்து 550 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. அனைத்து வேலைகளும் நிறைவடைந்த போதும் ஜனாதிபதியே கட்டடத்தை திறந்து வைக்க வேண்டும் என்று கூறப்பட்டமையால் சுமார் 5 மாதங்கள் வரை அந்தப் புதிய கட்டடத் தொகுதியை பயன்படுத்த முடியாத நிலை இருந்தது.

இந்த நிலையில் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாவை வெட்டிக் கட்டடத்தை திறந்து வைத்தார். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வடக்கு மாகாண ஆளுநர், மதகுருமார்கள், வைத்திய நிபுணர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், படைத்தளபதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் உரைகள் நிறைவடைந்து இறுதி நிகழ்வாக தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அது தனிச் சிங்களத்திலேயே இசைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இவ்வாறு தனிச்சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை குறித்து பலரும் விசனம் வெளியிட்டனர். (த-4)

# பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தாதீர்!

**இடமாற்றக் கோருகிறது சர்வதேச ஜூரிகள் சபை**

கொழும்பு,பெப்.14

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை வேறு நாட்டுக்கு இடம்மாற்றுமாறு சர்வதேச ஜூரிகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சிமாநாடு கொழும்பில் நடத்தப்பட வேண்டுமானால், இலங்கை அரசு முக்கிய சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலகம் வலியுறுத்தியுள்ள நிலையில், ஜூரிகள் சபை மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அதாவது, மனித உரிமைகள், தேர்தல்கள், ஊடக சுதந்திரம் ஆகிய மூன்றுக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுதல், பொலிஸ் துறையை பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்து நீக்கி சிவில் நிர்வாக தனி அலகை நிறுவுதல், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல் போன்ற நிபந்தனைகளையே பொதுநலவாயம் முன்வைத்துள்ளது.

இந்த நிலையில் பொதுநலவாய அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவுக்கு சர்வதேச ஜூரிகள் சபை கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அந்தக் கடிதத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்கனவே அனுப்பிவைத்திருந்த கடிதத்தையும் ஜூரிகள் சபை இணைத்துள்ளது.

இணைக்கப்பட்ட கடிதத்தின் விவரம் வருமாறு:-

தங்களின் முன்னைய அறிக்கைகளைக் கருத்திற் கொண்டு 2013 பொதுநலவாய அமைய தலைவர்களின் உச்சி மாநாடு நடைபெறும் இடத்தினை மாற்றும்படி நாம் உங்களை கேட்டுக்கொள்கின்றோம்.

சட்டவிரோதமான குற்றப் பிரேரணை செயன்முறை, இலங்கையில் மனித உரிமைகளுக்கான மற்றும் சட்டத்தில் ஆட்சி என்பவற்றுக்கான மரியாதை மோசமடைந்து வருவதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. இந்த போக்கை 'பொறுப்பில்லாத அதிகாரம்' எனும் எமது அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது.

இப்போதைய சூழலில் இலங்கையை பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை நடத்த அனுமதிப்பது ஜனாதிபதி, சட்டத்துறையின் சுயாதீனம், சட்டத்தின் ஆட்சி என்பவை தொடர்பில் பொதுநலவாயத்தின் அக்கறை பற்றி கடுமையான வினாக்களை எழுப்ப வழிவகுக்கும்.

உங்களுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படின் எம்முடன் தொடர்பு கொள்ள தயவு செய்து தயங்க வேண்டாம்.- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் தீர்வு வழங்காவிடின் அமெ.,சீன இராணுவங்களும் தலையிடும்

## அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம்

கொழும்பு,பெப்.14

இலங்கையில் கொழுந்து விட்டெரியும் தேசிய இனப் பிரச்சினைத் தீயை அணைக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின், இந்திய இராணுவம் மட்டுமல்ல, அமெரிக்க, சீன இராணுவமும் இலங்கை விவகாரங்களில் தலையிடும்.

ஏகாதிபத்திய தலையீடு, அடக்குமுறை, இனவாதம் முதலான மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டே அரசு மக்களை அச்சுறுத்துகிறது.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, தனிநபரின் தேவைகளுக்காக நாட்டில் எவரும் நாடகமாட முடியாது என்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பின் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இடம்பெற்று வருகின்ற தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து தீர்வொன்றை வழங்கவேண்டுமென சர்வதேச நாடுகள் இலங்கை அரசை வலியுறுத்துகின்றன. இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் உள் விவகாரங்களில் ஏகாதிபத்திய நாடுகள் தலையிடுகின்றன. இனவாதம், அடக்குமுறை முதலான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரசு மக்களை அச்சுறுத்துகிறது.

பெருந்தொகையான பணத்தை சர்வதேச நாடுகளிடமிருந்து கடன்வாங்கி மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துகிறது. இவற்றால் ஒரு பயனும் ஏற்படவில்லை.

அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சி உருவாகுவதால், அதைத் தடுப்பதற்கு ஏகாதிபத்திய தலையீடு நாட்டில் இடம்பெறுகிறது எனக் கூறப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம், கொலைகள், காணாமல்போதல் முதலானவை குறித்து நியாயமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என சர்வதேச நாடுகள் அரசை வலியுறுத்துகின்றன.

இவ்வாறான நெருக்கடியான நிலையில், நாட்டில் பிரச்சினை இல்லை என அரசு கூறுகிறது. ஆனால், தேசிய இனப்பிரச்சினை என்ற தீ இலங்கைக்குள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தீயை அணைக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்காவிடின், இந்திய இராணுவம் மட்டுமல்ல, அமெரிக்க, சீன இராணுவமும் இலங்கை விவகாரங்களில் தலையிடும்-என்றார். (சி)

# அல்லாரையில் நேற்று படை முகாம்கள் திறப்பு

**சீன அரசினால் வழங்கப்பட்ட ரெஜிபோம் முகாம்களைப் பயன்படுத்தி அலுவலகங்களும் முகாம்களும் அமைக்கப்பட்டன.**


தென்மராட்சி, பெப்.14

சாவகச்சேரி அல்லாரை தம்பு தோட்டம் காணியில் புதிதாக அமைக்கப்பட்ட படைமுகாம்கள் நேற்றுப் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

கைதடி, நுணாவிலில் உள்ள 521ஆவது படையணியின் பிரிகேடியர் அலுவலகம், சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் உள்ள 11 ஆவது இலகு காலாட் படையணியின் தரைக் கட்டளைத் தளபதி அலுவலகம் உட்பட மூன்று அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

சீன அரசினால் வழங்கப்பட்ட ரெஜிபோம் முகாம்களைப் பயன்படுத்தி அலுவலகங்களும் முகாம்களும் அமைக்கப்பட்டன. அவற்றைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் அவர் வருகை தராததால் படை உயர் அதிகாரியினால் திறந்து வைக்கப்பட்டன.

36 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட தம்பு தோட்டக் காணியை படையினர் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் தமது முகாமாகப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)



கெருடாவிலில் மாயவர் கோவிலடி குடியேற்றத்திலுள்ள பொதுக்கிணற்றை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸாரும் கெருடாவில் தெற்கு பிரஜை குழுவினரும் பொதுமக்களும் சேர்ந்து துப்புரவு செய்தனர். (ம-253)

# பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து நல்லூரில் ஊர்வலம்

## இன்று நடத்த ஏற்பாடு

**உலக அன்பின் தினத்தை முன்னிட்டு இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம்,பெப்.14

விழுது நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பெண்கள் சமாசம் 'பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறைகளை ஒழித்தல்' என்னும் தொனிப்பொருளில் ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஊர்வலம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் பின் வீதியில் ஆரம்பமாகி சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நிறைவடையும். தொடர்ந்து அங்கு அரங்க நிகழ்வுகள் இடம் பெறும்.

உலக அன்பின் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊர்வலத்தில் அனைத்து பெண்கள் சங்கங்களும், சிறுவர் அமைப்புகளும் கலந்து கொள்ளவுள்ளன.

பெண்கள், சிறுமியர் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இன்றைய நிலையில் விழிப்புணர்வும் பாதுகாப்பும் அனைவருக்கும் அவசியமானது.

அதனை வலியுறுத்தும் முகமாக இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று விழுது நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இன்றைய தினத்தில் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஊர்வலத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-13)

# அனலைதீவு ஐயனார் கோயிலில் திருடியோருக்கு சிறையும் தண்டமும்

அனலைதீவு ஐயனார் கோயிலில் உண்டியலில் இருந்து 61 ஆயிரம் ரூபா இலங்கை நாணயக் குற்றிகள், 200 பவுண்ஸ் வெளிநாட்டுநாணயத் தாள்கள் என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நான்கு மாதங்களுக்கு கட்டாயச் சிறையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்குவிசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த இரண்டு சந்தேக நபர்களும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனை அடுத்து தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சிறையும் இவற்றை விட நான்கு மாதங்களுக்கு சட்டாயச் சிறையும் விதிக்கப்பட்டது. அத்துடன் 5 வருடங்களுக்கு ஒத்திவைக் கப்பட்ட 4 மாத சிறையும் விதிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் அனலைதீவு 5 ஆம் வட்டாரத் திலுள்ள ஐயப்பன் கோயிலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

திருடப்பட்ட 61 ஆயிரம் ரூபா நாணயக் குற்றிகள் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான அனலைதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பத்மராசா தனுசன் என்பவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டது. வெளிநாட்டுத் தாள்கள் குறித்த நபரிடம் இருந்தும் மற்றைய சந்தேக நபரான வேலணை 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நவரத்தினசாமி அனுசன் ஆகியோரிடம் இருந்தும் மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலமாக மற்றும் இரண்டு பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். இரண்டு பேரும் அனலைதீவைச் சேர்ந்த சகோ தரர்கள். அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவன். விசாரணையின் மூலமாக திருட்டு இடம்பெற்ற தினம் இரவு நான்கு பேரும் அனலைதீவில் ஒரே வீட்டில் தங்கியிருந்தமை தெரியவந்துள்ளது.

ஏனைய இருவருக்கும் திருட்டில் தொடர்பில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதால் இருவரும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.(ம-4)

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 9 திட்டங்களுக்கு ரூ. 5,909 மில்லியன்

## ஜனாதிபதி தலைமையிலான அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.14

*பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 9 திட்டங்கள் ஊடாக கடந்த 2012 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்து 909 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*

*ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட செயலகத்தால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

வெளிநாட்டு உதவிகள் மற்றும் உலக வங்கி என்பவற்றால் வழங்கப்படும் அனைத்து உதவிகளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாகவே வழங்கப்பட வேண்டும்.

இதற்கமைய பல்வேறு துறைசார் அபிவிருத்திகளுக்கும், வெளிநாடுகளால் வழங்கப்படும் பணம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 9 திட்ட அலுவலகங்கள் காணப்படுகின்றன. அவற்றின் ஊடாக யாழ். மாவட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 909.39 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக 32.75 மில்லியன் ரூபாவும், வாழ்வு எழுச்சி திட்டத்தின் ஊடாக 30.3 மில்லியன் ரூபாவும், திறைசேரி நிதியில் இருந்து 39.09 மில்லியன் ரூபாவும், வடக்கின் சிறு மீட்சித் திட்டத்தின் ஊடாக ஆயிரத்து 650.49 மில்லியன் ரூபாவும், வடக்கு- கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டு திட்டத்தின் ஊடாக ஆயிரத்து 370.53 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அவசர வேலைத் திட்டத்தின் ஊடாக 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபாவும், மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாக 628.04 மில்லியன் ரூபாவும், உலக உணவுத் திட்டத்தின் ஊடாக 27.69 மில்லியன் ரூபாவும் 'மஹிந்த சிந்தனை' வேலைத் திட்டத்தின் ஊடாக ஆரம்பப் பாடசாலைகள் திட்டத்தின் மூலம் 30.56 மில்லியன் ரூபா நிதியும் கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் பெரும்பான்மையான திட்டங்கள் செயற்படுத்தி முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

# சாவகச்சேரியில் உளவள நிலையம் விரைவில் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.14

தென்மராட்சிப் பிரதேசத்தில் மது போதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் தத்தளிப்போருக்காக உளவள சிகிச்சை நிலையம் விரைவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட உளவள சிகிச்சை வைத்திய நிபுணர் சிவயோகன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படவுள்ளன.

மது போதையில் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்காக இந்த ஏற்பாடுகள் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இந்த சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டதும் மது போதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் தத்தளிக்கும் பலர் பயன் பெறமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-9)

# நயினாதீவு இறங்கு துறையை புனரமைக்குமாறு கோரிக்கை

## ஜனாதிபதியிடம் மனு கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

நயினாதீவு இறங்கு துறையை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் நவீன முறையில் நிர்மாணித்துத் தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நயினாதீவுக்கு சென்றிருந்த ஜனாதிபதியிடம் இது சம்பந்தமான மனு ஒன்றை கையளித்ததாக வேலணை பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகரகுரு மூர்த்தி தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்துக்கு வருகைதரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது.

பயணிகளின் கடற்போக்குவரத்து வசதி கருதி இந்தத் துறைமுகத்தை உரிய முறையில் புனர்நிர்மானம் செய்ய வேண்டும்.

அத்துடன் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி ஆலயச் சுற்றாடலில் யாத்திரிகள் தங்கும் மடம் ஒன்றையும் அமைத்து தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருக்கும் பிரதான மற்றும் உள்ளக வீதிகளைப் புனரமைத்துத் தருமாறும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனுவை பெற்றுக்கொண்ட ஜனாதிபதி இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அங்கு உறுதியழித்தார்.

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை நயினை நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவல் சபையினரும் ஜனாதிபதியிடம் கையளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-17)

# கோப்பாய் நன்னீர் தேக்கத்தில் தண்ணீர் எடுப்பதை நிறுத்துக

## வலி. கிழக்கு பிரதேச சபையிடம் மக்கள் கோரிக்கை

**இதனை நம்பியே விவசாய நிலங்கள் உள்ளன.**

யாழ்ப்பாணம், பெப்.14

கோப்பாய் நன்னீர் தேக்கத்தில் இருந்து சட்ட விரோதமான நன்னீர் எடுத்து செல்வதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு பிரதேச மக்கள் வலி. கிழக்கு பிரதேச சபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து சபையிடம் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கோப்பாயில் இருந்து வல்லை வரைக்குமான நன்னீர் தேக்கத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரை சபையின் அனுமதி இன்றி எவரும் அள்ளிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படாது.

குறிந்த தேக்கத்தில் உள்ள தண்ணீரை வீதி புனரமைப்பில் ஈடுபடுவோர் பவுசர் வாகனம் மூலம் எடுத்து செல்கின்றனர்.

இந்த தேக்கத்தில் மழை காலத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நன்னீரை பெரும்பாலான விவசாயிகள் தமது விவசாய பயிர்களுக்குப் பயன்படுத்தியும் வருகின்றனர்.

அதனை விட இந்த நன்னீர் தேக்கத்தில் மூலம் பெரும்பாலான கிணறுக ளில் நீர் மட்டமும் கோடை காலத்தில் வற்றாத நிலையில் காணப்படுவது வழமை.

ஆகவே இந்த நன்னீர் தேக்கத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நன்னீரை எவரும் எடுப்பதற்கு ஒரு போதும் சபை அனுமதி வழங்காது.- என்று தெரிவித்தார். (ம-17)

# தற்காலிக இறங்கு துறை சிறுத்தீவில் அமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

சிறுத்தீவு மாதா கெபி செல்வதற்கு வசதியாகக் கடற்கரை பகுதியில் தற்காலிக இறங்குதுறை ஒன்றை அங்கு அமைத்திருந்தனர்.

இந்தக் கெபியின் வருடாந்த பெருந் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மண்டைதீவு மற்றும் பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் சிறுத்தீவுக்குச் சென்றனர்.

மக்கள் படகில் இருந்து இறங்கிச் செல்வதற்கு வசதியாக மரங்களை கொண்டு தற்காலிக இறங்குதுறை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## சம்பந்தனை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தாமல் விடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முறியடிக்கும் நோக்குடனுமே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கண்சிகிச்சை ஒன்றுக்காக இந்தியாவுக்குச் சென்றிருந்தார். கடந்த மாதம் 5 ஆம் திகதி சம்பந்தனின் பிறந்தநாள் அன்றைய தினம் அவர் இந்தியாவில் இருந்தார். ஜனாதிபதி மஹிந்த தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கூறியுள்ளார்.

இதன் போது, நாடு திரும்பியதும் உங்களை சந்திக்க விரும்புகிறேன் என்று ஜனாதிபதி சம்பந்தனிடம் கூறியுள்ளார்.

அதற்கு நாடு திரும்பியதும் பார்க்கலாம் என்று சம்பந்தன் பதிலளித்துள்ளார்.

தற்போது இலங்கை அரசுக்கு உலக அரங்கில் மிகக் கடுமையான நெருக்கடி எழுந்துள்ளது. இந்த மாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக காட்டமான பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது.

அத்துடன் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டாம் என்ற கோரிக்கையும் வலுப்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதியைச் சந்திப்பதைச் சம்பந்தன் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்வார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. (த-5)

## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டார்கள். இன்று மாணவர் விடுதலை என்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், இந்த அரசு தமிழ் மக்கள் மனங்களை வெல்ல இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டியுள்ளது. அந்த நெடுந்தூரப்பயணத்தில் ஒரு மைல்கல்தான் தமிழ் அரசியல் கைதிகள் பிரச்சினையாகும்.

கொழும்பு, வவுனியா, நீர்கொழும்பு, கண்டி, களுத்துறை சிறைக்கூடங்களிலும் பூசா தடுப்பு முகாமிலும் இருக்கின்ற கைதிகள் தொடர்பில் நியாயம் வேண்டும். தீர்ப்பு வழங்கப்பட்டோர், நீண்ட காலம் வழக்காடுவோர், விசாரணையின்றி இருப்போர் ஆகியோர் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கும் தேசிய நல்லிணக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

**சமூகத்தில் இருந்து பிரித்து வைக்காதீர்**

சோறு கொடுத்தார்கள், தண்ணீர் கொடுத்தார்கள், வீடு கொடுத்தார்கள் என ஏறக்குறைய ஆயிரம் பேரை சமூகத்தில் இருந்து பிரித்து வைக்காதீர்கள். ஆயிரமாயிரம் குற்றங்களை இழைத்துவிட்டு, ஒரேயொரு காயத்துக்கு மாத்திரம் மருந்து தடவினால் நாம் மகிழ்ந்து விடப் போவதில்லை. கண்ணெதிரே தெரியும் நடைமுறை உண்மைகளை நாம் மறந்து விடமுடியாது. எனவே தமிழ் கைதிகள் தொடர்பில் நீண்ட காலம் நீங்கள் வழங்கி வரும் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துங்கள்.

**கமலேஷ் சர்மா இங்கு வந்து சொன்னதென்ன?**

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் ஷர்மா இங்கு வந்து சொன்னது என்ன? பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறும் என்பதை உறுதி செய்யவே அவர் வந்தார் என்று அரசு சொல்லித் திரிகிறது. அது உண்மை அல்ல. மாநாடு நடைபெறுவது சம்பந்தமாக அவர் எந்த ஒரு உறுதிமொழியையும் தரவில்லை எனப் பொதுநலவாய செயலகம் தெரிவித்துள்ளது. உண்மையில் மாநாடு நடைபெற வேண்டுமானால் அரசு, மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் ஆகியவை தொடர்பில் பொதுநலவாயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்வதற்கே அவர் வந்தார். இன்று இந்த அரசின் மனித உரிமை, ஊடக சுதந்திரம் என்பவை பற்றிய வரலாறு எமக்குத் தெரியும். எனவே இன்று, பொதுநலவாய அமைப்பை ஏகாதிபத்திய அமைப்பு என்று சொல்லி அதிலிருந்து வெளியேற அரசுக்குள் ஆலோசிக்கப்படுகிறது.

**ஐக்கியத்துக்கு முதல் நிபந்தனை சமத்துவமே**

இந்த நாட்டில் இன்று தேசிய நல்லிணக்கம் பற்றி பேசப்படுகிறது. நமக்கும் தேவை தேசிய நல்லிணக்கம்தான். சிங்கள, தமிழ், முஸ்லிம் பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும் என்றால் சமத்துவம் இருக்க வேண்டும். சமத்துவம்தான் ஐக்கியத்துக்கு உள்ள முதல் நிபந்தனை.

நாட்டின் ஒவ்வொரு அசைவிலும்பெரும்பான்மை இனத்தை மாத்திரம் தூக்கி வைத்துக்கொண்டு, தமிழ், முஸ்லிம் மக்களை ஒதுக்கி வைத்துகொண்டு செயல்படுவது சமத்துவம் இல்லை. பொதுபல சேனாவை தட்டிக் கொடுத்து வளர்ப்பது, அவர்களுக்கு நாட்டில் எதையும் பேசவும் செய்யவும் அதிகாரம் வழங்குவது நல்லிணக்கச் செயற்பாடு இல்லை. பள்ளிகளையும், கோவில்களையும் இடித்து விட்டு ஒன்றும் நடக்கவில்லை என பொய் சொல்வது நல்லிணக்கம் இல்லை. அதுதான் பிரிவினைவாதம். இன்று இந்த நாட்டில் பிரிவினைவாதிகளும், இனவாதிகளும், மதவாதிகளும் இருப்பது அரசாங்கத்துக்கு உள்ளேதான். வெளியே எதிர்க்கட்சிகள் மத்தியில் பிரிவினைவாதிகள் கிடையாது- என்றார்.(த)

## அரசியல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பழை துர்க்கை அம்மன் கோயில் முன்றலிலேயே இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இராணுவத்தால் வெளியேற்றப்பட்ட மக்களாகிய நாம் 23 வருடங்களாக மீளக்குடியமர்த்தப்படாமல் பல வருடங்களாக முகாம்களிலும், தனியார் காணிகளிலும், உறவினர் வீடுகளிலும் வசித்து வருகின்றோம்.

போர் முடிவடைந்து 4 வருடங்களாகியும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது நிலங்களை இராணுவத்தினர் கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஆனால் எமது காணிகளில் இராணுவத்தினர் உல்லாச விடுதிகள், யோக்கட் தொழிற்சாலை அமைத்தும் விவசாயம் செய்தும் வருமானமீட்டி வருகின்றனர். நாம் மீளக்குடியமர்த்தப்படாமல் நிவாரணங்களும் நிறுத்தப்பட்டு மீன்பிடி, விவசாயம் ஆகிய தொழில்களும் செய்ய முடியாது துன்புறுகின்றோம்.

எனவே எம்மை எமது பகுதிகளில் மீளக் குடியமர்த்தி அவரவர் தொழில் செய்வதற்கு அனுமதிக்குமாறு வேண்டி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகின்றோம். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும், சங்கங்கள் அனைத்தும் கலந்து கொள்ளுமாறு மிகவும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.(த-5)

## சிறிதரன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வலகத்தில் வெடிபொருள்கள் இருந்ததாகவும், சில ஆபாச சி.டிக்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேளமாலிகிதன் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் செயலாளர் பொன்.காந்தன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார், சிங்களத்தில் அழைப்பாணையைக் கொடுத்து எதிர்வரும் 15ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு தெரிவித்துள்ளனர்.

எனக்குச் சிங்களம் தெரியாது. அத்துடன் 15ஆம், 16ஆம் திகதிகளில் எனக்கு முக்கிய பணிகள் இருக்கின்றன. அதனால் அன்றைய தினம் விசாரணைக்கு வரமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் தமிழில் அழைப்பாணையைக் கொண்டு வந்து கொடுத்த பொலிஸார், அதில் எதிர்வரும் 18ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு தெரிவித்துள்ளனர். (த-5)

## வலி.வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

க.சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறீதரன், அ.விநாயகமூர்த்தி ஆகியோர் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நேற்று நடத்தினர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வலி.வடக்கு 24 கிராம சேவையாளர் பிரிவுகளும், வலி.கிழக்கில் 3 கிராம சேவகர் பிரிவுகளுமாக 27 கிராம சேவகர் பிரிவுகள் யாழ்.குடாநாட்டில் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இதனால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர முடியாமல் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் யாழ்.படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க சில தினங்களுக்கு முன்னர், விமானத்தள விஸ்தரிப்புக்காகவும், துறைமுக விஸ்தரிப்புக்காகவும் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன என்றும் அதற்கு நட்டஈடுகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தை யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஆதரிப்பது போன்று தெரிவித்திருந்தார்.

மக்கள் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவுக்கு என்ன உரிமை இருக்கிறது? விமானத் தள, துறைமுக விஸ்தரிப்பு சிவில் நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டது. இதில் ஏன் இராணுவத் தளபதி மூக்கை நுழைத்துள்ளார்? இதிலிருந்தே தெரிகிறது இங்கு இராணுவக் காட்டுத் தர்பார் ஆட்சிதான் நடக்கிறது என்று.

மக்கள் தமது வாழ்விடங்களுக்குத் திரும்ப முடியாதவாறு அவர்களின் வீடுகள் அழிக்கப்படுகின்றன. நிரந்தரப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன.

**நீதிமன்றத் தீர்ப்பை மீறுகிறது அரசு**

2003ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் எங்களால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் 2006ஆம் ஆண்டு இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் கண்ணிவெடி படிப்படியாக அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போது மேற்படி பிரதேசங்களில் பூரணமாகக் கண்ணிவெடிகள் அகற்றி முடிக்கப்பட்டும் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

இதன்மூலம் நீதிமன்றத் தீர்ப்பை இந்த அரசு மீறுகின்றது. நீதிமன்றத் தீர்ப்பிலேயே இந்த அரசுக்கு நம்பிக்கையில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இராணுவம் படிப்படியாக குறைக்கப்படுவதாக இராணுவத் தளபதி சொல்கிறார். ஆனால் யாழ்.நகரின் மத்தியில் சிங்கள மகாவித்தியாலயம் இருந்த இடத்தில் புதிய படை முகாம் திறக்கப்படுகிறது.

இராணுவத்தினர் இன்னமும் தனியார் வீடுகளிலும், கட்டடங்களிலும் நிலைகொண்டுள்ளனர். இது தொடர்பிலோ அல்லது மக்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்பது தொடர்பிலோ ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் ஏதாவது தெரிவிக்கப்பட்டதா? இங்குள்ள அமைச்சராவது இது தொடர்பில் ஏதும் கேள்வி எழுப்பினாரா?

**சிறப்புரிமை மீறப்படுகிறது**

இங்குள்ள படைத் தளபதி அரசிடம் சம்பளம் பெறும் அரச அதிகாரி என்பதை மறந்து அரசியல் செய்கிறார். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதுடன், ஒருவருக்கு எவ்வாறு மரியாதை கொடுப்பதென்றே அவருக்குத் தெரியாது.

தென்பகுதியில் மத்தள என்ற இடத்தில் விமான நிலையம் அமைக்க முற்பட்டு, அதற்கு அந்தப் பகுதி விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அது வேறிடத்துக்கு மாற்றப்பட்டது. ஆனால் இங்கு இராணுவம் தான் நினைத்த மாதிரி விமான நிலைய விஸ்தரிப்புக்காகக் காணி சுவீகரிப்பதாகச் சொல்கிறது.

மக்களுடன் கலந்துரையாட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட வேண்டும். பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதாயின் கடற்பக்கமாக, மக்களின் காணிகள் இல்லாத பக்கமாக விஸ்தரிக்க முடியும். அதேபோன்று காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக் கடல் பரவைக் கடல். ஆழம் குறைந்த பகுதி. அந்தப் பகுதியை நோக்கி விஸ்தரிக்கலாம். இந்த மாற்று ஏற்பாடுகள் குறித்து நாம் ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

இவற்றையெல்லாம் புறந்தள்ளித் தமது எண்ணத்துக்கு இராணுவம் எல்லாம் செய்வதை அனுமதிக்க முடியாது. எனவே வலி.வடக்கு மக்கள் தமது எதிர்ப்பை உண்ணாவிரதப் போராட்டத்தின் ஊடாகக் காட்ட இருக்கின்றனர். இது ஓர் ஜனநாயக அரசாக இருக்குமாக இருந்தால் மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கும். மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை என்றால் ஜனநாயக மற்ற அரசாகும்-என்றனர்.

(த-5)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஐ.நா. சபை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவான விளக்க அறிக்கை ஒன்றையும் அவர் வழங்கியிருக்கிறார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரையொட்டி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு தனது வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ள நவநீதம்பிள்ளை, சட்டம், ஒழுங்கு, நீதி நிர்வாகம், கொலைகள் மற்றும் காணாமல் போனமை தொடர்பான விசாரணைகள், தடுத்துவைப்பு தொடர்பான கொள்கைகள், உள்ளக இடம்பெயர்வு, காணி, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், இராணுவ மயமாக்கல் குறைப்பு, நல்லிணக்கம் என்ற விடயங்கள் குறித்துத் தனித்தனியாகச் சுட்டிக்காட்டித் தனது விளக்கத்தை அளித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் இலங்கை வந்த ஐ.நா. நிபுணர் குழுவால் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், நாற்பது ஆண்டுகளாக நிலவிவரும் இனமுரண்பாட்டுக்கு நீதி வழங்க உண்மையான விசாரணைப் பொறிமுறை ஒன்றை இலங்கை அரசு விரைவில் ஏற்படுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

19 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் இலங்கை நிலைவரம் குறித்து விளக்கியிருப்பதுமட்டுமன்றி, இவை தொடர்பில் தனது பரிந்துரைகளையும் அவர் முன்வைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

**இலங்கை அரசுக்கு தரும் பரிந்துரைகள்**

★மாற்றமுறும் நீதிக்கான அணுகுமுறைக்கு மிகவும் ஆக்கபூர்வமான இணைப்புப் பகுதியாக உண்மையைக் கண்டறியும் ஒரு பொறிமுறையை ஸ்தாபித்தல்.

★சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இலங்கையில் நிலுவையில் உள்ள சம்பந்தப்பட்ட வழக்குகளை மீளாய்வு செய்வதற்கு பாரதூர மற்றும் மரபணு மூலம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தல்.

★சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகப் பொருத்தமான சட்டங்களை வரைதல், தகவல்களுக்கான உரிமை, காணாமல் போனவர்களுக்கான சட்டங்களைத் தீவிரப்படுத்துதல், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரச் செயல்கள், மனிதாபிமானமற்ற தரமற்ற சிகிச்சைகள் அல்லது தண்டனைகள் போன்றவற்றுக்கு சர்வதேச நியதிகளுக்கு அமைவாக நடத்தல்.

★தேசிய நிறுவகங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதலும், வலுவூட்டுதலும்.

★சர்வதேச நியமங்களுக்கு அமைவாக தேசிய திருத்தக் கொள்கையை அபிவிருத்தி செய்தல்.

★விசேடமாக மனித உரிமைகள் ஆணையகத்தின் 19/2 ஆம் சரத்துக்கு அமைவாக விசேட தகுதிவாய்ந்தவர்களை நாட்டுப் பயணத்துக்கு அனுமதித்தல்.

★கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த, தேசிய ரீதியில் திட்டமொன்றை செயற்படுத்துவதற்குப் பகிரங்க மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் அதன் நோக்கங்களை விஸ்தரிப்பதும் கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் மீளாய்வு செய்தல்.

★காணாமல் போனவர்கள் பற்றிய புலன் விசாரணைகளைத் துரிதப்படுத்த ஆணைக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறு ஒரு விசேட ஆணையாளரை நியமித்தல்.

★ இராணுவ நீதிமன்றங்களினதும் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தினரின் மீதான விசாரணைகளும் பகிரங்கப்படுத்தப்படுவதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நடப்பதும்.

★2006 ஆம் ஆண்டின் ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையைப் பிரசுரிப்பதன் மூலம் அங்கு சேகரிக்கப்பட்ட சாட்சியங்களை சர்வதேச நியமங்களுக்கேற்ப மதிப்பீடு செய்து நிலுவையிலுள்ள வழக்குகளைத் தீர்த்தல்.

★சிறுபான்மை சமூகத்தினரைத் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளில் முற்றாக ஈடுபடுத்துவதற்காக இராணுவத் தலையீடு மற்றும் அதிகாரப் பிரயோகம் ஆகியவற்றைத் தளர்த்தல்.

★நல்லிணக்க நடவடிக்கைகளில் சிவில் சமூகத்தினரையும் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளையும் ஈடுபடுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துக்கு மேலும் வலுவூட்டல்.

★இலங்கையிலுள்ள முன்னணி சமூகத் தலைவர்கள் உட்பட ஏனைய பங்களிப்பாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் காட்டப்பட்ட கரிசனையைப்பற்றி விதந்துரைத்த கருத்துகள் தொடர்ந்தும் விவாதங்களையும் கருத்துக்கணிப்புகளையும் முன்னெடுக்க வாய்ப்பளிக்கும். எனினும் இந்தக் கட்டத்தில் அதன் எல்லை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உந்துதலுக்கு அமைவாக ஆணையகம் தனது கரிசனையை தொடர்ந்தும் கொண்டுசெல்லவேண்டும். இது தொடர்பில் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானம் மீறப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் பற்றி சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அதன்மூலம் உள்நாட்டு விசாரணைகளை வழிநடத்த முடியும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிரணிகளின் கூட்டணி வெற்றிக்கு முன்னிலைப்படுத்த வேண்டியவை

ஆட்சியில் உள்ள இப்போதைய அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டு அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலோ, அவர்களுக்குரிய ஜனநாயக உரிமைகளை முழு அளவில் வழங்குவதிலோ பற்றுறுதியுடன் செயற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

அதனை முன்வைத்து, கருவாக்கி எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு அணி ஒன்று மூன்று நாள்களுக்கு முன்னர் தலைநகர் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கூடவே 'போராட்டத்தின் ஆரம்பம்' என்ற தொனிப்பொருளில் பொது உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், தேசிய உடன்பாடு, சட்டத்தின் சமத்துவம், சமூக நியாயம், பரந்த சர்வதேச நோக்கு, ஊழல் மோசடிகள் அற்ற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மக்கள் நலன் நாடிய விடயங்களுக்கு இணக்கப்பாடு தெரிவித்து அவற்றை உறுதிசெய்வதற்காகப் போராட இந்த அணியின் தலைவர்கள் அனைவரும் சங்கற்பம் செய்து கொண்டனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் முன்னணி, மௌபிம ஜனதா பெரமுன, ருஹுணு மக்கள் கட்சி ஆகியவையும் சுதந்திரத்துக்கான மேடை என்ற ஜனநாயக அமைப்பும் இந்த அணியில் இணைந்துகொண்டுள்ளன.

பதவியில் உள்ள பலம் வாய்ந்த இன்றைய அரசுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. வினால் தனித்து நின்று போராட முடியாது. அதற்குள்ளேயே அடிக்கடி குத்து வெட்டுகளும், பெரும் தலைகள் தனித்தோடும் தன்மையும் தென்படுகின்றன. கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து நடத்திய அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் எல்லாமே தோல்வி அடைந்துவிட்டன. கட்சிக்குள் முரண்பாடுகள் அதிகரித்து கட்சி பலவீனம் அடைந்துவிட்டது. இனிவரப்போகும் தேர்தல்களிலும் கட்சியினால் வெற்றிகளை ஈட்ட முடியாத நிலையிலேயே எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு அணி உருவாக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கலந்துகொண்டார். ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திடவில்லை. தலைவர் சம்பந்தன் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய பின்பு முடிவெடுக்கப்படும். கூட்டமைப்பு இணைவது குறித்துக் கூட்டமைப்பின் செயற்குழு கூடி முடிவெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்குநாடுகள் குறிப்பாக அமெரிக்கா இலங்கையின் பிரச்சினைகளுக்கு ஆட்சி மாற்றமே ஒரே தீர்வு என்கிறது. ஆனால் அரசு தேர்தலை நடத்தாது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சியை நீடிப்பதற்குத் தயாராவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் வென்றாலும் தற்போதுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசினால் பெற முடியாது. சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தக்கவைக்க முடியும் என அரசியல் நோக்கர்கள் மதிப்பிடுகிறார்கள்.

ஆகவே இந்த அரசு 2015 ஆம் ஆண்டுடன் பதவி இழந்து வீட்டுக்குச் சென்றுவிடும் என்றும் எதிர்பார்க்க முடியாது. விலைவாசி உயர்வுகளுக்கு மத்தியிலும் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிகளை ஈட்டி வருகிறது.

ஐ.நா. தீர்மானங்களையோ வெளிநாடுகளின் அழுத்தங்களையோ பெரிதாகக் கொள்வதும் இல்லை; கவனத்தில் கொள்வதாகவும் புலப்படவில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்திலும் இதயசுத்தியுடனும், ஆர்வத்துடனும், அக்கறையுடனும் செயற்படுவதாகவும் இல்லை.

ஐ.தே.க. தலைமையிலான எதிர்ப்பு அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளில் ஐ.தே.கவுக்கு அடுத்த நிலையில் உள்ள பெரிய கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. கூட்டமைப்பு அரசின் மீது நம்பிக்கை இழந்துவிட்டது. அதற்கான தந்திரம் மிகுந்த திசையிலேயே அரசு தரப்புத் தனது காய்களை நகர்த்தி வருகிறது. உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் மூலமும் இந்த அரசைப் பணியவைக்க முடியாது என்பதும் நிஜமாகிவிட்டது. மஹிந்த அரசு பதவிக்கு வந்த பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய சாத்வீகப் போராட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டன என்றே கூறவேண்டும்.

இத்தகைய நிலையிலேயே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு அணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பங்குபற்றியுள்ளார் எனக் கருதலாம்.

இந்த அணி இயலாமையின் வெளிப்பாடாகவே இருப்பினும் இலங்கையின் சமகால வரலாற்றில் ஒரு வேறுபட்ட செயற்பாடு எனலாம். ஆனால் இவர்களால் டுனீசியாவிலோ, எகிப்திலோ, லிபியாவிலோ ஏற்பட்டது போன்ற மக்கள் கிளர்ச்சி ஒன்றை இங்கு ஏற்படுத்துவது மிகக்கடினம். 1979இல் ஈரானில் மன்னர் ஷாவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த மாபெரும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்ற வடிவிலும் நடத்த முடியாது.

இலங்கையின் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் எல்லாம் பெரும்பாலும் நகரங்களிலேயே நடத்தப்படுகின்றன. அரசுக்கு பெரும் வாக்குவங்கிகளைக் கொண்டுள்ள கிராமப்புறங்களைச் சென்றடைவதில்லை. தென்னிலங்கையின் கிராமப்புற மக்களை தன்னோடு அருகில் வைத்திருக்கக் கூடிய செயற்பாட்டு உத்திகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் போக்கை இன்றைய அரசு கடந்த பதினொரு வருடங்களாகத் தக்க வைத்துக்கொண்டுவருகிறது. அதுவே அதன் சாதகப் புள்ளியாக (plus point) தொடர்கின்றது. தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிபெறும் இரகசியம் இதுவே என்று கொள்வது தப்பன்று.

ஆகையால் எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய எதிர்ப்பு அணி அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையே நடத்தப்போகின்றதென்றால் அதனால் பயனில்லை. ஆர்ப்பாட்டங்கள் மூலம் அரசை வீட்டுக்கு அனுப்ப முடியாது.

ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இரண்டு அஸ்திரங்கள் உள்ளன. போர்க்குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் என்பனவே அவை.

தென்னிலங்கையின் எதிர்க்கட்சிகள், எதிரணியாகக் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகள், 'போராட்டத்தின் ஆரம்பம்' கூட்டணிக் கட்சிகள் மற்றும் அமைப்புகள் அனைத்துலகத்தை ஈர்த்துள்ள போர்க்குற்றச்சாட்டுக்கள், தமிழ் மக்கள் மீதான அப்பட்டமான மனித உரிமை மீறல்களை முன்னிலைப்படுத்த முன்வரவேண்டும்.

அதற்கு அவை மனதாரத் தயாரா என்பதிலேயே அதன் மக்கள் சக்தி பலமுறும் என்பதனை உள்வாங்க வேண்டும். முன்வருவார்களா? முனைவார்களா? அல்லது முகங்களைச் சுழிப்பார்களா?

# யாழ்.வலயத்துக்குள் அனுமதி கிடைக்கவில்லை

## வன்னி வலயத்தில் இருந்து இடமாற்றலாகிய ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.14

வன்னி வலயப் பாடசாலைகளில் பணியாற்றி இடமாற்றக் கடிதத்தின் அடிப்படையில் யாழ். வலயத்தினுள் அனுமதிக்கப்படவில்லை. அவர்களை வலிகாமம் வலயத்துக்கு செல்லுமாறு கூறப்பட்டுள்ளது.

அதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் யாழ். வலயப் பாடசாலைகளில் அனுமதிதர நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அதிகாரி ரி.கனகராஜ் இதனை உறுதிப் படுத்தியுள்ளார்.

**இந்த வருட ஆசிரிய இடமாற்றத்தின் அடிப்படையில் கடந்த முதலாம் திகதி வடமாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் யாழ். வலயக் கல்விப் பணிமனையில் பணியாற்றுமாறு கூறப்பட்டது.**

இடமாற்ற விண்ணப்பத்திலும் யாழ்.வலயத்துக்கே இடமாற்றம் கோரியிருந்தோம்.

யாழ். வலயக் கல்விப் பணிமனையில் பாடசாலை அனுமதி பெறச்சென்ற போது யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதி தர மறுத்துவிட்டார்.

2007/20 தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின்படி 3.4 III இன் பிரகாரம் கஷ்ட, அதி கஷ்டப் பிரதேச சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் தாம் விரும்பிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**எனவே தமக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையின் கீழ் உள்ள பாடசாலைகளில் பணியாற்ற நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.**

இது தொடர்பாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் உதயகுமாருடன் தொடர்பு கொண்ட போது,

மாகாணக் கல்வித் திணைக்கள அறிவுறுத்தலின் படியே யாழ். வலயத்தில் அவர்களுக்கு அனுமதி வழங்காது வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுமாறு கூறப்பட்டது.- என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜாவுடன் தொடர்பு கொண்ட போது ,

யாழ். வலயத்தில் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் இல்லை. வலிகாமம் வலயத்தில் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. எனவேதான் 31 **ஆசிரியர்களையும் வலிகாமம் வலயத்துக்கு இடமாற்றம் செய்துள்ளோம்.-என்றார்.**

(ம-4)

# விஞ்ஞானம், கணித பாடத்துறைகளின் பெறுபேறுகள் இம்முறை வீழ்ச்சி

### கல்வி அமைச்சர் பந்துல கவலை

கொழும்பு,பெப்.14

2012 உயர்தரப் பரீட்சைகளை அடுத்து வெளியாகியுள்ள பெறுபேறுகளுக்கு அமைய விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்துறைகளில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகள் கீழிறங்கியுள் ளனவென்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கவலை வெளியிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்துறைகளில் இந்த முறை பரீட்சையில் சித்தியடைந்திருப்போர், ஒட்டு மொத்த பரீட்சார்த்திகளுள் நூற்றுக்கு 40 வீதமானோர் மாத்திரமே.

அதற்குக் காரணம் பாடத் திட்டத்துக்கு அப்பால் வினாக்கள் வினாத்தாள்களில் உள்ளடங்கியிருப்பதே என்பது தெரிகிறது எனவும் அமைச்சர் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலத்தில் உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கப்படும் போது, விசேட பரிந்துரைக்கு அமைவாக மாத்திரம் வினாக்களைத் தயாரிக்குமாறு கல்வி அமைச்சு பரீட்சைகள் திணைக்களத்துக்கு பணிப்புரை வழங்கியுள்ளது எனவும் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# மத்தியகல்லூரி தமிழ்ச் சங்க முத்தமிழ் விழா

யாழ்.மத்திய கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம-13)

# அரசுக்கு எதிராக வருட இறுதியில் நாடு முழுவதும் போராட்டம்

## ஐ.தே.க. அறிவித்தது

கொழும்பு,பெப்.14

அரசுக்கு எதிராகக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க இவ்வருட இறுதியில் நாடு முழுவதும் மாபெரும் போராட்டங்களை முன்னெடுக்க பொது எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன என அதில் அங்கம் வகிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

தமது திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வியூகங்களை வகுப்பதற்காகப் பொது எதிரணிக் கூட்டுக்குள் விசேட பிரிவொன்று உருவாக்கப் படவுள்ளது. இது தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அந்தக்கட்சி தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஐ.தே.க. பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகளில் 8 எதிர்க்கட்சிகள் கடந்த திங்கட்கிழமை புரிந்துணர்வு உடன்படிக்கையில் உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்திட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய சோஷலிஸக் கட்சி, புதிய சிஹல உறுமய ஆகிய மூன்று கட்சிகளும் வெகு விரைவில் குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளன.

பொது எதிர்க்கட்சியின் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுப்பதற்காக கூட்டணிக்குள் புதிய விசேட பிரிவு ஒன்றை உருவாக்கவுள்ளோம்.

நாட்டில் இடம்பெற்று வரும் பிரச்சினைகள், அரசின் அராஜக நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டு மக்களை விழிப்புணர்வு செய்யும் நடவடிக்கைகளை இந்தக் குழுவின் ஊடாக முதலாவதாக ஆரம்பிக்கவுள்ளோம். இதையடுத்து இந்த வருட இறுதியில் நாடு தழுவிய மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இது தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ள பொது எதிர்க்கட்சித் தலைவர்களின் ஊடக சந்திப்பின்போது அறிவிக்கப்படும்.

இந்தப் பொது எதிரணிக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு ஜே.வி.பி. உள்ளிட்ட கட்சி மற்றும் சிவில் அமைப்புகளுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம்.

### மாகாணசபைத் தேர்தலுக்கு ஐ.தே.க. தயார்

மத்திய, வடமேல் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்தத் தேர்தல்களுக்கு முகங்கொடுக்க நாம் தயாராக உள்ளோம். இதன்படி அடுத்த மாதம் 2ஆம், 3 ஆம் திகதிகளில் கண்டி, மாத்தளை மாவட்டங்களிலும் 16ஆம் திகதி குருநாகல் மாவட்டத்திலும் வீட்டுக்கு வீடு சென்று மக்களை விழிப்புணர்வு செய்யும் நிகழ்வை ஆரம்பிக்கவுள்ளோம். அதுமட்டுமல்லாது, இந்த மாதம் 16 ஆம் திகதி கண்டி-குண்டசாலை நகரங்களிலும் இந்த வேலைத் திட்டத்தை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். இங்கு 9 ஆயிரம் அங்கத்தவர்களைக் கட்சியில் இணைத்துக் கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

அதேவேளை, இந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்துள்ள 300பேருக்கும் எதிர்வரும் 20ஆம் திகதி கட்சித் தலைமையகத்தில் நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

### மாற்று ஐ.தே.கட்சி இல்லை ஐ.தே.கட்சி மட்டும்தான்

ஐ.தே.கட்சியில் மாற்று ஐ.தே. கட்சி ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறதே என இந்தச் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்:-

ஐ.தே.கட்சி என்று ஒரு கட்சிதான் இருக்கிறது. அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி, அதனுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள்தான் இவ்வாறு கருத்துகளைத் தெரிவிப்பர்.

கட்சிக்கு எதிராக செயற்படும் கட்சி அங்கத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் .- என்றார் திஸ்ஸ எம்.பி.

## கடித்த பாம்பை பிடித்த பெண்

கையில் கடித்த பாம்பை மறுகையால் பிடித்து போத்தலில் அடைத்தார் குடும்பப் பெண்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பூநகரி வெட்டுக்காடு, பரமன்கிராயில் இடம்பெற்றது. நீண்ட நாள்களாகக் குவிக்கப்பட்டிருந்த குப்பையை டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் குப்பைக்குள் மறைந்திருந்த விஷப்பாம்பு கையில் கடித்தது.

பாம்பு கடித்ததை உணர்ந்த பெண் குப்பையை நீக்கி மறைந்திருந்த பாம்பை மற்றக் கையால் பிடித்து போத்தலுள் போட்டு அடைத்துள்ளார்.

கடித்த பாம்புடன் பூநகரி வைத்தியசாலைக்கு சென்ற நவஜீவன் சந்திரகலா (வயது 34) என்னும் பெண் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## மலைப் பாம்பை பிடித்து வைத்திருந்தவருக்கு தண்டம்

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் மலைப்பாம்பு ஒன்றைப் பிடித்து வைத்திருந்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் மலைப்பாம்பு ஒன்றைப் பிடித்தமை, அதனை 6 அடி நீளமான கயிறு ஒன்றால் கட்டித் தொங்கவிட்டமை போன்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

நீதிவான் எம்.ஐ.வகாத்தீன் விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ம-6)

# போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மாணவர்கள்

அக்கராயன்,பெப்.14

கிளிநொச்சி கல்வி வலய மாணவர்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் சீராக இன்மையால் பெரும்பாலான மாணவர்கள் கிட்டத்தட்ட 5 கிலோ மீற்றர் தூரம் வரையில் நடந்தே பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி, பளை, பூநகரி பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பகுதியில் மீள்குடியமர்வு இடம்பெற்று 3 ஆண்டுகள் கடந்துள்ள போதும் போக்குவரத்து சீராகவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டாவது குறைந்தது 5 பஸ்களையாவது இந்தப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டம் ஒன்றில், இந்தியன் பஸ்களை இந்தப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அது பேச்சளவில் உள்ளது என்று கூறப்பட்டது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் அக்கறை காட்டுவார்களா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-18)

# வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் அறிவோர் நிகழ்ச்சி ஞாயிறு

வவுனியா, பெப்.14

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ''கேள்வியால் ஒரு வேள்வி'' என்னும் அறிவோர் நிகழ்ச்சி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மங்கல விளக்கைத் தொழிலதிபர் வேலாயுதன் சுரேந்திரன், திருமதி சுரேந்திரன் வசந்தமலர் தம்பதியர் ஏற்றிவைப்பர்.

தமிழ் வாழ்த்தை வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய இசையாசிரியை திருமதி விமலநாதசர்மா உமாமகேஸ்வரி நிகழ்த்துவார். தொடக்கவுரையை வவுனியா மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சன் சறோஜினிதேவி நிகழ்த்துவார். தொடர்ந்து இடம்பெறும் கௌரவிப்பு நிகழ்வில் தமது துறைகள் ஊடாகத் சமூகப் பணிகளாற்றித் தேசிய விருதுகள் பெற்ற தேசமான்ய அரிமா கந்தசாமி சிவபாலன், தேசபந்து மயில்வாகனம் சிவபாதசுந்தரம் ஆகியோர் தமிழ்ச்சங்கத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அடுத்து வவுனியா மாவட்டத்தில் யதார்த்தத்தில் உள்ள பிரச்சினைகள் பற்றி அந்தந்தத் துறை சார்ந்த வல்லுநர்கள் ஒன்பது பேரிடம் விடுக்கப்படும் வினாக்களும் வழங்கப்படும் பதில்களுமான ''கேள்வியால் ஒரு வேள்வி'' நிகழ்ச்சியில் இலக்கியம் சார்பாக வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ்த்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் கி.உதயகுமாரும், மருத்துவம் சார்பாக வவுனியா பொது வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி புவனேந்திரநாதன் ஆதவனும், நகரக் கட்டுமானம் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனத் திட்டப் பணிப்பாளர் ந. ஸ்ரீஸ்கந்தராசாவும், சட்டம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கந்தசாமி தயாபரனும், சமூக நலம் தொடர்பாக வவுனியா மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் செ. ஸ்ரீநிவாசனும், இசை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர் ந.பரந்தாமனும், சமயங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ நா. பிரபாகரக் குருக்கள், வவுனியா மறை உரைஞர் முதல்வர் அருட்பணி ஸ்ரனி அன்ரனி அடிகளார், வவுனியா, பட்டாணிச்சூர் ஜும்மா பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர் மௌலவி செ.அப்துல் சமட் ஆகியோரும் வினாக்களுக்குப் பதில் வழங்கவுள்ளனர். (ம-400-402)

## பாடசாலையை தரம் உயர்த்துமாறு பழைய மாணவர்கள் கோரிக்கை

அக்கராயன்,பெப்.14

அக்கராயன் மகாவித்தியாலயத்தைத் தரம் உயர்த்துமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதம் பழைய மாணவர் சங்கத்தால் கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மு.சந்திரகுமாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் பாடசாலை எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை ஆரம்பித்து 40 வருடங்கள் கடந்த நிலையிலும் க.பொ.த. உயர்தரப்பிரிவில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் கிளிநொச்சியின் மேற்குப் பகுதியில் வாழும் மாணவர்களின் இயல்பான கற்றல் விருப்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

எனவே இந்தப் பாடசாலையை 1ஏபி தரத்துக்கு உயர்த்துவதன் மூலமாக இதனை நிவர்த்தி செய்ய முடியும்.

மேலும் எமது பாடசாலையைச் சூழவுள்ள வன்னேரிக்குளம், அம்பலப்பெருமாள் குளம்,ஸ்கந்தபுரம், கோணாவில்,காந்திக்கிராமம், யூனியன் குளம், கண்ணகைபுரம், மணியங்குளம், முறிகொம்பன், கோட்டைகட்டியகுளம், ஆனைவிழுந்தான்குளம், ஐயனார்புரம், சமாதானபுரம், ஆரோக்கியபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் இதனால் பயனடைவார்கள்.

பாடசாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு பாடசாலை வளர்ச்சிப் போக்கில் போதுமானதாக காணப்படவில்லை. பாடசாலையின் மைதானம், மாணவர் விடுதிகள் அமைத்தல் மற்றும் எதிர்கால தேவை கருதி பாடசாலைக்குத் தேவையான காணியை 20 ஏக்கர்வரை பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுவலுவுடையோர் பேரவை

கிளிநொச்சி,பெப்.14

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுடையோர் அபிவிருத்திப் பேரவையினை அமைப்பதற்கு மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் மாற்று வலுவுடையோரை சமூக மட்டத்தில் வைத்துப் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் கிராம ரீதியாக அமைக்கப்பட்டுள்ள சுய குழுக்களை ஒன்றிணைத்து மேற்குறித்த அமைப்பு உருவாக்கப்படவுள்ளது எனவும் தெரிய வருகின்றது. கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட முதியோர் அபிவிருத்திப் பேரவையின் நிர்வாகத் தெரிவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.மோகனபவன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதேபோன்று மாற்று வலுவுடையோர் அபிவிருத்திப் பேரவையையும் அமைப்பதற்கு மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## சட்டவிரோத விற்பனையாளருக்கு எதிராக வன்னியில் நடவடிக்கை

கிளிநொச்சி,பெப்.14

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சட்டவிரோதமாக கசிப்பு, கள், அரச சாராயம், பியர் போன்ற போதைப் பொருள்களை விற்பனை செய்வோருக்கு எதிரான நடவடிக்கைகள் மும்முரமடைந்துள்ளன.

> கசிப்பு, கள், அரச சாராயம், பியர் போன்ற போதைப் பொருள்களை விற்பனை செய்வோருக்கு எதிரான நடவடிக்கைகள் மும்முரமடைந்துள்ளன.

இந்த மாவட்டங்களுக்கு கடந்த ஜனவரி தொடக்கம் மதுவரி நிலையத்துக்கு புதிதாக பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்றுள்ள றொகான் சஞ்சே ராஜாவின் அதிரடி முயற்சியால் இந்த மாவட்டங்களில் சட்ட விரோத போதைப் பொருள்கள் விற்பனை வெகுவாக குறைவடைந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மதுவரி நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

கடந்த ஜனவரி மாதத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற மதுவரி நிலைய உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் சட்ட விரோதமாக போதைப் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்ட 29 பேர் பிடிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 3 இலட்சம் ரூபாவுக்கு மேல் அபராதம் விதிக்கப்பட்டது என்று மாவட்ட மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர்.

இந்த மாவட்டங்களில் பொதுமக்கள் வழங்கும் இரகசியத் தகவல்களைக் கொண்டு சட்டவிரோத போதைப் பொருள் விற்பனை செய்வோரை கைது செய்து மாவட்டங்களில் இவற்றின் செயற்பாட்டை மட்டுப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# பல இடையூறுகளுக்கு மத்தியில் மன்னார் சிறுவர் பூங்கா திறப்பு

### மன்னார் நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

மன்னார், பெப்.14

மன்னார் நகர சபைக்குச் செந்தமான சிறுவர் பூங்கா புனர் நிர்மாணம் செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலேயே குறித்த சிறுவர் பூங்கா நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நகர சபையின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.



குறித்த சிறுவர் பூங்கா திறப்பு விழாவின் போது அதிகாரிகளுக்கு உரிய முறையில் அழைப்பு விடுக்காத நிலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று வெளியான தகவல்கள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மன்னார் நகர சபைக்குச் செந்தமான சிறுவர் பூங்கா பல்வேறு குறைபாடுகளுடன் காணப்பட்டது. இந்த நிலையில் மன்னார் நகர சபை யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அதி நவீன முறையில் குறித்த சிறுவர் பூங்காவைப் புனரமைப்புச் செய்தது.

சுமார் 15 இலட்சம் ரூபாய் செலவில் குறித்த பூங்கா அதி நவீன விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்திப் புனரமைக்கப்பட்டது.

பணிகள் முடிவடைந்த நிலையில் குறித்த சிறுவர் பூங்கா திறக்கப்பட இருந்த நிலையில் மன்னார் நகர சபை கடந்த 2 வாரங்களுக்கு முன் அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் நேற்று முன்தினம் திறப்பு விழா நிகழ்வை மேற்கொள்ள விடாது பின் தள்ளிப் போடுவதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சகலரும் ஒன்றிணைந்த போதும் மன்னார் நகர சபை செயலாளர் எவ்விதத்திலும் ஆதரவு வழங்கவில்லை. அரச அதிகாரிகளை விருந்தினராக அழைத்த போதும் அவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

ஆனால் மன்னார் நகர சபை தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், நகரசபை பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு முழுமையான ஆதவை வழங்கினர்.

குறித்த சிறுவர் பூங்கா திறப்பு விழாவின் போது அமைக்கப்பட்ட கல்வெட்டில் மன்னார் நகர சபையின் செயலாளரது பெயர் பதிவு செய்யப்படாத நிலையிலே அவர் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டார்.

தற்போது அரசின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச அதிகாரிகள் நிகழ்வுகளில் கலந்து கொள்வதாக இருந்தால் வடமாகாண ஆளுநரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி பெறக் கால தாமதம் ஏற்படும் என்ற காரணத்தால் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்தவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டது.- என்றார். (ம-12)



யாழ்ப்பாணம் குருநகர் ஐந்து மாடி குடியிருப்புப் பகுதியில் வீதியின் மதகு உடைந்து வாகனம் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. கடந்த மூன்று வருடங்களாக இந்த மதகு உடைந்துள்ளதாகவும் இது தொடர்பாக யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி மேரியம்மா பலதடவைகள் சபைக் கூட்டத்தில் பிரஸ்தாபித்த போதும் அது இன்னமும் திருத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறாத நிலையில், இந்தப் பாலம் எப்போது புனரமைக்கப்படும் என்று மாடிக் குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-7)

# கசிப்பு உற்பத்தி நடவடிக்கை தலைதூக்குகிறது குடாநாட்டில்

## மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 14

கடந்த வருடம் கட்டுப்பாட்டில் இருந்த கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் குடாநாட்டில் தலைதூக்குகின்றன என்று மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததால் கடந்த வருடம் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டில் இருந்தன.

அத்துடன் அவற்றையும் மீறி கசிப்பு உற்பத்தி செய்த நபர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டப் பணமும் அறவிடப்பட்டது. உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

எனினும் இந்த வருடம் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட அரசு மதுபான வகைகள் மதுபானசாலைகளில் விற்பனை செய்யப்படுகின்ற போதும் குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய கசிப்பை பெறுவதற்கு மதுப்பிரியர்கள் அலைந்து திரிகின்றனர். இந்த நிலையில் இதன் உற்பத்தியிலும் அதிகரிப்புக் காணப்படுகிறது.

பற்றைக் காடுகளுக்குள் வைத்து கசிப்பை உற்பத்தி செய்துவிட்டு வீடுகளில் வைத்து விற்பனை செய்து வருகிறார்கள். கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களின் அடிப்படையில் இவ்வாறு சட்ட விரோதமாக கசிப்பை உற்பத்தி செய்பவர்கள் இனங்காணப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதனைவிட சட்டவிரோதமாக அரச மதுபானத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள போதும் கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் தொடர்பாக உரிய ஆதாரங்கள் கிடைக்கப் பெறாத காரணத்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தீவகப் பகுதி உட்பட மீள்குடியமர்வு செய்யப்பட்ட இடங்களில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாரிடமும், மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் தெரிவிக்க முடியும்.

கடந்த வருடம் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டதைப் போன்று இந்த வருடமும் முற்று முழுதாகக் கட்டுப்படுத்த பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மதுவரித் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விட அரச சாராயத்தை அனுமதியின்றி வீடுகளில் வைத்து விற்பனை செய்வதோ, 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகை பொருள்களை விற்பனை செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களையும் மக்கள் இரகசியமான முறையில் தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

### பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில்
## நூல் நிலையங்கள் அபிவிருத்திக்கு அங்கத்தவரை இணைக்கும் பணிகள்

வலி. தென்மேற்கு, பெப்.14

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வாசகர்களின் நலன் கருதியும் நூல் நிலையங்களின் அபிவிருத்தி கருதியும் ஆயிரம் அங்கத்தவர்களை இணைக்கும் திட்டத்தை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

தலைவர் பர்னாந்து டொமினிக் அன்ரன் அங்கத்தவர்கள் இணைந்து கொள்வதற்கான கால எல்லையையும் நிர்ணயித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயக்கச்சியில் உள்ள உப அலுவலகத்தில் ஒரு நூல் நிலையமும் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் ஒரு நூல் நிலையமுமாக இரு நூல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த இரு நூல் நிலைங்களிலும் மாணவர்களுக்குத் தேவையான கல்வியுடன் சம்பந்தப்பட்ட சகல புத்தகங்களும் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவர்கள் கணினி அறிவைப் பெறும் வகையில் கணினியும் இன்ரநெற் வசதிகளும் தலைமை அலுவலகத்தில் உள்ள நூல் நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

> மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்குடனும் ஆயிரம் அங்கத் தவர்களை இணைப் பதற்கான ஒழுங்குகளைத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்குடனும் இரு நூல் நிலையங்களையும் அபிவிருத்தி செய்யும் நோக்குடனும் ஆயிரம் அங்கத்தவர்களை இணைப்பதற்கான ஒழுங்குகளைத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

இந்த அங்கத்தவர்கள் அனைவரையும் ஏப்ரல் மாதம் முடிவடைவதற்குள் இணைத்துக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-115)

## வளிமண்டலத் திணைக்களம் செல்வதற்குப் பாதை இல்லை

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ். வளிமண்டலவியல் திணைக்களம் அமைந்துள்ள இடத்துக்குச் சென்று வர பாதை எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இதனால் தேவை கருதி அங்கு செல்ல முற்படுபவர்கள் சிரமமடைகின்றனர்.

யாழ். திருநெல்வேலியில் விவசாயப்பண்ணையை அண்மித்து யாழ். வளிமண்டலவியல் திணைக்களத்துக்கென நிரந்தரமான இடம் உள்ளது. அங்கு கட்டடமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் அங்கு சென்று வருவதற்கெனத் தனியான பாதை நிர்ணயம் செய்யப்படவில்லை. விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான பாதையையே முற்பகல் தொடக்கம் பிற்பகல் வரை வளிமண்டலவியல் திணைக்களத்துக்கும் செல்ல பயன்படுத்த வேண்டியுள்ளது. அதன் பின்னர் பாதை மூடப்பட்டு விடுகிறது. இதனால் தேவை கருதி இந்தத் திணைக்களத்துக்குச் செல்வோர் அலைக்கழிக்கப்படுகின்றனர். எனவே உரிய அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையம் நெடுந்தீவில்

யாழ்ப்பாணம்,பெப்.14

நெடுந்தீவில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனை நிலையம், காட்சி அறை உட்பட உணவு நிலையம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபையால் துறைமுகப் பகுதியில் அமைக்கப்படவுள்ள இந்த நிலையத்துக்கென மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி 4.9 மில்லியன் ரூபா வரை நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

நெடுந்தீவுக்கு வரும் உல்லாசப் பயணிகள் தமக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்வதில் தற்போது சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அதைத் தொடர்ந்து பிரதேச சபை எடுத்த முயற்சியின் காரணமாக இந்த நிலையம் அமைக்கப்படுகின்றது என்று கூறப்பட்டது. (ம-7)

## உடுவில் பிரதேச வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்துங்கள்

### பிரதேச சபைத் தலைவருக்கு மனு

வலி. வடக்கு, பெப். 14

உடுவில் பிரதேச சபைக்கு உட்பட பல வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்படாமல் உள்ளன.

குறித்த வீதிகளுக்குப் பெயர்ப்பலகைகளைப் பொருத்த பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுன்னாகம் நகர மத்தி சிவில் பாதுகாப்புக் குழுவால் பிரதேச சபைத் தலைவரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் நகரப் பகுதியை அண்டிக் காணப்படும் முக்கிய வீதிகளாகப் பிரதேச சபையின் ஆதனத்தில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள இராமநாதன் வீதி, குமாரசாமி புலவர் வீதி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, முகாந்திர நாராயணர் வீதி, முத்துக் கிருஷ்ணர் வீதி என்பவற்றுக்கே பெயர்ப் பலகைகள் பெருத்தப்படாமல் உள்ளன.

இதனால் வெளி இடங்களில் இருந்து வருபவர்கள் உரிய வீதிகளை அடையாளம் காண்பதில் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## குடிதண்ணீரைப்பெற வசதி செய்வார்களா?

### வரணி வடக்கு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.14

வரணி வடக்குப் பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமா என்று இந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ். தென்மராட்சி வேம்பிராய்ப் பிரதேசத்தில் இருந்து வரணி மகா வித்தியாலய பிரதேசம்வரை குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

இந்தத் திட்டத்தை மேலும் நீடித்து வரணி வடக்குப் பிரதேச மக்களின் குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யுமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

வரணி வடக்கு பிரதேச மக்கள் தமது குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்வதற்கு பெரும் சிரமத்தின் மத்தியில் தூர இடங்களில் அமைந்துள்ள கிணறுகளை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

காலை, மாலை என நல்ல தண்ணீருக்கு அலைந்து செல்லும் நிலை இங்கு காணப்படுகிறது.

இதனால் வேம்பிராய்-வரணி நன்னீர்த் திட்டத்தை வரணி வடக்கு பிரதேசத்துக்கும் விஸ்தரித்து பிரதேச மக்களின் குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யுமாறு சாவகச்சேரி பிரதேச சபையிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குடி தண்ணீரைப் பெறுவதற்கு நேரம் ஒதுக்குவதால் தாம் செய்யும் தொழிலில் பாதிப்பு எற்படுகிறது எனவும் இதனால் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய நிலை காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபை இந்த விடயத்தில் கவனம் எடுத்து செயற்படுமாயின் குடிதண்ணீர் பிரச்சினை நீங்கி தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் இந்தப் பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ம)

## ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அடிக்கடி முறுகல் நிலை

### கரவெட்டி பிரதேச சபைக் கூட்டத்தில்

வடமராட்சி,பெப்.14


கரவெட்டி பிரதேசசபைக் கூட்டங்களில் ஆளும் தரப்பு உறுப்பினர்களிடையே கைகலப்பாக மாறும் அளவுக்கு வாய்த்தர்க்கம் அடிக்கடி நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற கரணவாய் செல்வாபுரம் குடிதண்ணீர் விநியோகத்திட்ட திறப்புவிழாவை கரவெட்டி பிரதேசசபை பொறுப்பேற்று நடத்தியிருக்க வேண்டும் என ஆளும்தரப்பு உறுப்பினரான பொ.குகதாஸ் கருத்துக் கூறியபோது, அதற்கு மற்றைய ஆளும் தரப்பு உறுப்பினரான கே.பரஞ்சோதி பதிலளிக்கையிலேயே இருவருக்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சுமார் பத்து நிமிடங்களுக்கு மேலாக நீடித்த இந்த வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறும் நிலையை எட்டிய போது ஏனைய உறுப்பினர்கள் அவர்களின் ஆசனம் வரை சென்று வாய்த்தர்க்கத்தை தடுத்து நிறுத்தினார்கள்.

கூட்டத்துக்கு தலைமை தாங்கிய தலைவர் பொ.வியாகேசு பலமுறை கூறியும் வாய்த்தகத்தில் ஈடுபட்ட இரு உறுப்பினர்களும் கட்டுப்பாட்டுக்குள் வரமுடியாத நிலை ஏற்பட்டபோதே ஏனைய உறுப்பினர்கள் தமது ஆசனங்களை விட்டெழுந்து சென்று வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட இருவரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நேர்ந்தது.

இந்தச் சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே கைகலப்பு, ஒருவரை ஒருவர் தாக்குதல்களை நடத்தக் கூடிய நிலை ஏற்படும் அளவுக்கு அடிக்கடி நிலமை இருக்கும் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக ரசித்தபடி இருப்பார்கள். எனினும் கட்சி சார்ந்த நிலை குறித்து பிரச்சினைகள் எழும்போதெல்லாம் ஆளும்தரப்பினர் ஒன்றுபட்டுச் செயல்படும் நிலையும் இருந்து வருகின்றது. (த-8)



புத்தகாயாவுக்குச் சென்றுள்ள மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித்தை அங்குள்ள புத்த மத துறவி வரவேற்றார்.

# அஸாம் தேர்தலில் வன்முறை துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் சாவு

கோல்பாரா, பெப்.14

அஸாம் கோல்பாரா மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கலவரத்தில் ஈடுபட்ட வர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

கலவரத்தைக் கட்டுப்படுத்த அங்கு இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது. அஸாம் மாநிலம், கோல்பாரா மாவட்டத்தின் ஒரு பகுதியில் ரபா என்ற பழங்குடியினர் வசிக்கின்றனர்.

அவர் கள் தங்கள் பகுதிக்கு தன்னாட்சி தேவை என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதனால் அங்கு நடைபெறும் கிராமத்தவர் தேர்தலுக்கு பழங்குடியின மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

நேற்று முன்தினம் அவர்கள் அரச அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி, கட்டடங்களுக்கு தீ வைக்கும் சம்பவத்தில் ஈடுபட்டனர். தடுக்க முயன்ற மத்திய



துணைப்படைப் பொலிஸார் ஒருவரை கலவரக் கும்பல் கத்தியால் தாக்கி அவர் வைத்திருந்த துப்பாக்கியை பறிக்க முயன்றது.

அதனால் கலவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் 9 பேர் உயிரிழந்தனர். அந்தச்சம்பவத்தையடுத்து கோல்பாராவில் பதற்றம் நிலவியது.

மாவட்ட நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்ததால், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட இராணுவத்தினர் 250 பேர் அனுப்பப்பட்டனர். (வ)

## 5 ஆவது நாளாகவும் காஷ்மீரில் தொடர்கிறது ஊரடங்கு உத்தரவு

ஸ்ரீநகர், பெப்.14

அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட சம்பவத்தையடுத்து, காஷ்மீரில் 5 ஆவது நாளாக நேற்றும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது.

நாடாளுமன்ற தாக்குதல் தீவிரவாதி அப்சல் குரு கடந்த 9 ஆ தூக்கிலிடப்பட்டார். அவர் காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால் அங்கு பதற்றம் நிலவியது. பல இடங்களில் இளைஞர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். அங்கு மாநில பொலிஸார் மத்திய துணைப் படைப் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். முக்கியமான பகுதிகளில் முள்வேலி போடப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

அப்சல் குருவின் சொந்த ஊரான சோபூர் மற்றும் பாராமுல்லா பகுதியில் எதிர்ப்புகள் கிளம்பின. இரு இடங்களிலும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். சட்டம்

**அப்சல் குருவின் சொந்த ஊரான சோபூர் மற்றும் பாராமுல்லா பகுதியில் எதிர்ப்புகள் கிளம்பின.**

ஒழுங்கை காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா மேற்பார்வையிட்டு உயர் அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகிறார். நிலைமை மோசமாகும் என்பதால், தொலைக்காட்சி செய்தி அலைவரிசைகளை ஒளிபரப்ப வேண்டாம் என்று கேபிள் தொலைக்காட்சி இயக்குநர்களுக்கு காஷ்மீர் அரசு உத்தரவிட்டுள்ளது. தொடர்ந்து 5 ஆவது நாளாக நேற்றும் காஷ்மீரில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (வ)

# உலக நாடுகளிடமிருந்து தப்பிக்க மாட்டார் மஹிந்த

## கருணாநிதி நம்பிக்கை

சென்னை, பெப்.14

எவ்வாறான தந்திரங்களைக் கையாண்டாலும் உலக நாடுகளின் கண்டனங்களில் இருந்தும் பாதிப்புக்களில் இருந்தும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தப்பிக்க முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் தமிழர்கள் அதிகமாக வாழும் திருகோணமலை, வவுனியா, மன்னார், அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் பல கோயில்கள் இடிக்கப்பட்டு, அந்த இடங்களில் இந்து கோயில்கள் இருந்தன என்பதற்கான அடையாளங்களே எதுவுமில்லை என்று செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தக் கொடுமைகளுக்ெல்லாம், அடுத்த மாதம்



அமெரிக்கா கொண்டு வரவிருக்கிற தீர்மானத்தின் மூலமாவாவது விடிவு காலம் ஏற்படுமா என்பதுதான் எமது கவலையாகும்.

இலங்கை அரசு தொடர்ந்து செய்துவரும் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் வகையில், இலங்கையில் இந்த ஆண்டு நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள கொமன் வெல்த் மாநாட்டை, வேறொரு நாட்டில் நடத்த வேண்டும் என்று நியூ யோர்க்கில் உள்ள சர்வதேச மனித உரிமை அமைப்பு, கொமன் வெல்த் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

உலக நாடுகளும், உலக அமைப்புகளும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும், இலங்கை அரசின் போர்க் குற்றங்களையும் புரிந்துகொண்டு இலங்கை அரசின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தீர்மானித்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அதைப் புரிந்துகொண்ட இலங்கை அரசு திசை திருப்ப வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என்று இலங்கைப் பாதுகாப்புத்துறை செயலாளரான கோத்தாபய ராஜபக்ஷ கூறியிருப்பது, அதைத் திசை திருப்பும் நோக்கத்துடன் தான். ஜெனீவா நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரத் திட்டமிட்டுள்ள தீர்மானத்தை முனை மழுங்கடிக்கும் முயற்சி.

உலக நாடுகளின் கண்டனத்தில் இருந்து அவை தரும் பாதிப்புக்களில் ராஜபக்ஷ தப்பிவிட முடியாது என்பதே உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் நம்பிக்கையாகும்-என்றுள்ளது. (வ)

## வெடித்துச் சிதறியது விமானம் நூலிழையில் தப்பிய விமானி



ராஜஸ்தானின் பார்மர் மாவட்டத்தில் இருந்து புறப்பட்ட இந்திய விமான படைக்குச் சொந்தமான மிக்-27 விமானம், புறப்பட்ட அடுத்த சில வினாடி களில் வெடித்துச் சிதறியது.

விமானத்தில் இருந்து குதித்த விமானி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். விமானத்தின் உடைந்த பாகங்கள் தரையில் விழுந்து சிதறியதில் பொது மக்கள் இருவருக்கு காயம் ஏற்பட்டது. (வ)

## அப்சலின் சமாதியைப் பார்வையிட அவரது குடும்பத்தினருக்கு அனுமதி

டில்லி, பெப்.14

டில்லி, திகார் சிறையில் உள்ள அப்சல் குரு சமாதியில் அவரது குடும்பத்தினர் பிரார்த்தனை செய்ய விரும்பினால், அதற்கு அனுமதி வழங்கப்படும் என்று மத்திய உள்துறை செயலர் ஆர்.கே. சிங் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தாக்குதல் தீவிரவாதி அப்சல் குரு அண்மையில் தூக்கிலிடப்பட்டு டில்லி திகார் சிறை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார். உடலை குடும்பத்தினரிடம் ஒப்படைக்காதது சர்ச்சையை ஏற்படுத்தியது.

அப்சல் குரு சமாதிக்குச் செல்ல அவரது குடும்பத்தினர் விரும்பினால், அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே கடந்த திங்கட்கிழமை கூறியிருந்தார். இந்தநிலையில் இது குறித்து மத்திய உள்துறைச் செயலாளர் கூறுகையில்,

அப்சல் குரு சமாதியில், அவரது குடும்பத்தினர் பிரார்த்தனை செய்ய விரும்பினால், அதற்கு அனுமதி வழங்கப்படும். அதற்கான திகதி குறித்து சிறை அதிகாரி கள் முடிவு செய்வார்கள் -என்றார்.

இதேவேளை திகார் சிறையில் அப்சல் குருவின் உடலை ஒப்படைக்குமாறு, அவரது குடும்பத்தினர் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

## தீவிரவாதி ஹபீசுடன் காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்

### ஒரேமேடையில் தோன்றியதால் சர்ச்சை




மும்பை தாக்குதல் சம்பவத்தில் முக்கிய நபராகச் செயற்பட்ட லக்ஷர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீதுடன், காஷ்மீர் பிரிவினைவாத தலைவர் யாசின் மாலிக், இஸ் லாமாபாத்தில் ஒரே மேடையில் தோன்றியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

யாசின் மாலிக்கின் கடவுச் சீட்டை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இந்தியர் ஒருவர் பயங்கரவாதி ஒருவரைச் சந்தித்திருந்தால் அது கண்டிக்கத்தக்கது என்று மத்திய வெளியுற வுத்துறை இணையமைச்சர் பிரனீத் கவுர் தெரிவித் துள்ளார்.

யாசின் மாலிக் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ஜ.க வலியுறுத்தியுள்ளது. இதனால் மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (வ)

## கைதிகளின் பயன்பாட்டுக்காக தொலைபேசிக் கூடங்கள்

சென்னை, பெப்.14

புழல் சிறையில் உள்ள கைதிகள் பயன்பாட்டுக்காக 9 பொது தொலைபேசிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைத் தொலைபேசிகள் புழல் சிறைகளில் அதிகமாக மீட்கப்படுவதும், கையடக்கத் தொலைபேசி கடத்தல்களும் இடம்பெற்று வருவதாக சிறைச்சாலை கண்காணிப்பாளர் வி.கருப்பண் தெரிவித்துள்ளார்.

அதனைத்தடுக்கும் நோக்கில் குறித்த தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார். அதன்படி புழல் மத்திய சிறையில் 9 பொதுத் தொலைபேசி கூடங்கள் அமைக்கப்பட வுள்ளன.

பொதுத் தொலைபேசிகளை சிறையில் எந்தப் பகுதியில் அமைப்பது, கைதிகள் தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டிய நேரம், எவ்வளவு நேரம் கதைப்பது, அவர்களது உரையாடலை கட்டுபாட்டு அறையில் பதிவு செய்யும் தொழில்நுட்ப வசதிகள் போன்றவை தொடர்பில் பரிசீலனை மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (வ)

## விண்கற்களால் கைபேசிக்கு ஆபத்து!

நியூயோர்க், பெப்.14

நாளை 15ஆம் திகதி புவியின் வட்டப்பாதைக்கு மிக அருகே வரும் விண்கற்களால் கைத்தொலைபேசிச் சேவைகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். செக்கனுக்கு 8 மைல் வேகத்தில் பயணிக்கும் இந்த விண்கற்கள் தொலைத் தொடர்பு செயற்கைகோள்கள் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் பகுதிக்குள் நுழைய வாய்ப்பு அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது.

அதேசமயம் இந்த விண்கற்களால் பூமிக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## துணைக் கோளுக்கு பெயர் வைக்கும் போட்டி

லண்டன், பெப்.14

புளூட்டோவின் பெயரிடப்படாத இரண்டு துணைக் கோள்களுக்குப் பெயர் வைக்கும் போட்டியை விண்வெளி விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். கிரேக்கம் மற்றும் ரோமானிய புராண பெயர்களாக இவை இருக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் போட்டியில் இணையத்தளம் மூலம் பங்கு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சாதித்தது வடகொரியா

## மூன்றாவது அணு ஆயுத சோதனை வெற்றி






**தற்போது செய்யப்பட்ட சோதனை 10 கிலோ தொன் அணு விளைவுத் திறன் கொண்டதாக இருக்கும் என கணித்துள்ளனர். கடந்த 2 சோதனைகளும் முறையே 1 கிலோ தொன், 4 கிலோ தொன் அணு விளைவுத் திறன் கொண்டவை. இரண்டாம் உலகப் போரில் ஹிரோஷிமா மீது அமெரிக்கா வீசிய அணு குண்டின் அணு விளைவுத் திறன் 15 ஆயிரம் கிலோ ஆகும்.**

பியோங்யாங், பெப்.14

அணு ஆயுத சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது என்று வட கொரியா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

சோதனை கடந்த செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. நீண்ட தூர ஏவுகணைகளில் பொருத்தப்படும் வகையில் சிறிய அளவில் வடிவமைக்கப்பட்ட அணு ஆயுதமே வெடிக்க வைத்துப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது-என்று வட கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவில் குறிப்பிட்ட பகுதியில் அசாதாரண நிலை காணப்படுவதாகவும், வடகொரியா அணு ஆயுத சோதனையை மேற்கொண்டிருக்கலாம் என்றும் சர்வதேச நாடுகள் நேற்றைய தினம் சந்தேகம் வெளியிட்டிருந்தன. அந்தநிலையில் தற்போது வடகொரியா சோதனை நடத்தப்பட்டதை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பூமிக்குக் கீழே நடத்தப்பட்ட இந்தச் சோதனை அமெரிக்காவின் விரோத மனப்பான்மைக்குப் பதிலடி என்று தெரிவித்துள்ள வட கொரியா, ஏற்கனவே 2006, 2009 ஆம் ஆண்டுகளில் இரண்டு அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டிருந்தது.

அணு ஆயுத சோதனையை அடுத்து அந்தப் பகுதியில் 4.6 முதல் 5.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. கடந்த சோதனைகளுடன் ஒப்பிடுகையில் இது அளவில் பெரியது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## ஆத்திரமூட்டும் செயல்- அமெ.




நியூயோர்க், பெப்.14

அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா வடகொரியாவின் அணு ஆயுத சோதனைக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது ஆத்திரமூட்டும் செயல் என்று தெரிவித்துள்ள ஒபாமா வட கொரியாவின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் துரிதமாகவும், பொறுப்புடனும் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

எம்மையும், எமது நட்பு நாடுகளையும் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கும். வட கொரியாவின் இந்தச் செயல், அந்த நாட்டை மேலும் வலிமையானதாக மாற்றாது. வலிமையான, வளமான நாடு என்ற இலக்கில் இருந்து வட கொரியா வெகு தொலைவில் உள்ளது. அந்த நாடு மேலும் தனிமைப்படுத்தப் படுகிறது. தன் மக்களை மேலும் வறுமையுள்ளவர்களாக மாற்றுகிறது என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. (ற)

## ஐ.நா. கண்டனம்



ஜெனிவா, பெப்.14

வடகொரியாவின் அணு ஆயுத சோதனை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. வட கொரியா அணு ஆயுத சோதனை நடத்தியது மிகவும் வருந்தத்தக்கது. இது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மான விதிமுறைகளை மீறும் செயலாகும். இந்தச் சோதனை மூலம் வட கொரியா சர்வதேச சமூகத்துக்கு அறைகூவல் விடுத்துள்ளது - என்று ஐ.நா.சபை குறிப்பிட்டுள்ளது.

வட கொரியாவின் அணு ஆயுத சோதனை குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபையை உடனடியாக கூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடகொரியாவின் அணு ஆயுத சோதனை நடவடிக்கையை அடுத்து உடனடியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## அடுத்த பாப்பாண்டவர் கனடாவைச் சேர்ந்தவர்?

ஜெருசலேம், பெப்.14

பாப்பாண்டவர் இந்த மாதத்துடன் ஓய்வுபெறுவதாக அறிவித்ததை அடுத்து புதிய பாப்பாண்டவரை தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

கனடாவின் றொரொண்ட்டோவைச் சேர்ந்த கார்டினல் தோமஸ், கியுலெக் மாநிலத்தின் கார்டினல்கள் ஜீன் கிளாட் மற்றும் மார்க் ஒயெல்லெட் ஆகியோர் புதிய பாப்பாண்டவரைத் தெரிவு செய்யும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இதன்படி அவர்களில் மிலன் சபையின் தலைமைப் பேராயரான ஆஞ்சலா ஸ்கோலா, வியட்நாமின் தலைமைப் பேராயரான கிறிஸ்டோப் ஸ்கோயென்போர்ன் மற்றும் கியுபெக்கின் தலைமைப் பேராயர் ஆகியோரில் ஒருவர் அடுத்த பாப்பாண்டவராக வரக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஈஸ்டர் பண்டிகைக்கு முன்னர் எதிர்வரும் மார்ச் மாதம் முடிவதற்கு முன்னர் அடுத்த பாப்பாண்டவரைத் தெரிவுசெய்யும் பணிகள் முடிவடையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)



பாப்பாண்டவரின் பதவி விலகல் தற்போது ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. அந்தநிலையில் பாப்பாண்டவரின் அந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரத்திற்குள் வத்திக்கான் அரண்மனையில் உள்ள புனித பீற்றர் தேவாலயக் கோபுரத்தின் மீது சக்தி வாய்ந்த மின்னல் தாக்கியதாக இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் கோபுரத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகவில்லை.

# பேச்சுக்கு நாம் தயார்

## அறிவித்தது சிரிய அரசு

டமாஸ்கஸ், பெப்.14

புரட்சியாளர்களுடன் பேசுவதற்குத் தயார் என்று சிரிய அரசு தெரிவித்துள்ளது. சிரியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை புரட்சியாளர்கள் அண்மைக் காலமாகக் கைப்பற்றி வருகின்றனர். இந்தநிலையிலேயே சிரிய அரசின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுகுறித்து சிரிய வெளியுறவுத்துறை அமைச்சர் அலி ஹைதர் தெரிவிக்கையில்:-

அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுடன் பேச்சுக்களை நடத்தத் தயாராக உள்ளோம். எனினும் பேச்சுக்கள் சிரிய நாட்டில் சிரிய பாதுகாப்புப் படையினரின் மேற்பார்வையில் நடைபெறவேண்டும்- என்று தெரிவித்துள்ளார்.



சிரியத் தலைநகர் டமாஸ்கஸ் அருகே உள்ள விமான நிலையத்தை சிரியப் புரட்சியாளர்கள் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

அரசின் அந்த அறிவிப்பை அடுத்து சிரியாவில் நடைபெற்று வரும் போராட்டம் விரைவில் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிரியாவில் 22 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் போரில் 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## 34,000 அமெ. வீரர்கள் ஆப்கனிலிருந்து வெளியேற்றம்

வோஷிங்டன், பெப்.14

ஆப்கனில் தங்கியுள்ள அமெரிக்கப் படையினரில், 34 ஆயிரம் பேர் அடுத்த ஓராண்டுக்குள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது குறித்த அறிவிப்பை ஜனாதிபதி பராக் ஒபாமா விரைவில் வெளியிடுவார் என்று பென்ரகன் தகவல் வெளியிட்டுள்ளது.

அதையடுத்து தற்போது ஆப்கனில் உள்ள அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை பாதியாகக் குறையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னதாக ஆப்கன் ஜனாதிபதி ஹமித் ஹர்சாய், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோருடன் ஒபாமா கலந்துரையாடுவார் என்று கூறப்படுகிறது. (ற)

## ஒப்பந்தத்தை நிராகரித்த ஒபாமா

நியூயோர்க், பெப்.14

இந்தியாவுடன் மேற்கொண்ட ஒப்பந்தம் போன்று ஹெலிகொப்டர்களைத் தயாரித்துக் கொடுக்க, அமெரிக்காவுடனும் ஒப்பந்தம் செய்ய இத்தாலியின் பின்மெக்கானிக்கா நிறுவனம் தீவிர மாக முயன்றது. எனினும் ஒப்பந்தத் தொகை அதிகம் எனக் கூறி ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் ஒபாமா ஏற்க மறுத்து நிராகரித்து விட்டார் என்றும்,

இந்தத் தகவல் தெரிந்த பிற கும் இந்திய அரசு ஒப்பந்தத்தை மேற்கொண்டது என்றும் பல கோடி ரூபாய் ஊழலுக்கு உடந்தையாக இருந்த சிலர் உரிய தகவல்களை இந்திய அரசுக்கு கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. (ற)

# ஹெலி விற்பனையில் ஊழல்; உரிய நடவழக்கை விரைவில்

## இத்தாலிப் பிரதமர் தெரிவிப்பு

ரோம், பெப்.14

இந்தியாவுக்கு ஹெலிகொப்டர் விற்பனை செய்யப்பட்டதில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படும் குற்றச்சாட்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இத்தாலிப் பிரதமர் மரியோ மான்டி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு ஹெலிகொப்டர் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக ரூபா 1,800 கோடி லஞ்சம் கொடுத்துள்ளார் என்று பின்மெக்கனிக்கா நிறுவனத்தின் தலைவர் கியூசெப் ஓர்சி இத்தாலிப் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரதமர் மரியோ மான்டி:-

பின்மெக்கனிக்கா நிறுவனத்தை ஒழுங்குபடுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். அதன் நிர்வாகத்தில் தான் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பிரச்சினையை விரைவில் தீர்ப்போம்- என்றார்.

இத்தாலியில் பியட் நிறுவனத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய தொழில் நிறுவனம் பின்மெக்கனிக்கா. இந்த நிறுவனத்தில் அந்த நாட்டு அரசு 30 சதவீதப் பங்குகளை வைத்துள்ளது. நிறுவனத்தின் தலைவர் கைதைத் தொடர்ந்து நிறுவனத்தின் பங்குகள் சடுதியாகச் சரிந்து வருகின்றன.

இதேவேளை, இது தொடர்பாகத் தமக்கு அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த விடயம் குறித்துத் தனியாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் எம்.கே. அந்தோனி தெரிவித்துள்ளார். (ற)

# அறுபதாம் அகவை நிறைவில் பிறந்தநாள் வாழ்த்து

கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆங்கில ஆசிரியராகவும் பாட இணைப்பாளராகவும்
இக் கல்லூரியில் இருந்து 22 வருட சேவை நிறைவில் ஓய்வுபெறும்

## திருமதி சர்வானந்தஈஸ்வரி ஜெயலிங்கம் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு – 14.02.2013

### நல்லாசிகள்

திருமதி சர்வானந்த ஈஸ்வரி ஜெயலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருபத்தொரு வருடங்கள் ஆங்கில ஆசிரியராகவும், பாட இணைப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெறுகிறார். ஓய்வுபெறும் அவர் சகல செல்வங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானுடைய திருவருளை வேண்டி நல்லாசிகள் கூறுகின்றேன்.

- பிரதமகுரு சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள், புதுக்கோயில், கொக்குவில்.

### நடத்தையால் கற்றுத்தந்தவர்

கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆங்கிலத்துறை வளர்ச்சிக்கு முழுமையான வலுவூட்டல் காரணியாகத் திகழ்ந்த திருமதி ச.ஜெயலிங்கம் அவர்கள் தமது அறுபதாவது அகவையினுள் பிரவேசிப்பதையிட்டு இந்நாளில் அவரது 22வருட கல்விச் சேவையை நினைவுகூர்ந்து வாழ்த்துவதிலே பெருமகிழ்ச்சியடைகின்றேன். அன்பு, அடக்கம், பொறுமை, அறிவுப்புலமை மரியாதையுடன் வயது வேறுபாடின்றி நடந்து கொள்ளும் உயரிய பண்பு ஆகியன இக்கல்லூரிச் சேவைக்காலத்தில் எம்மால் அவர் மூலம் நாம் கற்றுக்கொண்ட பாடங்களாகும். ஆங்கில பாட இணைப்பாளராக இருந்து ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையின் மத்தியில் முழுமையையும் பொறுப்பேற்று இல்லை என்ற குறை எழாத வகையில் உயிரோட்டத்துடன் உழைத்த ஆசிரியை ஓய்வுக் காலத்தில் தமது குடும்பத்தில் மங்கள நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளமையால் என்றும் மகிழ்வும் குடும்ப சுகநலமும் சித்திக்க எல்லாம் வல்ல கிருபாகர சுவாமிகளைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்

அதிபர், வே.ஞானகாந்தன்.

### "ஆங்கில பாடத்துறையில் கலங்கரை விளக்கு"

கொக்குவில் இந்துக்கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் ஆங்கில பாடத்துறையின் தலைவரும் செயற்றிறன் மிக்க ஆசிரியருமான திருமதி ச.ஜெயலிங்கம் அவர்கள் 14.02.2013 இல் ஓய்வு பெறுகின்றார். எனது கல்லூரிக் காலத்தில் இதயத்தை கவர்ந்த ஆசிரியர்களுள் திருமதி ச.ஜெயலிங்கமும் ஒருவராவார். அவரின் அமைதியான சுபாவம், அறிவு, செயற்பாட்டு ரீதியான திறன்கள், வகுப்பறை கற்பித்தலும் முகாமையும் தலைமைத்துவத்தை மதிக்கும் பண்பு, ஆசிரியர்கள், மாணவர்களுடன் பழகும்போது பயன்படுத்தும் சொல்லாடல்கள், பதவியைவிட கற்பித்தலுக்கும் கல்லூரிக்கும் அர்ப்பணிக்கும் விதம் போன்ற செயற்பாடுகளால் மாணவர்களால் விரும்பப்படுகின்ற கல்லூரி சமூகத்தால் மதிக்கப்படுகின்ற பேசப்படுகின்ற ஒருவராக விளங்கினார்.

இவர் கல்லூரியில் இருந்து ஓய்வு பெறுவது கல்லூரிக்கு மட்டுமன்றி ஆங்கில ஆசிரியர்களுக்கும் தாயை பிரியும் உணர்வை ஏற்படுத்தும் என எண்ணுகின்றேன். இவர் தன் ஓய்வுக்காலத்தில் சுக நலத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ.அகிலதாஸ், பிரதிக்கல்விப் பணிப்பாளர் தீவகக்கல்வி வலயம்

### உயர்ந்த அர்ப்பணிப்பும் ஆளுமையும் மிக்கவர்

தன்னலமற்ற தூயமனம் கொண்டு கல்லூரி எழுச்சிக்காக இருபத்திரண்டு ஆண்டு சேவையாற்றித் தமது அறுபதாவது வயதிலே ஓய்வினைப் பெற்றுக்கொள்ளும் ஆசிரியை அவர்களை மனம் திறந்து வாழ்த்துவதிலே பெருமகிழ்வடைகின்றேன். தன்னடக்கத்தோடும் மாணவர் நலன் கருதியும் ஆங்கில மொழிகற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் தனக்கெனத் தனித்துவமான பெருமைமிக்க மதிப்பார்ந்த இடத்தைப் பெற்றுக்கொண்டவர். மிக உயர்ந்த அர்ப்பணிப்பு, ஆளுமைமிக்க இத்தகு ஆசிரியர்களைக் காண்பதென்பது அரிதிலும் அரிது. ஆசிரியை அவர்களின் ஓய்வு என்பது கல்லூரிக்கு ஈடுசெய்யமுடியாத வெற்றிடமாகவே இருக்கப் போகின்றது. அவரது ஓய்வு காலம் சகல நலனும் தித்திக்க, குடும்ப சுக நலனுடன் நீடு வாழ வாழ்த்துகின்றேன்.

பொ. கமலநாதன், (முன்னாள் அதிபர்).



**B.A (English) SLTS - I**

**பாட இணைப்பாளர்**

பிறந்த திகதி :- 14.02.1953

ஆரம்பக் கல்வி :- **ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரி**

இடைநிலைக் கல்வி:-

**கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை.**

பல்கலைக்கழகம் :- **யாழ்ப்பாணம்.**

**ஆசிரிய சேவை:**

மு/இந்து தமிழ்க் கல்வன் பாடசாலை, முள்ளியவளை
★ 15.04.1985 - 14.01.1986

மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
★ 15.01.1986 - 14.06.1989

யா/முத்துத்தம்பி வித்தியாலயம்
★ 15.06.1989 - 19.02.1991

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
★ 20.02.1991 - 19.01.1992

யா/ஆசிரியர் கலாசாலை, பலாலி.
★ 20.01.1992 - 31.12.1993

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
★ 01.01.1994 13.02.2013

**T.P.021 321 1005**

### சேவை நீடிக்க வேண்டும்

ஆங்கில ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு பெருமளவில் நிலவுகின்றது. பல ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் இன்மையால் அந்தப் பாடசாலை மாணவர்கள் தரம் 6 வரும் வரை ஆங்கிலமே கற்பதில்லை. காலம் தாழ்த்தி ஆங்கில கற்பித்தல் அவர்களுக்கு பயன் தருவதில்லை. திருமதி ஜெயலிங்கம் அவர்கள் கல்லூரி நேரத்தில் ஆங்கிலம் கற்பிப்பதுடன் மட்டும் நின்று விடாது கல்லூரி நேரத்திற்கு பின்பும் மாணவர்களுக்குக் கற்பித்தமையை நாம் அறிவோம். திருமதி ஜெயலிங்கம் அவர்கள் தனது ஓய்வு காலத்திலும் தனது ஆங்கில அறிவினை மாணவர்களுக்குப் புகட்டவேண்டுமென்பதே எமது பேரவாவாகும். அவரது சேவை நீண்ட நாள் தொடர நல்லாரோக்கியத்தை ஆண்டவன் வழங்கவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

அ. பஞ்சலிங்கம், முன்னாள் அதிபர்.

### JAYALINGAM AMMA

The principal and teachers of J/Kokuvil Hindu College have honoured me with a request to write a message in appreciation of Mrs.S.Jayalingam,a Trained, Graduate English teacher who is retiring after over 30 years of fruitful service in the field of Education.

To honour our great teachers is to honour a noble profession and also give encouragement to those who serve the cause of education. Jayalingam Amma,who has been on the teaching staff of Kokuvil Hindu for the past 22 years, has served the cause of education by a complete devotion to her profession. It is teachers like Jayalingam Amma who has made Kokuvil Hindu What it is today!

She has been an ideal teacher who always had the interest of her pupils in her heart and worked indefatigably for their progress. The people of this part of Jaffna whom she served for so long will remember her with affection and gratitude. Now she can look back with pride and satisfaction at the generations of boys and girls whom she has well equipped to face the challenges of work and life in the 21st century.

We thank her for the great service she has rendered to Kokuvil Hindu and to us at the English Unit in the conduct and evaluation of various events in the English Language Day Competitions at various levels. We also honour her for dedication. she gives to her profession and wish her a longlife, good health and happiness and a further commitment to the improvement of education even in her retirement!

**S.Thiakarajah Asst Director of Education (Engilsh)**
**Zonal Education Office,Jaffna.**

### Appreciation

I have great pleasure in forwarding a message in appreciation of the services rendered by Mrs.s.Jeyalingam in the field of Education. Mrs.S.Jeyalingam, as a co-ordinator and a senior teacher of English deserved during her 22 years of service in our School. She has been instrumental in moulding many of her students in the field of English. She dedicated herself for the glory of our School. She was the main pillar of the English unit in our school. She always acts as a role model and persuades other staff to do their duties perfectly. She had a good relationship with other staff and also had a good rapport with Students. I wish her well earned retired life and God's blessings.

**N.Guendrarajah Secretary, Teachers welfare Association.**

### சமூகத்தோடு ஒன்றி இருந்தவர்

கொக்குவில் பதியிலே வாழ்ந்து கொக்குவில் இந்து அன்னைக்கு இருபத்திரண்டு ஆண்டுகள் ஆங்கில ஆசிரியராக நிறைவான சேவையாற்றி, ஓய்வு பெற்றுக்கொண்ட ஆசிரியை அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதிலே பெருமகிழ்ச்சியடைகின்றேன். நல்லுள்ளமும் நன்நோக்கும் கொண்டு சிறந்த பண்பாளராக, எல்லோர் மனத்திலும் தனித்துவமான இடத்தைப் பெற்றுக் கொண்டவர். ஆங்கில ஆசிரியராகவும், ஆங்கில பாட இணைப்பாளராகவும் செயற்பட்டு கல்லூரிக்குப் பல சாதனைகளைப் பெற்றுத் தந்தவர். இவரது ஓய்வு கல்லூரிக்குப் பேரிழப்பாகும். இருந்தபோதிலும் அவரது சேவைகளை நினைவுகூர்ந்து, ஓய்வுக் காலத்திலும் எமது கல்லூரிக்குத் தொடர்சேவையை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, ஓய்வுக்காலம் குடும்ப நிறைவும் குதூகலமும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் க.தேவராசா, பா.அ.சங்கம், செயலாளர்.

### நிதமும் வாழ்வீர்

*ஜெயலிங்கம் என்னுமோர் அன்புமிக்க*
*நெறியான ஆசிரியை எங்கே காண்போம்*
*பயமின்றி ஆங்கிலத்தை நுகர்ந்தபிள்ளை*
*தயவானீர் தளராத சேவையது நிறைவுமானீர்*
*அயல் நின்று இந்து அன்னை மகுடமிட்டீர்*
*அத்தனையும் உமையுயர்த்தும் நிதமும் வாழ்வீர்*

- திருமதி க.சரவணபவன், செயலாளர், பா.அ.நபு.

**ஆக்கம்:- கல்லூரிச்சமூகம்.**


இழந்த சக்தியை மீண்டும் பெறப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**

PACKED BY:
ROYAL Industries
T.P 0777 2776 70 Colombo 12.




ஏக விநியோகஸ்தர்கள்:

**சிவா நாராயணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனை களுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்
★ நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்குத் துணையும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்
★ காலை முதல் மாலைவரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்
★ மழலைகட்கும் மகப்பேற்றுத்தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் மூதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்

சந்தைப்படுத்துவோர்:- சிவா நாராயணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- றோயல் இன்டஸ்ரீஸ், ஆல்வொன்டல் ஸ்றீற், கொழும்பு - 13

(C/6257) (2.6)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**செல்வி மதுஷா சிவனேசன்**

(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

பெறுபேறு- 3A
மாவட்ட நிலை- 01 (முதலாம் இடம்)
தேசிய நிலை- 10 (பத்தாம் இடம்)



2012 க.பொ.த (உயர்தரம்) கலைப்பிரிவு பரீட்சை சாதனையாளரும், எமது சங்கத்தின் கணக்காளர் திருமதி சிவனேசன் நாகேஸ்வரி அவர்களின் புதல்வியுமாகிய மதுஷா சிவனேசன் அவர்களைப் பல்கலைகளும் பெற்று கல்வித்துறையில் மெய்ப்பொருளைக் கண்டு பார் போற்றும் கல்வி மானாக எம் நெடுந்தீவு மண்ணிற்கு பெருமை தேடித் தந்து உயர் வெற்றிகள் பல காண வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்
தலைவர், பொதுமுகாமையாளர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
(6341)(6.7.11) நெடுந்தீவு பல்.நோ.கூ.சங்கம்.



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு,அளவெட்டி, குருக்கள் கிணற்றடி பிள்ளையார் கோயிலிற்கு முன்பாக 17பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி விற்பனைக்குண்டு.விலை பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு-0773795291,0779582268

**கோழிக்குஞ்சு விநியோகம்**

நல்லின சிவப்பு, வெள்ளைப் போட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

★ **ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே. 077 6090 926

(28211) (15.6)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி சுபேந்திரன் உமாவதி தம்பதியரின்

செல்வப் புதல்வன் **இனியவன்**

தனது பிறந்தநாளை இன்று (14.02.2013) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார் இவரை பல்கலையும் கற்று வாழ எல்லாம்வல்ல செங்கற்படை விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம். வாழ்த்துவோர் அப்பா,அம்மா,தாத்தா,அப்பம்மா, அம்மம்மா,பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார்,சித்திமார், மாமாமார்,மாமிமார்,அண்ணாமார், அக்காமார் கனடாவில் இருக்கும் மாமா, மாமி,மச்சாள்மார்,மச்சான் சுவிஸ்சில் இருக்கும் மாமா,மாமி, மச்சாள்,மச்சான், அண்ணா மற்றும் உறவினர் நண்பர்கள், அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.





ஆஸ்பத்திரி வீதி,சங்கானை
0212250038 (C/6393)(3.6)

திரு.திருமதி சுபேந்திரன் உமாவதி தம்பதியினர்


# வீதி அகலிப்பு குறித்துக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.14

கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு தொடர்பாக அந்தப் பகுதிக் கடை உரிமையாளர்களுக்கும், காணி உரிமையாளர்களுக்கு மான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் வீதியில் உள்ள வர்த்தக சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில் மாநகரசபை உத்தியோகத்தர்களும், வர்த்தக சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைத்து கடை உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

(ம-13)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டது

கிளிநொச்சி இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வு சீரற்ற காலநிலை காரணமாக இன்று வியாழக்கிழமை நடைபெறாது. நிகழ்வு பிற் போடப்பட்டுள்ளது என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

(ம)


# வாழ்த்துகிறோம்

குணரத்தினம் ஹம்சிகா



சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தரம் ஏழு, சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமைக்கு வாழ்த்துகின்றோம். இவர் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியும் ஆவார்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, சகோதரர்கள்



# கண்ணீர் அஞ்சலி



காலஞ்சென்ற (12.02.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த டில்க்கா நகைமாட உரிமையாளர்

**கந்தசாமி யோகதாஸ்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரிவின் துயரில்:* (29494)(2-6.7)

**கோ.கோகுலன், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.**



# மரண அறிவித்தல்

## கந்தையா சிவசுப்பிரமணியம்



சாவகச்சேரி வடக்கு கிராம்புவிலைப் பிறப் பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சிவசுப்பிரமணியம் 12.02.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியின்மகனும்கமலாம்பிகை யின் அன்புக் கணவரும் சிவ சோதிலிங்கம் (நூலகர் - யாழ். பொது நூலகம்), தவராஜசிங்கம் (ஆசிரியர் - யா/ கைதடி முத்துக் குமாரசுவாமி ம.வி), கேதீஸ்வரன் சற்குணமாலா (பொருளா தார அபிவிருத்தி அமைச்சு - பட்ட தாரி பயிலுநர்), ஜயந்தி, ஜெயரூபன் (கட்டார்), சிவதீஸன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரி (சுகாதார கல்வி அலுவலர் - RDHS அலுவலகம், யாழ்ப்பாணம்), சியாமளா சேவாலாங்கா - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், யதுர்சனனின் அன்புப் பேரனும், ஜெயகுமாரலிங்கம், கோஇள முருகேசலிங்கம் (ஓய்வுபெற்ற இ.போ.ச.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வநாயகி, மனோன்மணி, பகவதிப்பிள்ளை, மயில்வாகனம், பரமசாமி ஆகியோரின் மைத்துனரு ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2013) வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் மைல் வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி.
(சி/9205) (45.6.7)

தகவல்:
**மனைவி, மக்கள்.**



# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

திருமதி
ஜெயலலிதா துரைசிங்கம்
(B.A Dip.in Edu,SLTSI)
(கீர்த்தி ஸ்ரீ சம்மான நல்லாசிரியர் விருது 2005)



எமது கல்லூரியின் பிரதி அதிபர் அவர்கள் கடந்த 20.12.2012 அன்று வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் பெற்றமையை இட்டு அவரை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் -அதிபர்,ஆசிரியர்கள், ஊழியர்கள்,பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி,கிளிநொச்சி
(26345)(3.6.7)



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



# வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் இணைந்த குளியல் அறை, 1200 சதுர அடி, டைல் பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 5194 332
(சி/27874)(6.45)



# காணி விற்பனை

கிளிநொச்சி,கனகபுரம் வீதியில் அமுதக்கடல் வாணிப நிலையத்திற்கு அருகில் 2 ஏக்கர் உறுதிக்காணி தென்னையுடன் கூடியது விற்பனைக்கு உள்ளது. விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புக்கு-0777250149
(26346)(3.6)



# உணவு சிற்றுண்டி வழங்கலுக்கான கூறுவிலை கோரல் - 2013
## வலய கல்வி அலுவலகம் -கிளிநொச்சி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள், விழாக்கள், போட்டிகள் என்பனவற்றுக்கு உணவு, சிற்றுண்டி வகைகளை வழங்குவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

01. நியதிகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்ளடக்கியதான விரிவான கேள்வி கோரல் விவரத்தினை அலுவலகத்தில் பார்வையிட முடியும்
02. இக் கேள்விப் பத்திரங்களை 10.02.2013ஆம் திகதி தொடக்கம் 27.02.2013 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ரூபா நானூறு (ரூபா 400/=) மீளளிக்க முடியாத வைப்புப்பணம் செலுத்தி நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
03. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்களை 27.02.2013 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னராக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலா கவோ அலுவலகத் திற்கு (கணக்காளர், வலய கல்வி அலுவலகம், கிளிநொச்சி) அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. அதிகாரம் பெற்ற கேள்விச் சபையினர் 27.02.2013ஆம் திகதி பிற்பகல் 2.00மணிக்கு கூடி கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.
05. இது சுருக்கமான பத்திரிகை விளம்பரமாகும்

க.முருகவேல்
*தலைவர் கேள்விச் சபை/*
*வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.* (சி/6387)(2.6.7)



# மரண அறிவித்தல்



## திருமதி நித்தியானந்தம் புவனேஸ்வரி (மணி)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நித்தியானந்தம் புவனேஸ்வரி (மணி) நேற்று (13.02.2013 ) புதன் கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் நித்தியானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் -இராசாபூபதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- இராசம்மா தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகேஸ்வரி (ராசாத்தி) மற்றும் தனபாலசிங்கம் (துரை), சிவபாலசிங்கம் (சிவம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சற்குணானந்தம், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அருளானந்தேஸ்வரி (கௌரி), சோதிஸ்வரி (சோதி), கிருஸ்னேஸ்வரி (கிரிசா) ஆகியோரின் பாசமிகு தாயும் சிறிஸ் சௌந்தரராஜா (சிறி), மகேஸ்வரன் (கணேஸ்-வவுனியா), வருணகுலசிங்கம் (குஞ்சன்-அளவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துஜா, பானுஜா, துவாரகன், தினோஜன், பவித்திரன், கரிப்பிரபா, யசிந்தன், தர்சிகா, கவினாயா, சுயானான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
021 4920873, சிவம்- 0777593736**

தகவல்:
நித்தியானந்தம்
(கணவர்).
(28488)(6.7.11)



## கல்லறையில் இருப்பதனால் தானோ...?

என்னை பார்த்து நீ அழுகிறாய்
என் மனம் கலங்குகிறது
உன் கண்ணீரைத் துடைக்க
முற்படுகிறேன்
பின்பு தான் தெரிகிறது
நான் கல்லறையில் இருப்பதால்
தான்.. என்று
சுதந்திரமா?
அன்னிய நாட்டுப் பிடியிலிருந்து
சுதந்திரம் பெற்ற இலங்கை
அங்கு வாழ்கின்ற மக்களின்
உரிமைக்கு சுதந்திரம் வழங்காது
போனது தான் ஏனோ?
அதுதான் சுதந்திரமா?

சி.அகல்யா, கொக்குவில்

## நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

# இருபாலாருமே..!



இருபாலாரும் கால ஓட்டத்துக்கு ஏற்ற வகையில் தம்மை மாற்றிக் கொள்வதில் அதிதீவிரமாக முனைப்புக் காட்டுகின்றார்கள். இதற்குப் பல காணிகளை முன்னிறுத்திக் காட்ட முடியும்.

ஆண்களில் சிலர் ஒருவரை ஒருவர் பார்த்த நாகரிகமற்ற முறையில் நீளக்காற் சட்டை அணியும் போது அதனைத் தளர்ச்சியாக அணிந்து கீழே இறக்கி விட்டு உள்ளாடை தெரியும் வகையில் நடமாடுவதை நவநாகரிகத்தின் உச்சகட்டமென்பதா?

தினசரி செய்தித் தாள்களை நோக்கினால் களவு, கொலை, வன்புணர்வு, சமூக விரோதச் செயல்கள் என்று பார்க்க முடிகின்றது. ஆகவே இன்றைய கால கட்டத்தில் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள இருபாலாரும் அக்கறையோடு செயலாற்ற வேண்டும் என்பதோடு நாம் ஒவ்வொருவரும் உடை, நடை, பாவனைகள் அத்தனையிலும் அவதானமாக இருக்க வேண்டும். நவநாகரிக வளர்ச்சி என்பது தேவை தான். அதை வேண்டாமென்று மறுத்துரைக்க எவ் விதத்திலும் முற்படவில்லை. அதனைத் தத்தமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்புடைய வகையில் பேணிக் கொள்ள வேண்டும்.

ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அலையோடு அடித்துச் செல்லப்படும் மீன்களாக இருக்காது அலைகளோடு மோதி எதிர்நீச்சல் போடும் மீன்களாக இருக்க வேண்டும். நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்பவர்களாக ஆண்களும் பெண்களும் உள்ளனர் என்ற கூற்றை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

துதிலக் (கிரி), புனர்வாழ்வு நிலையம், வவுனியா.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....



**நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது**

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## சிந்தனைத் துளிகள்.....

★ தன்னை சரிப்படுத்திக் கொள்பவனே உலகை சரிப்படுத்த தகுதியானவன்.

★ அலை மோதும் கடலில் அல்லி வளராது. உறுதி இல்லாத மனதில் காதல் வளராது.

★ இலட்சியம் இல்லாத மனிதன் திசை காட்டும் கருவி இல்லாத கப்பல் போன்றவன்.

★ நல்ல மனிதனுக்கு அடையாளம் மற்றவருக்கு கெடுதல் செய்யாமல் இருத்தல்.

★ நன்றி விசுவாசம் கொண்ட நண்பன் தெய்வத்தின் மறு ஒரு வடிவம்.

★ நட்பு சிரித்துப் பேச மட்டு மல்ல; எல்லை மீறினால் தட்டிக் கேட்பதற்கும் தான்.

★ உங்களிடம் உள்ள அன்பு சந்தேகங்கள் அனைத்தையும் எரித்து விடட்டும்.

★ ஒத்த மனமுடையவர்கள் சேர்ந்தால் கடலையும் வற்ற வைக்கலாம்.

★ பொறுமை அதிகம் உள்ளவனே காரியம் சாதிக்கும் ஆற்றல் உடையவன்.

★ உன் எதிரி ஓர் எறும்பு போல இருந்தாலும் கூட அவனை யானையாகக் கருது.



- துவாரகா,கைதடி

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................

முகவரி :-...........................................................

..............................................................

........................ திகதி

........................ கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## பிரிவென்ற தொனியில் கவியொன்று ஏனம்மா...?

கல்விக் காலமது
கனிவோடு கண்ணயர
பள்ளிப் பருவமதின்
படர் கொடியாம்
நம்மவர் நட்பின்
பிரிவதனை பிரியமுடன்
கவியாக வடித்திடுவீர்
என்றுரைத்த உனக்காக
கருத்தான கவியொன்றை
கவியியற்றி கண்ணயர்ந்தேன்
கண்ணயர்ந்த கணமதிலே
கனவொன்று மூண்டதுவே
பிரிவில்லா நட்புக்கு
பிரியமாலை நீ சூட்டி
புரியாத பிரிவொன்றை
பிரியத்துடன் புரிவதற்கு
வை திஸ் கொலைவெறி என
வையகமும் அதிரும்படி
வானத்திலிருந்து
வந்திருந்த
வானரங்கள் எனைக் கேட்க
சட்டென விழித்ததுமே
உணர்ந்தனன் உண்மையதனை
கல்லறை வரை
களம் காணும்
களங்கமற்ற நட்புக்கு
பிரிவென்ற தொனியில்
கவியொன்று ஏனம்மா???

பா.துளசிகா, 2012, உயர்தரம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# மறுக்கப்படும் நீதி வளர்க்கப்படும் அநீதி

**தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குத் திருகோணமலை ஒரு முன் உதாரணம் என்றார். தனது ஆட்சியில் சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் ஜனாதிபதியே தமிழ் மொழியில் பேசுகையில் சொன்னார்.**

இரா. புத்திரசிகாமணி

'களனியில் சண்டியரைத் தட்டிக் கொடுத்த அரசு, காலியில் மேயரின் கழுத்தைப் பிடித்து காலை வாரிவிட்டது'. 'இனம் தெரியாத குண்டர்களினால் தாக்கப்பட்ட முன்னாள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண இரத்தினபுரிக்கு தூக்கி வீசப்பட்டுள்ளார். அடி உதை பட்டதுதான் மிச்சம்'

'ஆளும் கட்சி உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒருவருடத்துக்கு மேல் எவரையும் தடுப்புக் காவலில் வைக்க முடியாது என்று கூறியே இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்'.

'அதேவேளை புலிகளுக்கு உணவுப் பார்சல் கொடுத்தனர், குடிக்க நீர் கொடுத்தனர், தகவல் கொடுக்கத் தவறினர் என்று கூறி 12 முதல் 15 வருடங்களுக்கு மேல் சிறைக்கூடங்களில் விசாரணை இன்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளைப் பற்றி அரசு அக்கறை காட்டவில்லை.

எங்கோ ஓர் அரசியல் மேடையில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க நீதிமன்ற தீர்ப்பொன்றைக் குறிப்பிடும் போது, வாய் தவறி 'நாய் தீர்ப்பு' என்று கூறிவிட்டார். அந்த இரண்டு சொற்களுக்காக இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவித்தார். இன்று உயர் கல்வி அமைச்சராகிவிட்டார்'.

அதேவேளை முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்ததும் தீர்ப்பு வழங்கியதும் இலங்கை அரசமைப்புக்கு மாறானது. எனவே அவை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உதாசீனப்படுத்தி ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் பதவியில் இருந்தே தூக்கி எறியப்பட்டுள்ளார்.'

'இப்பொழுது பிரதம நீதியரசராக இருக்கும் மொஹான் பீரிஸ் முன்பு சட்டமா அதிபராக இருந்த வேளையில் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார் எனப் பிரபல சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கினால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது'

நாட்டில் எந்தப்பக்கம் சென்றாலும் அங்கெல்லாம் விமர்சிக்கப்படும் விடயங்கள் இவைதான். இவை குறித்து முன்பு இரகசியமாகப் பேசிக் கொண்ட மக்கள், இப்பொழுது பகிரங்கமாகவே விமர்சனம் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

நாட்டில் இவ்வளவு பாரதூரமான சம்பவங்கள் இடம் பெறுகின்றன. முன்பு வட பகுதியில் மனிதப் புதைகுழிகள் காணப்பட்டது போன்று இப்பொழுது தென் பகுதியிலும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அதாவது மாத்தளை ஆதார வைத்தியசாலை விஸ்தரிப்பிற்காக அத்திபாரம் வெட்டப்பட்ட போது மண்டை ஓடுகளும் மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த இடத்தில் முன் எப்போதுமே மயானம் ஒன்று இருந்ததுமில்லை. குடியிருப்புகளும் மண்ணில் புதையுண்டதுமில்லை. அப்படியானால் ஓர் இடத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான மனித எலும்புக்கூடுகளும் மண்டை ஓடுகளும் எப்படி வந்தன? அது குறித்து இப்பொழுது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவை படையினரால் கைது செய்யப்பட்டும், வெள்ளை வான்களில் கடத்தப்பட்டும் காணாமல் போனவர்களின் எலும்புக்கூடுகளாகத்தான் இருக்கும். இதில் ஒன்றும் சந்தேகப்பட வேண்டிய அவசியமே இல்லை என அடித்துக் கூறுகின்றார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க.

ஆனால் பாதுகாப்புத்துறைக்கு பொறுப்பான ஜனாதிபதியின் சகோதரரான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கையில் காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லை. இது ஒரு பச்சைப் பொய்யான பிரசாரம் என்று அடித்துக் கூறுகின்றார்.

இது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முயலும் செயலாகவே கருதப்படத்தக்கது.

திருகோணமலையில் இம்முறை நடைபெற்ற 65 ஆவது சுதந்திர தின விழாவின் போது ஜனாதிபதி என்ன கூறினார்?

மத வன்முறைகள் தொடர்பாக விசனப்படும் ஜனாதிபதி, திருகோணமலையில் பௌத்த மகா விகாரையை இந்துக்கள் கட்டினர் என்றும், கண்டியில் மீரா மக்காம் பள்ளி வாசலுக்கு தலதா மாளிகையே காணியை அன்பளிப்பாக வழங்கியது என்றும் கூறுகின்றார். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குத் திருகோணமலை ஒரு முன் உதாரணம் என்றார். தனது ஆட்சியில் சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் ஜனாதிபதியே தமிழ் மொழியில் பேசுகையில் சொன்னார்.

ஜனாதிபதியின் இந்த உரையை அழைக்கப்பட்ட விருந்தினர்களும், கொட்டும் மழையிலும் கொண்டு வந்து குவிக்கப்பட்ட பொது மக்களும் மட்டுமன்றி வெளிநாட்டு இராஜதந்திரிகளும் கேட்டுக் கொண்டுதான் இருந்தனர். சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றார்.

ஆனால் வெலிக்கடை சிறைச்சாலையில் சக சிறைக் கைதிகளினாலும் சிறைக் காவலர்களினாலும் அடித்தும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி உட்பட்ட போராளிகளின் நினைவாக பிரட்றிக் கோட்டை கடற்கரையில் கட்டப்பட்டிருந்த ஞாபகார்த்த திறந்த வெளி அரங்குக்கு கறுப்பு மை பூசப்பட்டு அலங்கோலப்படுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டியே இந்தத் தார் பூசும் செயல் அரங்கேறியது எனலாம். சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம் பெற்ற பிரதான மேடைக்கு அருகிலேயே இந்த ஞாபகார்த்த அரங்கு காணப்படுகின்றது. போர்க் காலத்தின் போதும், போர் முடிந்த மூன்று வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இந்த ஞாபகார்த்த மண்டபம் சேதம் எதுவுமின்றியே காட்சியளித்தது. ஆனால் ஜனாதிபதி வருகின்றார் என்பதால் தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் தார் பூசி அழிக்கப்பட்டனவோ என்னவோ.

இந்த அற்பத்தனமான செயல் தமிழ்த் தாயின் முகத்தில் கரியைப் பூசியதற்கு ஒப்பாகவே அமைந்துள்ளது என திருமலை வாழ் மக்கள் வேதனைப் பெருமூச்சு விடுகின்றனர். இது தான் ஜனாதிபதி சகல இன மக்களுக்கும் வழங்கும் சம உரிமையா? அல்ல. இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும். பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இரவு பத்து மணிவரை அழகாகக் காட்சியளித்த நினைவு மண்டபத்தை அதிகாலையில் மை பூசி அலங்கோலப்படுத்தியவர் யார்?

மூன்றாம் திகதி அதிகாலை முதல் இப்பிரதேசத்திற்குள் பொது மக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. முன் ஏற்பாடுகளை அவதானிக்கச் சென்ற ஊடகவியலாளர்களும் முதலில் தடுக்கப்பட்டுப் பின்னர் ஒரு வழியாக பலத்த உடற்பரிசோதனைகளின் பின்னரே அனுமதிக்கப்பட்டனர். இப்பிரதேசம் ஒரு பலத்த அதி உயர் பாதுகாப்பு வலயம் போன்றே காணப்பட்டது. அத்தனை கட்டுக்காவல்களையும் மீறி அந்த நினைவு மண்டபத்தை மை பூசி சேதமாக்கியவர்கள் யார்?

அரச சார்புடையவர்களின் அனுசரணையுடனேயே இந்தத் மை பூச்சு இடம் பெற்றுள்ளது என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.

அப்படியானால் ஜனாதிபதியின் சொல்லும் செயலும் வெவ்வேறானதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

அண்மைக் காலங்களில் ஆளும் கட்சிக் கூட்டங்களிலும், ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலும் ஏன் அமைச்சரவைக் கூட்டங்களிலும் ஜனாதிபதி ஒரு விடயத்தை அடிக்கடி கூறி வருகின்றார்.

அதாவது சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுபவர்கள், இன வன்முறைகளைத் தூண்டிவிடும் செயல்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் எந்த உயர் பதவிகளில் இருப்பவர்களாக இருந்தாலும் தயவு தாட்சணியம் காட்டப்பட மாட்டாது என்று அவர் கடுமையாகவே கூறி வருகின்றார். இது வெறும் வாய் வார்த்தை மட்டுமே என்பது இப்போது கொள்ள வேண்டியதாகிறது. இதனை நாம் கூறவில்லை அரச தரப்பினரே முணுமுணுக்கின்றனர்.

ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலாளர், இணைப்பாளர் என இருவர் கைது செய்யப்பட்டனர். அமைச்சரின் கட்சி அலுவலகத்தில் பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டன. ஆளும் கட்சி ஆதரவாளர்கள் அமைச்சர் மேர்வின் சில்வாவைக் கைது செய்ய வேண்டும் என பெரும் ஆர்ப்பாட்டமே செய்தனர். ஆனால் இன்றும் மேர்வின் அமைச்சராகவே இருக்கின்றார். அதேவேளை ஆளும் கட்சியைச் சேர்ந்த காலி மேயர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார் எனப் பதவியில் இருந்தே தூக்கி வீசப்பட்டுள்ளார். இவ்விடயம் இன்று நீதி மன்றம் வரை சென்றுள்ளது.

ஆளும் கட்சிக்கு உள்ளேயே இத்தகைய பாகுபாடுகள். இத்தகைய நிலையில் ஏனையவர்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கப்போகின்றது என்று வெளிப்படையாகவே மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. இவற்றை உற்று நோக்கும் போது ''ஊருக்கு மட்டும் தான் உபதேசம் உனக்கில்லையடி கண்ணே' என்ற முது மொழிதான் ஞாபகத்துக்கு வருகிறது. ★



தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டி வரும். எதிர்பார்த்த காரியங்கள் அலைச்சலின் பேரில் முடியும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். பழைய பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது.

**இடபம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**மிதுனம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**கடகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதிற்குப்பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மனநிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**சிங்கம்:** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். வியாபாரத்தில் புது முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**கன்னி:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள்.

**நாளை**

மாசி- 03 வெள்ளிக்கிழமை 15.02.2013
திதி: பஞ்சமி பி.ப. 12.17 வரை
நட்சத்திரம்: ரேவதி காலை 07.08 வரை
சுபநேரம்: 06.33- 08.03 வரை
இராகுகாலம்: 11.03- 12.33 வரை

**துலாம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**தனுசு:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**மகரம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். பெண்களுக்கு திருமணப்பேச்சு முன்னேற்றம் தருவதாக அமையும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**கும்பம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும். விருந்தினர்களின் வருகையுண்டு.

**மீனம்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். தன்னம்பிக்கை குறையும். முன்கோபத்தால் பகை உண்டாகும். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். வியாபாரத்தில் தொழில் இரகசியங்களை வெளியில் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் பொறாமை அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 1 | 5 | | 6 | 4 |
| 5 | 8 | | | 6 | | | | |
| | | 1 | 2 | | | 3 | | |
| | | 5 | | 3 | 6 | | 2 | 7 |
| | | 8 | 1 | | 2 | 5 | | |
| 7 | 4 | | 9 | 5 | | 1 | | |
| | | 3 | | | 7 | 2 | | |
| | | | | 2 | | | 9 | 5 |
| 9 | 2 | | 5 | 8 | | | | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 8 | 1 | 6 | 2 | 9 | 7 | 4 |
| 6 | 4 | 2 | 7 | 9 | 5 | 1 | 3 | 8 |
| 9 | 1 | 7 | 4 | 3 | 8 | 2 | 6 | 5 |
| 1 | 6 | 9 | 2 | 5 | 3 | 8 | 4 | 7 |
| 8 | 2 | 4 | 9 | 7 | 6 | 5 | 1 | 3 |
| 7 | 3 | 5 | 8 | 4 | 1 | 6 | 2 | 9 |
| 2 | 9 | 1 | 3 | 8 | 7 | 4 | 2 | 6 |
| 4 | 7 | 6 | 5 | 1 | 9 | 3 | 8 | 2 |
| 5 | 8 | 3 | 6 | 2 | 4 | 7 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## மரண அறிவித்தல்

## கந்தசாமி மோகனதாஸ்

(டில்க்கா ஜூவல்லறி -உரிமையாளர்)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், தண்ணீருற்று, முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மோகனதாஸ் நேற்று முன்தினம் (12.02.2013 )செவ்வாய்க்கிழமை காலமானாரர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி -சௌந்தரிப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், அப்புத்துரை- காலஞ்சென்ற ஞானேஸ்வரி தம்பதியரின் மருமகனும், லோஜினியின் (ஆசிரியை- மு/ வித்தியானந்தாக் கல்லூரி) அன்புக் கணவரும், கம்சிகா, பிரியங்கன், கவிப்பிரியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலசுந்தரம், பாலசிங் கம், ஜெயலட்சுமி, யோகேஸ்வரி, விஜயகுமாரி, ராயு, பாலு, கௌரி, பேபி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலதாஸ், சண்முகதாஸ், கிருஸ்ணதாஸ், பத்மினி, உருத்திரேஸ்வரன், கலைவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கற்பூரப்புல்லு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
புதரிகுடா, தண்ணீரூற்று,

(27742)(45-6.7)

தகவல்
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் இராசையா ஆறுமுகம்
(மருந்தாளர்)

தாயின் மடியில் 04.07.1946
இறைவன் அடியில் 13.01.2013

4ஆம் கட்டை, இராசவீதி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இராசையா ஆறுமுகம் (மருந்தாளர்) எங்கள் அன்பான அப்பா எதிர்பாராத விதமாக திடீரென எம்மை விட்டுப் பிரிந்த வேளையில் அவர்களின் மறைவுச்செய்திகேட்டு உடன்வந்து எமது துயரங்களில் பங்கேற்ற பெரியோர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அப்பாவுடன் கடமையாற்றிய (வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, கோப்பாய்) வைத்திய சாலை உத்தியோத்தர்கள், ஊழியர்கள், சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்புள்ளங்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும், இறுதி ஊர்வலத்திலும் பங்கு பற்றியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை நல்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன்,

இன்று (14.02.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும்மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4 ஆம் கட்டை
இராசவீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தொ.பே. 021 321 4894,
077 196 2054.

குணமணிதேவி ஆறுமுகம் (மனைவி),
(முன்னாள் செயலாளர், நகரசபை, சாவகச்சேரி),
சஞ்ஜீவன், மஞ்ஜீவன் (மகன்மார்)

(29290) (45.6)



நீர்கொழும்பு,கொச்சிக்கடை ,தூவன பிரதேசத்திலுள்ள விலங்குப் பண்ணையில் நீண்ட காலமாக விலங்குகளை உண்டு வந்த சிறுத்தை ஒன்றை பிரதேசவாசி ஒருவர் பிடித்துள்ளார்.

வர்த்தகரிடம் ஒரு கோடி ரூபா கொள்ளை:

## சந்தேகநபர்களை கைது செய்ய விசேட பொலிஸ் குழுக்கள்

கொழும்பு,பெப்.14

கொழும்பு, கொம்பனித் தெருவில் வெளிநாட்டு நாணய பரிமாற்ற நிறுவனமொன்றின் உரிமையாளரிடம் ஒரு கோடி ரூபாவைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணய பரிமாற்ற நிறுவன உரிமையாளரிடம் பணத்தைக் கொள்ளையிடுவதற்காக ஐந்து பேர் கொம்பனித்தெருவுக்கு வந்திருந்தனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தனியார் வங்கியொன்றிலிருந்து பணத்தைப் பெற்று வெளியேறியபோது, பொலிஸ் சீருடையைப் போன்ற ஆடைகளை அணிந்திருந்த குழுவொன்று தம்மையும் சாரதியையும் வாகனத்தில் ஏற்றிச் சென்றது என்று குறித்த வர்த்தகர் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார்.

பின்னர் கோட்டே பிரதேசத்தில் வர்த்தகரையும், சாரதியையும் தள்ளிவிட்ட கொள்ளையர்கள் பணத்தை எடுத்துச்சென்றுள்ளனர் என்று அவர் பொலிஸாரிடம் கூறினார்.

வர்த்தகருக்குச் சொந்தமான கார் கொள்ளையர்களால் தெமட்டகொடை பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## மருதானையில் சூதாட்டம் 26 பேர் சிக்கினர்

கொழும்பு,பெப்.14

கொழும்பு - மருதானையிலுள்ள விடுதியொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக குறித்த விடுதியில் சூதாட்டம் இடம்பெற்றுவந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதனையடுத்துச் சுற்றிவளைக்கப்பட்டு விடுதியிலிருந்து ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 26 பேரும் கொழும்பை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மோதலைத் தடுக்கச் சென்ற பொலிஸாருக்குப் பொல்லடி

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

கொழும்பு,பெப்.14

அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தில் மோதலைத் தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

மோதலில் காயமடைந்த நபரும், பொலிஸ் உத்தியோகத்தரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நொச்சியாகம பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மோதல் ஒன்று இடம்பெறுவதாக அறிந்த பொலிஸார், அங்கு விரைந்து சென்றுள்ளனர்.

அதன்போது மோதல் இடம்பெற்ற இடத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டுள்ளார். அதனையடுத்துப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த நபரின் கையில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. எனினும் அவருடைய நிலை கவலைக்கிடம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மக்களை ஏமாற்றும் விதத்திலான அபிவிருத்திகளால் பயனில்லை

### ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.14

மக்களை ஏமாற்றும் விதத்திலான அபிவிருத்தித் திட்டங்களால் எவ்வித பயனும் இல்லை.

இவ்வாறு ஜே.வி.பி. பொதுச் செயலர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைத்தொழில்களை மேம்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி அதன்மூலமே அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும்.

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களால் எவ்வித பயனும் கிடையாது.



கடன் பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படும் போலி அபிவிருத்தித் திட்டங்களால் நாடு மேலும் பாதாளத்துக்குச் செல்ல நேரிடும்.

இந்த நாட்டின் கைத்தொழில் துறைகளில் எவ்வித அபிவிருத்தியும் இல்லை. கைத்தொழில் துறைகளில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

மின்சாரம், போக்குவரத்து, தேயிலை, இறப்பர், மீன்பிடி, பெற்றோலிய வளம் உட்பட பல்வேறு திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கம் அரசுக்கு இல்லை.

கடன் பெற்றுக்கொள்வதும், வட்டி செலுத்துவதுமே அரசின் பிரதான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

வீதி அபிவிருத்தி, பாலம் கட்டுதல் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கடன் அடிப்படையில மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.-என்றார்.(ச)

## ஜனவரியில் மட்டும் 76 வாகன விபத்துகள்

### 2800 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்தினர்

கொழும்பு,பெப்.14

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 76 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்துதல், விபத்து ஏற்படுத்துதல் ஆகியன தொடர்பில் சாரதிகளுக்கு புள்ளிகள் வழங்கும் திட்டம் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் 23 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அதுதவிர வடக்கில் 10, வடமத்தியில் 9, கிழக்கில் 8, வடமேல் 8, தெற்கு 7, மத்திய 6,மற்றும் சப்ரகமுவவில் 5 என விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

மது போதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 2800 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதில் 1411 முறைப்பாடுகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளன என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## வலி நிவாரண மருந்தை விற்ற மூன்று பேர் கைது

கொழும்பு,பெப்.14

சட்டவிரோதமாக வலி நிவாரண மருந்து வகைகளை விற்பனை செய்த மூவர் நீர்கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருந்து விநியோக நிறுவனமொன்றின் முகாமையாளர் உட்பட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புப் பிரதேசத்தின் இளைஞர்கள் போதைப் பொருளுக்குப் பதிலாக வலி நிவாரண மருந்துகளை பயன்படுத்துவதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இளைஞர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் சந்தேகநபரான முகாமையாளர் இந்த மருந்துகளை மற்றும் இருவருக்கு வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

வைத்தியரின் பரிந்துரையின்றி குறித்த மருந்து வகையைப் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விற்பனை செய்தமை தொடர்பிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

## தனியார் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது

### போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,பெப்.14

தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டா என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

**டீசல் விலை கூடுதலாக உயர்ந்தால் மாத்திரம் அமைச்சரவை அனுமதியுடன் பஸ் கட்டணம் உயர்த்தப்படும்.**

பஸ் போக்குவரத்து செலவு குறைந்து, குறைந்த வீதத்தினாலேயே உயர்ந்துள்ளதால் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை இல்லை என்று தேசிய போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் ரொகான் குணவர்த்தன தெரிவித்தார்.

ஆகக் கடைசியாக தனியார் பஸ் கட்டணங்கள் 2012 பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி அதிகரிக்கப்பட்டது. மீண்டும் இன்று வியாழக்கிழமை முதல் பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு பஸ் சங்கங்கள் கோரியிருந்தன என்று அவர் கூறினார்.

2012 ஏப்ரல் மாதம் 14 திகதியில் இருந்து இன்று வரையான காலத்தில் பஸ் போக்குவரத்துச் செலவுகள் சிறு வீதத்தினாலே உயர்ந்துள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி உதிரிப்பாக விலைகள், எரிபொருள் விலை ஆகியன உள்ளடங்கலான சகல நிலைமைகளும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

பஸ் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கைப்படி எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதலே பஸ் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டும். எதிர்வரும் காலத்தில் டீசல் விலை கூடுதலாக உயர்ந்தால் மாத்திரம் அமைச்சரவை அனுமதியுடன் பஸ் கட்டணம் உயர்த்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தபால் திணைக்கள வெற்றிடத்துக்கு புதியவர்கள் இணைக்கப்படுவர்

கொழும்பு,பெப்.14

தபால் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிதாக 1086 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று தபால் மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்தார்.

தபால் திணைக்கள வரலாற்றில் சேவைக்கு அதிகூடிய உத்தியோகத்தர்கள் ஒரே தடவையில் இணைத்துக் கொள்வது இதுவே முதல் முறையாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 16 வருடங்களாக தபால் திணைக்களத்துக்குப் புதிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார். (ச)

## பொலநறுவை வயலில் இருந்து மீட்கப்பட்டது விண்கல் அல்ல

பொலநறுவை,அரலகங்வில பிரதேச வயல் ஒன்றில் விழுந்த வான் பொருள், எரிகல் அல்ல என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அத்துல சேனாரத்ன தெரிவித்தார். குறித்த வான் பொருள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

வயலில் மீட்கப்பட்ட மர்மப் பொருள் வானிலிருந்து வீழ்ந்த ஒன்று என சந்தேகிக்கப்பட்டது. அதனை உறுதிசெய்து கொள்ள பரிசோதனை நடத்தப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உலகத்தில் இதுவரை மீட்கப்பட்ட விண்கற்களுடன் குறித்த மர்மப் பொருளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது விண்கல் அல்ல என்பது தெளிவாகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. இராமசாமி சிறிதரன்
(B.A. Dip.in. Ed, SpTr., SLPS 2II)
(அதிபர், யா/காரை. ஊரி,
அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்

எமது அதிபர் அவர்கள் 08.08.2012 முதல் அதிபர் சேவை 2 II இற்கு நியமிக்கப்பட்டதையிட்டு பெருமிதம் அடைகின்றோம். எமது பாடசாலையை கடந்த 10 வருடங்களாக விளையாட்டுத்துறையிலும் கல்வியிலும் உயர்நிலை அடையச் செய்துள்ளார். 155 ஆம் ஆண்டு நிறைவில் எமது பாடசாலையும், அதிபரும் சகல துறைகளிலும் உயர்ந்திட இறைவனைப் பிரார்த்தித்து மனதார நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(29437)(2.6)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ காரை ஊரி அமெரிக்கன்மிஷன் வித்தியாலயம்.


# லலித், குகன் கடத்தல்; அரசுடன் தொடர்பு உள்ளோரே காரணம்

யாழ்ப்பாணம், பெப்.14

என்னைக் கடத்தித் தடுத்து வைத்திருந்தவர்கள் காணாமல்போன லலித் மற்றும் குகன் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர். அவ்வாறு தடுத்து வைத்திருந்தவர்கள் இராணுவத்தினரே எனச் சந்தேகிக்கிறேன். லலித் மற்றும் குகன் காணாமல் போவதற்கு அரச பாதுகாப்புப் பிரிவுடன் தொடர்புடையவர்கள் காரணமாக இருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

இவ்வாறு சாட்சியமளித்தார் முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான திமுது ஆட்டிகல.

மக்கள் விடுதலை முன்னணியில் செயற்பட்டவர்களான லலித் மற்றும் குகன் காணாமல்போனமை தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காகவே முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான திமுது ஆட்டிகல நேற்று முன்தினம் நீதிமன்றுக்குச் சென்றிருந்தார். அங்கு திமுது தொடர்ந்து சாட்சியமளிக்கையில்:-

லலித் மற்றும் குகன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு தடுப்பில் உள்ளவர்களது விடுதலை தொடர்பிலும் அகதி முகாம்களில் உள்ளவர்களை மீளக்குடியமர்த்துவதற்காகவும் வடக்கு, கிழக்கு மக்களுடன் இணைந்து பணியாற்றி வந்தனர்.

லலித் மற்றும் குகன் ஆகிய இருவரும் 2011 ஆம் ஆண்டு காணாமல்போயுள்ளனர். அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. நான் அறிந்த வரையில் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

எந்தவொரு ஆர்ப்பாட்டங்களையும் சுமுகமாக முன்னெடுக்க முடியவில்லை. தாக்குதல் சம்பவங்களே விரிவடைந்து கொண்டு சென்றன.

கடந்த ஏப்ரல் மாதம், அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த பிரேமகுமார குணரட்ணவையும் என்னையும் கடத்தியிருந்தார்கள். அரச பாதுகாப்பு பிரிவுடன் தொடர்புடையவர்களே என்னைக் கடத்தியிருக்கலாம்என்று சந்தேகிக்கின்றேன். என்னைக் கடத்தியவர்கள் ஆயுதம் வைத்திருந்தனர். அவர்கள் பேசிய மொழி இராணுவத்தினரது மொழியாகவே இருந்தது.

கடத்தப்பட்ட பிறேமகுமார குணரட்ணவை அரச அதிகாரிகள் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டனர் எனக் கூறப்பட்டது. பின்னர் இலங்கைக்கு வந்த அவரை குடியகழ்வு, குடிவரவுத் திணைக்களம் திருப்பி அனுப்பி விட்டதாக அறிந்தேன் என்றார்.

வழக்கு ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ம-4)


யா/மாதகல் சென் யோசப் மகாவித்தியாலயம்
இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியும்
புதிய மைதான திறப்பு விழாவும்

காலம் :- 14.02.2013 வியாழக்கிழமை பி.ப. 2.00
இடம் :- பாடசாலை மைதானம்
தலைவர் :- திரு வி.நடராசா

பிரதம விருந்தினர்
கௌரவ அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)
அவர்கள் புதிய விளையாட்டு மைதானத்தை திறந்துவைப்பார்

சிறப்பு விருந்தினர்
உயர்திரு -சி-சத்தியசீலன்
(செயலாளர் கல்வி கலாசார விளையாட்டு பண்பாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்
உயர்திரு-செ-சந்திரராஜா
(வலயக்கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)
அருட் தந்தை G.F.கலிஸ்ரியஸ்ராஜ் அடிகள்
(மாதகல் பங்குத் தந்தை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை:
புலம்பெயர் பழைய மாணவர் சங்கம், மாதகல். -கல்லூரிச் சமூகம்.

(29093)(3.6)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தர்மலிங்கம் மனோன்மணி

தோற்றம் 23.10.1951 மறைவு 27.02.2012
திதி: பூர்வபக்க பஞ்சமி

கண்கள் கலங்குதம்மா......... கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கள்
எம்மை விட்டு நெடுந்தூரம் சென்று விட்டீர்கள்
ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!.

இன்று [14.02.2013] வியாழக்கிழமை தம்பசிட்டி, பருத்தித்துறை வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை. (27741)(6.7.11)

உங்கள் பிரிவால் தவிக்கும்:
குடும்பத்தினர்.



# DASH
## மிதிவெடியகற்றும் நிறுவனம்

### பணிநிலை வெற்றிடம்

பணிநிலை : அணித்தலைவர் (மிதிவெடி அபாயமுள்ள இடங்களை ஆய்வு (Survey) செய்து, அடையாளப் படுத்தும் அணி)

கல்வித்தகைமை: க.பொ.த. உயர்தரம் (கணிதம்/ உயிரியல்)

முன் அனுபவம்: மிதிவெடி அபாயமுள்ள இடங்களை ஆய்வு செய்து, அடையாளப்படுத்தும் துறையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் விரும்பத் தக்கது.

மேலதிக தகைமை:
- ★ GPS (Global Positioning System) உபகரணம் தொடர்பான பூரண அறிவும், அனுபவமும்
- ★ GIS தொடர்பான அறிவும், அனுபவமும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள், தங்களது சுய விவரக்கோவை மற்றும் தகுதிச் சான்றிதழ்களுடன் கீழ்வரும் முகவரிக்கு சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்.

**DASH Operations Office,**
**Ananthapuram,**
**Kilinochchi.**

(29485)(10-6-7)



# அஞ்சலிகள்

அளவெட்டி வடக்கு விவசாய சம்மேளனத்தின் செயலாளர்
தம்பித்துரை நிஷோபனா அவர்களின்
பேரனார் நாகமுத்து கந்தையா (சின்னமணி)
செவ்வாய்க்கிழமை (12.02.2013) அன்று காலமாகியதால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு அவர் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

கிராம அலுவலர்கள்:
க.கணேசதாஸ், ந.இரவிந்திரன்,
அளவெட்டி வடக்கு விவசாயிகளும்.

(c/6392)(3.6)



Actuarial Science
Actuarial science is the discipline that applies math & statistical methods to assess risk in finance industries
The Challenge For Maths Students
Addmissions Open

## Calling All Math & Science Students

- ✓ Caregivers
  - Min 6 months Training in care giving & Fluency in English or French.
- ✓ Diploma in Nursing / Nurse Assistant - 9 Months Course
  - With 100% Hands on Traning!!.
- ✓ Diploma in Pharmacy - 2 Years Course
  - CMCC Syllabus With Complete Practical
- ✓ Medical Laboratory Technology

CANADA, AUSTRALIA, UK, USA போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு!

Caregivers' Earning capacity
CANADA $2500/Month
AUSI $2444/Month
USA $1800/Month
UK £7.60/Hour
6 மாதகால பயிற்சி நெறியுடன்.

Addmissions Open

Caregivers கற்பதன் மூலம் CANADIAN Temporary Resident Visa (TRV) வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்

Visalam Wide and Beyond

Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



# மரண அறிவித்தல்



## கந்தையா பசுபதி

யாழ். இணுவில், மஞ்சத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பசுபதி நேற்று (13.02.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்வம் தம்பதியரின் அன்புப் புத்திரரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், எழிற்செல்வியின் பாசமிகு தந்தையும், ஜெயந்தனின் (பொறியியலாளர்) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கணேசு, குழந்தைவேலு, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், க.முருகையா (கிராம அலுவலர் J/115, வட மேற்கு, கோண்டாவில்), Dr. ராஜேஸ்வரி (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரது சிறிய தந்தையும், கேதனன், சுவேதனன், பபிவர்மா, பார்கவி ஆகியோரது அன்புப் பேரனாரும், அருந்தவமலர், கருணாமூர்த்தி ஆகியோரது மாமனும், காலஞ்சென்ற செ.சுப்பிரமணியம் (பிரதம பாதுகாவலர், புகையிரதத் திணைக்களம்), பரமேஸ்வரி, அம்பிகா, ராஜேஸ்வரி வே.சிவசுப்பிரமணியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2013) வியாழக்கிழமை மு.ப. 11 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில், கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
தி.ஜெயந்தன் (பொறியியலாளர்)-மருமகன்,
க. முருகையா (G.S. J/115, கோண்டாவில், வடமேற்கு)-பெறாமகன்.

(29500)(10-6-7)



# J/Skandavarodaya College
## Chunnakam
## Inter House Athletic Meet-2013

Date:16.02.2013,Saturday
Time:1.31p.m.
venue:College Playground

**President**
Mr.R.Easwarathasan (Principal)

**Chief Guest**
Mr.M.Ravishankar (Ssknavarodayan OSA Canada)

**Guest of Honour**
Mr.S.Santhirarajah (Zonal Director of Education-valilkamam)

**Special Guest**
Mr.V.Kanesarasha (Principal,Jaffna Hindu College)

**All are Cordially Invited**

Kandarodai,
Chunnakam. (c/6396)(3.6)

Principal,staf,students,
Non Academic Staff OSA,SDS&SDC

### திருகோணமலை மாவட்டத்திலுள்ள

# எண்ணெய் குதங்களை கையகப்படுத்த முயற்சி

## அரசின் நடவடிக்கை குறித்து அவதானம் செலுத்தப்படும் என்கிறார் எல்.ஐ.ஓ.சி.நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர்

திருகோணமலை,பெப்.14

திருகோணமலையில் அமைந்துள்ள தமது எண்ணெய் குதங்களை இலங்கை அரசு கையேற்கவுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம் என்று எல்.ஐ.ஓ.சி எரிபொருள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எவ்வித உத்தியோக பூர்வ அறிவித்தல்களும் எமக்குக் கிடைக்கவில்லை. எனினும் சிலர் எமது எரி



பொருள் குதங்களை அரசு கையேற்கப்போவதாக செய்தி வெளியிட்டுள்ளனர் என்று எல்.ஐ.ஓ.சி.எரிபொருள் நிறுவனத்தின் இலங்கை முகாமைத்துவப் பணிப்பாளர் சுபாத் டிக்வாலே தெரிவித்தார்.

எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கையில் 2003 ஆம் ஆண்டில் இருந்து தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது என்று அவர் கூறினார்.

இந்தநிலையில் தரம் குறைந்த 5000 மெற்றிக் தொன் எரிபொருள் அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் தமது நிறுவனம் விசாரணைகளை நடத்தி வருகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## அதிகாரிகளைச் சிறைபிடித்து தொழிலாளர்கள் போராட்டம்

### கிடைத்தது பயன்

நுவரெலியா,பெப்.14

அரச பெருந்தோட்டத் துறைக்குச் சொந்தமான மடுல்கலை, கலாபொக்க தோட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் தொழிலாளர்கள், தமக்கு மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட அதிகாரிகளையும் அலுவலக அறையில் பூட்டிவைத்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதனால் குறித்த பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

கடந்த எட்டாம் திகதி வழங்கப்பட வேண்டிய மாதச் சம்பளம் நேற்றுமுன்தினம் வரை வழங்கப்படவில்லை என்று தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கலாபொக்க தோட்டத்திலுள்ள பத்து தோட்டப் பிரிவுகளான, கலாபொக்க, கலகிரிய, மோமலை, நெல்லிமலை, டியானில்ல, ரெலுகஸ், காச்சாமலை, காமுகலை நடுக்கணக்கு, சோனாங்கந்தை, சிங்காமலை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 2 ஆயிரம் தொழிலாளர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அலுவலக அறையில் பூட்டிவைத்து தொழிலாளர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்தமையடுத்து, அவர்களுக்கு சம்பளத்தை வழங்க தோட்ட அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதன்பின்னர் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம் முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது.

## குளிர்சாதனப் பெட்டியை திருடியவர் கைது

மஸ்கெலியா,பெப்.14

மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலிருந்து குளிர்சாதன பெட்டி ஒன்றைத் திருடியதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை மஸ்கெலியா பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 50,000 ரூபா பெறுமதியுடைய குளிர்சாதன பெட்டியொன்று காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் சிற்றூழியர் ஒருவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (ச)



திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மொறவெவ பிரதேச செயலகத்தில் அரச அதிபர் டி.டி.ஆர்.டி.சில்வா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தை எவ்வாறு வலுப்படுத்துவதென்பது குறித்து ஆராயப்பட்டது.

## மீண்டும் சீரற்ற காலநிலை; வான் கதவுகள் பல திறப்பு

நுவரெலியா,பெப்.14

நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் நீர்த்தேக்கங்கள் சிலவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

பராக்கிரம சமுத்திரம், மின்னேரியா, கவுடுல்ல மற்றும் கந்தளாய் நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

**கிழக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சுழல் காற்று வீசியுள்ளது.**

இதேவேளை, கிழக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சுழல் காற்று வீசியுள்ளது.

அதனால் தலவாக்கலை - பூண்டுலோயா பிரதான வீதியின் மடக்கும்புர பகுதியில் மூன்று மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் நேற்றுமுன்தினம் காலை போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

அதனால் பாடசாலை மாணவர்கள், அலுவலகம் செல்லும் அரச, தனியார் ஊழியர்கள் ஆகியோர் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (ச)

## தலவாக்கலை தமிழ் வித்தியாலய காணி அபிவிருத்தி என்ற பெயரில் உதாசீனம்

### மத்திய மாகாண முதலமைச்சரிடம் முறைப்பாடு

நுவரெலியா,பெப்.14

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய காணி, பாடசாலை அபிவிருத்தி என்ற பெயரில் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவிடம் ஜ.தொ.கா. செயலர் முரளி ரகுநாதன் முறையிட்டுள்ளார்.

மேல் கொத்மலைத்திட்ட அபிவிருத்தி ஆரம்ப நிகழ்வில் ஒப்புக்கொண்டதற்கிணங்க தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயக் கட்டடம் பூரணமாக்கப்படவில்லை. மாறாக உதாசீனம் செய்யப்பட்டுள்ளது என்று பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் முரளி ரகுநாதனிடம் கவலை தெரிவித்தனர்.

இதனையடுத்து, "பொது மண்டபம், அலுவலர் காரியாலயம், தலைமை ஆசிரியர் தங்குமிடம், கணினி அலுவலகம் போன்ற கட்டட வசதிகள் கொத்மலைத் திட்ட ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக இவை யாவும் புறந்தள்ளப்பட்டு வேறு தேவைக்காக இந்தப் பாடசாலைக் காணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று ஜ.தொ.கா. செயலர் முரளி ரகுநாதன் மத்திய மாகாண முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

## கிழக்கு பிரதி தபால் மா அதிபர் நியமனம்

இலங்கை நிர்வாக சேவை முதலாம் விசேட தர அதிகாரியான கதிர்காமத்தம்பி விமலநாதன் கிழக்கு மாகாண பிரதித் தபால்மா அதிபராக நேற்றுப் புதன்கிழமை முதல் கடமையேற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபராக கடந்த 3 வருடங்களாக கடமையாற்றி வந்த அவர் நிர்வாக சேவையில் 22 வருட அனுபவம் கொண்டவர் ஆவர். (ச)

## ஆசிரியர் இடமாற்றத்தை நிறுத்தக் கோரி தொழிற்பயிற்சி மாணவர் ஆர்ப்பாட்டம்

களுவாஞ்சிக்குடி ,பெப்.14

களுவாஞ்சிக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர் இடமாற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கோரி அந்தத் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.

களுவாஞ்சிக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் கடந்த சில ஆண்டுகளாக மின்னியல் பாடநெறி முறையான பயிற்சியும், அனுபவமும் இல்லாத ஆசிரியர் ஒருவரால் போதிக்கப்பட்டுவந்தது.

அதில் ஐந்துக்கும் குறைந்த மாணவர்களின், ஒழுங்கீனமான வரவு மாத்திரமே பெறுபேறாக இருந்தது. இதுவரை ஒரு மாணவராவது பயிற்சிநெறியை முறையாகப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்று வெளியேறியது இல்லை.

இந்தநிலைமை குறித்து அதிகாரிகளின் கவனத்துக்குப் பல தடவைகள் கொண்டு வரப்பட்டு, அவர் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். புதிய ஆசிரியர் எஸ்.



புலேந்திரனின் வருகையை அடுத்து அவர் அதிக மாணவர்களை இணைத்து மின்னியல் பாடநெறியை ஆர்வமாகத் தொடர்ந்தார்.

இந்தநிலையில் அந்தப் புதிய ஆசிரியரைத் திடீரென இடம் மாற்றி வேறு ஒருவரை நியமித்தனர். இது சில அதிகாரிகளின் தனிப்பட்ட குரோதமான நடவடிக்கை என்பது நன்கு புலப்படுகிறது என்று மாணவர்கள் கூறினர்.

எனவே புதிய ஆசிரியர் வேண்டாம் , அதிகாரிகளின் வஞ்சகமான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோம் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயத்தை மாணவர்கள் பதாகைகளுடன் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலாளரின் கவனத்துக்கும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.

இந்த விடயம் குறித்து விரைவாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி, இதற்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்ற பிரதேச செயலரின் உறுதிமொழியை அடுத்து மாணவர்கள் ஆர்பாட்டதை கைவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## மூளை காய்ச்சல் ஏற்பட இரத்தினக் கல் சுரங்கமே காரணம்

### தடுக்க அனைவருக்கும் தடுப்பூசி

இரத்தினபுரி,பெப்.14

இரத்தினபுரியில் மூளை காய்ச்சல் பரவ பிரதான காரணம் மூடப்படாத இரத்தினக் கல் சுரங்கங்கள் என்று சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹீபால ஹேரத் தெரிவித்தார்.

அதனால் மூளைக் காய்ச்சல் பரவுவதை தடுக்க மூடப்படாத இரத்தினக் கல் சுரங்கங்கள் மூடப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மூளை காய்ச்சலைக் கட்டுப்படுத்தவென மாவட்ட சுகாதார அதிகாரிகள், மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எனவே தடுப்பூசியை வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மரண அறிவித்தல்

## காராளசிங்கம் ஜெயபாலன்

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் ஜெயபாலன் (11.02. 2013) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காராளசிங்கம் மாஸ்டர் ஞான செளந்தரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா (தபால் திணைக்களம்) கந்தரோடை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும், விக்னாஜெயத்தின்(ஆம்பல்) அன்புக் கணவரும், தீபாவின் அன்புத் தந்தையும், ரகுபதியின் அன்பு மாமனும், வரதலெட்சுமி(கொழும்பு), ஸ்ரீபாலன்(கனடா),விஜயா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம்(யாழ்ப்பாணம்), சண்முகானந்தராசா(லண்டன்), கீதாபரன்(கனடா), தயாபரன்(கனடா), கிருபாலினி (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.02.2013) வியாழக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
+19055682661

தகவல்:
விக்னாஜெயம்(ஆம்பல்-மனைவி),
தீபா(மகள்), ரகுபதி(மருமகன்),

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


# நாதஸ்வர இசை விழா

பிரபல நாதஸ்வர இசைக்கலைஞர்
பத்மஸ்ரீ டாக்டர்
ஷேக் சின்ன மௌலானாவின் பேரன்

## போல் ஷேக் சின்ன காசிம்

அவர்களின் நாதஸ்வர இசை விழா
கீழ்க்காணும் இடத்தில் மாலை 04.00
மணியளவில் நடைபெறும்.
அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்.

இடம்: அசெம்பிளி ஒப் கொட் சேச், யாழ்ப்பாணம்.
14.02.2013-17.02.2013

மேலதிக தொடர்புகளுக்கு
போதகர் சாம் ராஜசூரியர்,
இல.14, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 0777238300




# 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
யோசேப்பின் பெலிசிற்றா
றஞ்சினி இராசலிங்கம்



மலர்வு 13-02-1954
உதிர்வு 15-01-2013

ஐயிரண்டு திங்கள் சுமந்து
கண்மணி போல் எம்மைக் காத்து
அயராது உழைத்து உம்மையே அர்ப்பணித்து
எமக்காய் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே- நீங்கள்
விண்ணுலகம் சென்று இன்று ஒருமாதமானதுவோ?...
ஆறாது எம் துயரம்! மறவாதுஎம் உள்ளம்!
மறவோம் எம் உயிருள்ளவரை
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்தனை செய்யும் குடும்பத்தினர்

சில்லாலை, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. இராமசாமி சிறிதரன்
(B.A. Dip.in. Ed, SpTr., SLPS 2II)
(அதிபர், யா/காரை. ஊரி,
அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன்
வித்தியாலம்

எமது பாடசாலை அதிபர் அவர்கள்
08.08.2012 தொடக்கம்
இலங்கை அதிபர் சேவையின்
தரம் 2 II இற்கு பதவி உயர்வு
பெற்றமையையிட்டு மனதாரப்
பாராட்டுவதோடு பாரினிலே
அவரது சேவை மேன்மேலும்
உயர்ந்து புகழ் பெற்றிட
உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

(29437) (2.6)




ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ காரை ஊரி அ.மி.த.க. வித்தியாலயம்,
காரைநகர்.

# மரண அறிவித்தல்

## பரராஜசிங்கம் பிரசன்னா

(உரிமையாளர், பிரசன்னா மல்ரிசொப்)



கே.கே.எஸ். றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் பிரசன்னா நேற்று முன்தினம் (12.02.2013) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பரராஜசிங்கம் - காலஞ்சென்ற பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மகனும், பிரபாகரன் (ஜேர்மனி), பிரதீபன் (ஜேர்மனி), பிரதீஸன் (வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி), பிரகலாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2013) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, சமாதிக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பிரசன்னா பந்தல் சேவை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் ஆனந்தராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆனந்தராசா கடந்த (10.02. 2013) ஞாயிற்றுக் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் -சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சோதிமணி, புனிதவதி மற்றும் தவமணி, சித்திரா தேவி சிறீதரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் அன்னலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், திலீபன், கஜீபன், பிரவீனா ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், புஸ்பராசா மற்றும் இரத்தின சபாபதி, காலஞ்சென்ற யோகோஸ்வரன் மற்றும் புஸ்பராணி, பரமேஸ்வரி, சந்திரகுமார், சுகுமார், மதன்ராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனி நேரப்படி மு.ப. 10.00மணிக்கு நடைபெற்று பூத வுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111/10, ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P. 021 568 3371
00492191667806 (ஜேர்மன்)

தகவல்:
சந்திரகுமார்(மைத்துனர்),
சாருஜன் கொமினிக்கேசன்,
கொக்குவில் சந்தி.




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## மன வளக் கலைப் பயிற்சி

தென்மராட்சி, பெப்.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள்வழிகாட்டலும்ஆலோசனை வழங்கலும் சேவை ஆசிரியர், வலய அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான மன வளக் கலைப் பயிற்சிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## கைதடி முதியோர் இல்லத்திலுள்ள முதியோர்களுக்கு கைப்பணித்தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.14

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு விசேட கைப்பணி தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

முதியோர்களின் மன வளர்ச்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக குறித்த கைப்பணி தொழிற்பயிற்சிக் கான ஆரம்ப நிகழ்வு கடந்த வாரத்தில் இல்ல வளாகத்தில் இடம்பெற்றது.

நல்லூரைச் சேர்ந்த 'அம்பகும்பர' என்ற கைப்பணி பொருள் பயிற்சியாளர் மேற்படி முதியோர்களுக்கு கைப்பணி பயிற்சி நெறியை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

இல்லத்தில் தங்கியிருக்கும் ஆர்வம் உள்ள முதியோர்கள் மேற்படி பயிற்சி நெறியில் இணைக்கப்படுவர்.

கைப்பணி பயிற்சியை வழங்கி, பின்னர் அவர்களை கைப்பணி பொருள்களை தயாரிப்பதற்கும் ஊக்குவிக்கப்படும்.

இதற்குரிய மூலப்பொருள்களை இல்ல நிர்வாகம் தனியாரின் ஒத்துழைப்புக்களைப் பெற்று விநியோகிக்கவுள்ளனர். (வ-17)

## தடம் மாறும் எண்ணங்கள் வேண்டாம்

தெய்வீக தத்துவம் ஒருவனுடைய மனதின் ஊடாகவே அவனுடைய உண்மைத் தனித்தன்மையோடு தொடர்பு கொண்டுள்ளது. எண்ணங்களையும் அதை ஏற்றுக் கொள்ளாத முடிவில்லாத எண்ணங்களையும் வரவேற்று உபசரிப்பது மனதின் சிறப்பியல்பாகும். சில சமயங்களில் எண்ணங்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவை அவன் காலையே வாரிவிடுகின்றன.

சில சமயங்களில் கலியுகத்தின் காரணமாக தடம் மாறிய எண்ணங்களால் மனிதன் போதையேற்றப்படுகிறான். மனம் (மதி) இலக்கு (கதி) அந்தஸ்து (ஸ்திதி) அபிவிருத்தி (சம்பதி) ஒன்றை ஒன்று சார்ந்தவை. இந்த நான்கையும் பிழையாகக் கையாள்பவன் அரக்கனாகிறான்.

தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## மனமாற்றத்தின் காலம் இது

ஒவ்வொரு ஆண்டும் தவக்காலம் விபூதிப் புதனுடன் ஆரம்பமாகிறது. இந்த ஆண்டில் தவக்காலம் நேற்று 13.2.2013,இல் ஆரம்பித்து 30.03.2013 இல் நிறைவடைகிறது. மார்ச் மாதம் 31 ஆம் திகதி யேசுவின் உயிர்ப்பு விழா கொண்டாடப்படும். தவக்காலம் ஆண்டவரின் உயிர்ப்புக்கு முந்திய 40 நாள்களாகும். இந்தக் காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் இதில் சேர்க்கப்படுவதில்லை. ஏனெனில் ஞாயிறு தினங்கள் யேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடும் தினங்களாகும்.

இந்த நாற்பது நாள்களும் ஆண்டவர் யேசு நாற்பது நாள்கள் பாலை வனத்தில் இருந்ததை நினைவு கூர்ந்து அனுபவிக்கும் காலமாகும். இந்த நாள்களில் யேசு எதுவும் உண்ணாமல் இருந்தார். இரவும் பகலும் நோன்பிருந்தார். யேசு ஆற்ற இருந்த மேலான, கடினமான, மனுக்குலத்தை மீட்கின்ற பணிக்கு இது மிகவும் அவசியமானது என்பது இறைவனின் திட்டம்.

தவக்காலச் சிந்தனை

மனக்கட்டுப்பாட்டுக்கு நோன்பு, ஒறுத்தல், உபவாசம் மிகவும் அவசியம். கட்டுப்பாடும், கட்டுப்பாடான நோக்கமும் தனி மனித,குடும்ப, சமூக நிலையில் இருந்தால்தான் நாம் எதையும் சாதிக்க முடியும், முன்னேற முடியும்.

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். இது நமக்குள் ஆழமாகச் சென்று எமது வாழ்வை ஆராய்ந்து பார்த்து குறைகள் குற்றங்கள் பாவங்களை நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி இறைவனோடு மீண்டும் எமது உறவைப் புதுப்பிக்கும் காலமாகும்.

இந்த தவக்காலம் எமக்கு ஒரு சிறப்பான அழைப்பின் காலமாகும். நாம் இவ்வுலகில் வாழும் காலத்தில் இறைவனோடு ஒன்றித்து நல்வாழ்வு வாழ, அன்பு, அமைதி, மகிழ்ச்சி, இரக்கம் போன்ற மாண்புமிகு மனிதத் தன்மைகளையும் தந்து நம் வாழ்வை இவ்வுலகில் வாழ்ந்து, மறு உலகிலும் நமக்கு நித்தியமும் மகிழ்ந்திருக்கும் மேன்மையான வாழ்வையும் தருகிறது. எனவே தவக்காலத்தின் ஆரம்பத்தில் எமது மனமாற்ற வாழ்வை வாழ ஆரம்பிப்போம்.

அருட்பணி அ.ம.ஸ்ரீபன் செ.தா. அருள் ஆசிரமம்

## அலங்காரத் திருவிழா

கொழும்புத்துறை, பெப்.14

பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும், மாலை 5 மணிக்கு விசேட பூஜையும், திருவூஞ்சலும் இடம் பெற்று வைரவப் பெருமான் வீதிவலம் வருவார். மறுநாள் முற்பகல் 10.30 மணிக்கு பஞ்ச முக அர்ச்சனையும் 12 மணிக்கு அன்ன தானமும் இடம்பெறும். (3-135)

## மெய்வன்மைப் போட்டிகள்

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு அதிபர் எஸ்.ஸ்ரீ இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும், கௌரவ விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அதி காரி கே.பொன்னையாவும் கலந்து கொள்வார்கள். (3-8)

* * *

வரணி குடமியன் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாட சாலை மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் வை.நாகநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமாரும், சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகனும் கலந்து கொள்வர்.(வ-9)

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

உற்பத்தி மீள்சுழற்சி

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக்கொடுக்கப்படும்.

இல. 06, [illegible], [illegible], கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: இல, 30/27, [illegible], நல்லூர்.

Tel: 021 222 8680, 0775925088, 0750407430

(அ/6217)(2.6)

**வேலை வாய்ப்பு**

இலங்கையின் பிரபல தொலைத்தொடர்பாடல் நிறுவனம் ஒன்றுக்கு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை மேம்படுத்தல் அதிகாரி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்பு: 077 2264 756

(காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை அலுவலக நாள்களில் மட்டும் தொடர்புகொள்ளவும்)

(27671) (45.6.7)

## உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.14

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**சென். பற்றிக்ஸ் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

டி.மிக்கி போல்-ஏ2பி, ஜே.ஏ.நிஷாந்தன்-ஏபிசி, ஏ.எம்.பிரசாந்தராஜா-பி2சி, ரி.பி.பிறஜீஸ்-ஏ2சி,

**விஞ்ஞானப் பிரிவு**

எஸ்.சி. அன்ரஜின்-2பிசி, ஏ.எம்.டினோர்த்-பி2சி, எம்.ஏ.டிசான் -பிசிஎஸ்,

**வணிகப் பிரிவு**

ஏ.ஜெ.எம்.பிரசாந்தன்-3ஏ, கே.டிபிசன்-3ஏ, எவ்.றபேயல்-2ஏபி, ஏ.எஸ்.சைலஸ்-2ஏபி, ஏ.யசோன்-2ஏசி, ஜெ.நிருபன்-ஏ2சி, ரி.குணாளன்-ஏபிசி, டி.பி. எல்-குணாநந்தன்-2பிசி, ரி.ஜெ. சதீஸ்குமார்-ஏ2பி, வை.பி. டலீசன் -ஏபிசி, வி.ஏ.யேரோன்-ஏ2சி, ஏ.அனோஜன்-ஏசிஎஸ், பி.ஜெ.ஏ. யூலியன்ஸ்-ஏசிஎஸ்.

**கலைப்பிரிவு**

எஸ்.ஏ.சயந்தன்-2ஏசி, ஜெ.ஏ.கஜீஸ்காந்-2ஏசி, ஆர்.பாலகாந்தன்-2ஏசி, ஆர்.றெனொல்ட் -2ஏசி, ஜி.றிமோசன்-ஏ2சி, வை.சி. மரினோ -ஏ2சி. (வ)

**விற்பனைக்கு**

எம்மிடம் Super Sound Proof Perkins (30Kw,40Kw) மின்பிறப்பாக்கிகள் U.K. இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0774722780

கற்பொக்கணை,கந்தரோடை, சுன்னாகம்.

(28424)(3.6)

**காணிகள் விற்பனைக்கு**

சங்கானை மேற்கு, சாங்கையில் 11 பரப்பு பள்ள வயற்காணி (இரண்டு போகம் செய்யக்கூடியது) உரும்பிராய் சம்பந்தர் ஒழுங்கை, வடலிப் புலத்தில் 15 பரப்பு தோட்டக் காணி என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0772873245, 0778025022

(29401) (6.7.11)

**அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு**



மண்ணில்
17.11.1934

விண்ணில்
18.01.2013

செல்வி

**சிதம்பரப்பிள்ளை சிவக்கொடி (அன்னபூரணம்)**

எமது குடும்ப விளக்காய் வாழ்ந்த எங்கள் தெய்வமே
எத்தனை உறவுகள் இருந்தாலும் உங்களுக்கு ஈடாகுமோ
எம்மை விட்டுப்பிரிந்து மாதமொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்முடன் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 18.01.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (15.02.2013) வெள்ளிக்கிழமை 8.00 மணியளவில் கீரிமலையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 17.02.2013 ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நவக்கிரி, புத்தூர். குடும்பத்தினர்.

(29488) (10,6,7)

**22ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 14 |
| 09 | 02 |
| 1941 | 1991 |

அமரர்

**புவனேஸ்வரி அரியராஜா**

கற்றிட்ட தாயேநின் காதற் கணவனையும்
பெற்றிட்ட மைந்தனையும் பிரிந்துநீ சென்றாலும்
பற்றுடனே கற்றவுந்தன் பள்ளிச் சிறுவரெலாம்
பெற்றிட்ட பெருமையுமோ பேசற்கரிதம்மா!

தாவடி தெற்கு, கொக்குவில். (29483) (10,6,7) கணவர் ச.அரியராஜா.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1935 | 2013 |
| 06 | 01 |
| 15 | 15 |

**அமரர் சதாசிவம் இலட்சுமி**

சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.62, D/8, உருத்திரபுரம், கிளிநொச்சியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சதாசிவம் இலட்சுமி அவர்களின் 31ஆம் நாள் நினைவு 12.02.2013 செவ்வாய்க் கிழமை அன்று அந்தியேட்டி கிரியைகள் கீரிமலையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:

62, D8, உருத்திரபுரம், கிளிநொச்சி. பிள்ளைகள்.

(26338) (10,6,7)

# கண்ணீர் அஞ்சலி

## கந்தையா சிவசுப்பிரமணியம்



எமது பாடசாலையில் சக ஆசிரியராக கடமையாற்றும் சி.தவராஜசிங்கம் அவர்களின் அன்புத் தந்தை கந்தையா சிவசுப்பிரமணியம் அவர்கள் (12.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

# விற்பனைக்கு



நல்ல நிலையில் உள்ள மிற்சுபிசி ஜீப் யப்பான் வாகனம் (4 wheel drive diesel) விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்பு:
0777495123

(c/6453)(8.16)

# SPOKEN ENGLISH

## யாருக்காக ?

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

*3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-16.02.2013*

1) காலை 8.00-10.00 2) மு.ப. 10.00-12.00
3) பி.ப. 1.00-3.00 4) மாலை 3.00-5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாதமுடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்

*SAAMSON* 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
TEL.0776214567

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

கண் மகிழ
17.01.1965



மண் நெகிழ
13.01.2013

## அமரர் கௌரிதேவி வரதன்

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

கடந்த 13.01.2013 அன்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த அமரர் கௌரிதேவி – வரதன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவையொட்டி எதிர்வரும் 17.02.2013 அன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் தெற்கு வீதியில் அமைந்துள்ள அன்னாரது சகோதரன் கந்தையா கோடீஸ்வரனின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

பரராஜசேகரப்பிள்ளையார்
கோயில் வீதி, இணுவில். (28903)(6.7.11) குடும்பத்தினர்.


# வவுனியாவில் வெள்ளம் மக்கள் இடம்பெயர்வு

வவுனியாவில் கடந்த இரு நாள்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரையில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 227பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வவுனியாவிலுள்ள பண்டிக்கெய்த கிராம சேவகர் பிரிவிலும், புளியங்குளம் வடக்கு கிராம சேவகர் பிரிவிலுமிருந்தே இந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என வவுனியா அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்துள்ள இந்த மக்கள் பண்டிக்கெய்த கிராம சேவகர் பிரிவிலுள்ள பெரியமடு அம்மன் வித்தியாலயத்திலும் புளியங்குளம் வடக்கிலுள்ள பழைய அரைக்கும் ஆலையொன்றிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அந்தந்த கிராம சேவகர் பிரிவுகளினூடாக சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அந்நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வவுனியாவில் பண்டிக்கெய்த கிராம சேவகர் பிரிவு, புளியங்குளம் வடக்கு கிராம சேவகர் பிரிவு, ஆறுமுகத்தான்குளம் கிராம சேவகர் பிரிவு ஆகியன வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பெரியமடுக்குளம், பண்டிக்கெய்தகுளம் நாவற்குளம் ஆகிய குளங்களும் உடைப்பெடுத்துள்ளதால் வவுனியா அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, கிளிநொச்சியில் இரணைமடு குளத்தின் 11 வான்கதவுகளும் நேற்று புதன்கிழமை காலை திறந்துவிடப்பட்டுள்ளன.

இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 34 அடியாக உயர்வடைந்துள்ள நிலையில் இந்தக் குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.விகிர்தன் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து இரணைமடுக்குளத்துக்கான நீர்வரத்து அதிகமாக காணப்பட்டதனாலேயே இந்தக் குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

அக்கராயன்குளம், கல்மடுக்குளம், பரமந்தன்குளம், புதுமுறிப்புக்குளம், கனகாம்பகைக்குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகவடுவான்குளம், குடமுறுட்டி குளம் ஆகிய குளங்களிலிருந்து வான்பாய்ந்துகொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சேவைக்கால உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீமுருகதாஸ் காந்தன், சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா, கௌரவ விருந்தினராக சமூக சேவையாளர் குருசுமுத்து இராயப்பு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

★ ★ ★

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் ஆர்.ஈஸ்வரதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் சங்க கனடாக் கிளை உறுப்பினர் எம்.ரவிசங்கர், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசா, கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


# காணவில்லை



கந்தன் கருணை நல்லூரில் 02 மாதம் நிரம்பிய மண்நிறம் வாயில் கறுப்பு நிறமுள்ள நாய்க்குட்டியைக் காணவில்லை தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0772964956, 077 3867245

# வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

190 ஆம் கட்டையடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி எனும் முகவரியில் (கண்டி வீதிக்கு அண்மையில்) 4 ½ பரப்புக்காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு.
(விற்பனைப் பெறுமதி 270, 000/=)

தொடர்பு :0774443556 (27239)(6.11)

# துரிதகதியில் துல்லியமான பதிப்பு

- விசிட்டிங்காட்
- பில்புத்தகம்
- லேபல்கள்
- நினைவுமலர்கள்
- பருவகால மலர்கள்
- சஞ்சிகைகள்
- போஸ்டர்கள்
- லேட்டபாட்
- சான்றிதழ்கள்
- அழைப்பிதழ்கள்
- CD கவர்கள்
- CD ஸ்ரிக்கர்கள்

சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும்

நியாய விலை
உயரியதரம்

டிஜிற்றல் முறையில்
xerox கலர் பிறிண்ட்

யாழில் மிகொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875
கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

# விற்பனைப் பிரதிநிதி தேவை

★ வயதெல்லை:- 25-40.
★ தமிழ், சிங்களம் சரளமாக தெரிந்திருத்தல் வேண்டும்.
★ கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
★ விற்பனைத் துறையில் 2 வருட கால அனுபவம்.

விண்ணப்பங்களை 19.02.2013க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு இல.33, அரசடி வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் இரத்தினம்



கோப்பாய் தெருவைப் பிறப்பிடமாகவும், வதிரிச் சந்தி, வதிரி, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட பூரணம் இரத்தினம் அவர்கள் 11. 02. 2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், இந்திரா, இராஜரட்ணம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பரமேஸ்வரி பரமேஸ்வரன் (பரம் மாகோ), புஸ்பராணி (உஷா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14. 02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரிச் சந்தி,
வதிரி, கரவெட்டி.
077 0237630
021 226 4825

தகவல்:
M.S.சுப்பிரமணியம்
(மகன் மருமகன்)

# மூன்றாம் ஆண்டு நினைவு

மண் மகிழ
11 * 11 * 1939



கண் நெகிழ
14 * 02 * 2010

அமரர்
## திருச்செல்வம் தவநாதன்
(கவிஞர் மூளாயூர் தீ.தவம்)

அப்பாவை இழந்து
ஆண்டுகள் சென்றாலும்
இப்போது போலவே
இதயத்தில் நினைவுகள்-கணம்
தப்பாது உயர்ப்போடு
உதிரத்தில் உறைந்திருந்து
எப்போதும் அதிர்கிறதே
எப்போதும் அதிர்கிறதே...!

(சி/6398)(8.16) குடும்பத்தினர்.

# கிளிநொச்சி சந்தையின் வர்த்தக சங்க தலைவரை உடனடியாக மாற்றுங்கள்

## கிளிநொச்சி அரச அதிபருக்கு மனு கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

*கிளிநொச்சி பொதுச் சந்தையின் வர்த்தக சங்க நிர்வாகத்தின் தலைவரை உடனடியாக மாற்றிப் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவுமாறு கோரி கிளிநொச்சி அரச அதிபருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.*

அம்பாள்குளம் பகுதியில் இயங்கிவரும் சந்தையின் 215 வர்த்தகர்கள் கையொப்பமிட்ட மனுவே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் ஒன்று கூடி தற்போது இயங்கும் சங்கத்தின் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தினர்.

இந்தக் கூட்டத்தை தற்போது இயங்கும் சங்கத்தின் தலைவர் தலையிட்டு குழப்பும் முயற்சிகளை மேற்கொண்டார். இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. குழப்பமான சூழலால் இராணுவத்தினர் தலையிட்டு கூட்டத்தைக் கலைக்க வேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டது.

இதன்போது சந்தை வர்த்தகர்கள் புதிய நிர்வாகத்தைத் தெரியக் கோரித் தமது மனுவை அரச அதிபரிடம் கையளித்தனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் இயங்கி வரும் தற்காலிக சேவைச் சந்தையில் 295 வரையானவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கென வர்த்தக சங்கம் இயங்குகிறது. ஆனால் சங்கத்தின் தலைமையும் அதன் நிர்வாகமும் எம்மில் அக்கறை கொள்ளவில்லை.

பொது நோக்கங்களுக்கு அப்பால் சென்று எதிர்மறையான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

சந்தை ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் எந்த விதமான வசதிகளும் இன்றி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

சங்கத்தின் சென்ற வருட நிதி அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. வர்த்தகரின் ஒன்றுபட்ட குரலாக ஒலிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட சங்கம் அவர்களுக்கே சாவுமணி அடிக்கின்றது.

வயிற்றுப் பசிக்காக உழைக்க வந்த எமக்கு சங்க நிர்வாகத்தின் நடவடிக்கை நெருக்கடிகளைத் தருகிறது.

எனவே, பொதுச் சந்தையில் சீரான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி எமது தொழில் நடவடிக்கைகளை இடையூறு இன்றிச் செய்ய விரும்புகின்றோம். இதற்காகவே இந்த மனுவில் கையொப்பம் இடுகிறோம். - என்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் சந்தைத் தொகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று (வியாழகிழமை) பிற்பகல் 3 மணிக்கு அம்பாள்குளம் பொதுச் சந்தையைச் சேர்ந்த 215 வரையான சந்தை வர்த்தகர்கள் ஒன்று கூடி நிர்வாகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டோம்.

இதன்போது திடீரென வந்த வர்த்தக சங்கத் தலைவர் எம்மில் பலரை அச்சுறுத்தினார். தகாத வார்த்தைகளால் ஏசினார்.

உங்களை 15 நிமிடத்தில் நான் தூக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்ததுடன் கொலை மிரட்டலும் விடுத்தார்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதன் காரணமாகவே இராணுவத்தினர் தலையிட வேண்டி ஏற்பட்டது.- என்றார். (ம-6)

### அதிகரித்துக் காணப்படும் கால்நடைகளின் தொல்லை

அக்கராயன், பெப்.14

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வயல்களில் நெல் அறுவடை இடம்பெறும் நிலையில் கால்நடைகளால் அறுவடை செய்யப்படாத நெற்பயிர்களுக்குப் பெரியளவில் சேதம் ஏற்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி நகரிலுள்ள பொலிஸ் நிலையம் அரச செயலகம், பிரதேச சபை என்பவற்றின் சூழலில் பெருமளவு கால்நடைகள் காலை வேளைகளில் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் கிளிநொச்சி நகரில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களாலும் மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. (க-18)

### அனுமதியின்றி மணல் ஏற்றியவர் செலுத்தினார் 50 ஆயிரம் ரூபா

கிளிநொச்சி, பெப்.14

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய மூவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்திருந்தனர். இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த சம்பவத்துடன் நேரடித் தொடர்புடைய நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏனைய இருவரும் ஒருமாத காலம் சமூக சேவையாற்ற வேண்டும் எனவும் நீதிவான் தீர்ப்பு வழங்கினார். (க-6)

## மின்மானி மோசடிக்கு ஒத்துழைத்த 185 பேரிடம் ரூ. 22.8 மில்லியன் வசூல்

கிளிநொச்சி, பெப்.14

மின்மானியில் மோசடி புரிவதற்கு ஒத்துழைத்தவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணம் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் மின்மானியில் மோசடி செய்வதற்கு ஒத்துழைத்த மின்பாவனையாளர்களில் 185 பேரிடமிருந்து 22.8 மில்லியன் ரூபா தண்டமாக வசூலிக்கப்பட்டதாக கிளிநொச்சிப் பிரதேச மின் பொறியியலாளர் செ.பிரபாகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் மின்சாரம் உள்ள வீடுகளுக்குச் சென்ற நபரொருவர் தன்னை மின்சார சபை ஊழியர் என அறிமுகம் செய்து மின்மானியில் மோசடி செய்துள்ளார்.

இந்த நபர் இங்கு பொருத்தப்பட்டுள்ள மின்மானிகள் குறைந்த அளவில் இயங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதுடன் பெரும் தொகைப் பணத்தை இதற்காகப் பெற்றுள்ளார்.

இந்த மோசடி நபருக்கு ஒத்துழைப்பு வழங்கிய மின்பாவனையாளர்களுக்கு எதிராக மின்சாரசபை சட்ட நடவடிக்கை மேற்கொண்டது.

இதன்பிரகாரம் கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் 2011 ஆம் ஆண்டு 146 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நீதிமன்றங்களில் முன்னிலையாக்கப்பட்ட போது இவர்களிடமிருந்து 19.3 மில்லியன் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது.

இதேவேளை கடந்த ஆண்டு இந்த மாவட்டங்களில் 39 பேர் கைது செய்யப்பட்டு இவர்களிடமிருந்து 3.5 மில்லியன் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது.

மேலும் மோசடி செய்யப்பட்ட மின்மானிகளுக்குப் பதிலாக புதிய மின்மானிகள் பொருத்துவதற்கென 5 ஆயிரம் ரூபாவும், மீளாய்வு செய்வதற்காக 700 ரூபாவும் மின்சார சபையினால் அறவிடப்பட்டது.

இந்த மின்மானி மோசடி நடவடிக்கையினால் மின்சாரசபைக்குப் பெரியளவில் வருமான இழப்பீடு ஏற்பட்டது. இத்தகைய மோசடி தொடர்பாக பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் தவறினால் மின்சாரசபை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-13)

### அதிக விலையில் பொருள்கள்

கிளிநொச்சி பூநகரியின் ஜெயபுரம் சந்தையில் அதிக விலையில் பொருள்கள் விற்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு விற்பனை செய்யப்படும் மரக்கறி, மீன் என்பனவே அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

மிகவும் குறைந்த விலைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் அவற்றை அதிக விலைகளில் விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வறிய நிலையிலுள்ள கிராம மக்கள் பொருள்களை வாங்க முடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)




நெளுக்குளம் மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனியொன்று இடம்பெறுகின்றது. (க-402)

## அகற்றப்படாத பொதுச் சந்தைக் கழிவுகள்

கிளிநொச்சி,பெப்.14

விசுவமடு பொதுச் சந்தையின் கழிவுகள் உரியமுறையில் அகற்றப்படுவதில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இந்தப் பொதுச் சந்தையின் கழிவுகள் உரிய முறையில் உரிய காலத்தில் அகற்றப்படாததால் மழைகாலங்களில் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக பொதுச் சந்தை வர்த்தகர்களும், இந்தப் பகுதி மக்களும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஆளணி மற்றும் பௌதிக வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றது. (க-6)

மரண அறிவித்தல்



நடராசா துரைசிங்கம்

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசாதுரைசிங்கம் நேற்று (13.02.2013) புதன்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: க.பொன்னுத்துரை
குடும்பம் - தாவடி

(29499)(3.8)

கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
பரராஜசிங்கம் பிரசன்னா
அவர்கள் 12.02.2013
செவ்வாய்க்கிழமை அகால
மரணமடைந்த செய்தி கேட்டு ஆறாத்
துயரடைவதுடன் அவரது பிரிவால்
துயற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

2001,2002
கலை, வர்த்தக பிரிவு
மாணவர்கள்,
யா/இணுவில் இந்துக்கல்லூரி.

இணுவில்

(28951)(8.16)

## 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' கிரிக்கெட் தொடர்

# காலிறுதிப் போட்டிக்கு முன்னேறிய அணிகள்


இமையாணன் இளைஞர் வி.க.


திருநாவலூர் வி.க.

யாழ்ப்பாணம்,பெப்.14

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டத்துக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும், திருநாவலூர் விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

குறித்த சுற்றுப்போட்டியில் 32 கழகங்கள் பங்குபற்றியதால் ஆரம்ப ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றன. அவற்றிலிருந்து 16 அணிகள் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றன . குறித்த 16 அணிகளும் தலா நான்கு அணிகளைக் கொண்ட ஏ, பி, சி, டி என்னும் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்டங்கள் இடம்பெற்றன.

ஒவ்வொரு குழுவிலும் இடம்பெற்ற அணிகள் தலா மூன்று போட்டிகளில் விளையாடின. இதன் பெறுபேறுகளின் அடிப்படையில் அணிகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டன. அதனடிப்படையிலிருந்து ஒவ்வொரு குழுவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் காலிறுதியில் விளையாடும் வாய்ப்பை பெற்றுள்ளன.

இந்த வகையில் 'ஏ' குழுவில் அணிகள் பெற்ற புள்ளிகள் வருமாறு:-

★ இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் - 4 புள்ளிகள்

★திருநாவலூர் விளையாட்டுக்கழகம்- 4 புள்ளிகள்

★பங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்- 2 புள்ளிகள்

★மைக்கல் விளையாட்டுக்கழகம் - 2 புள்ளிகள்

இதனடிப்படையில் 'ஏ' குழுவில் முதலிரு இடங்களையும் பெற்ற இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகமும், திருநாவலூர் விளையாட்டுக்கழகமும் காலிறுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ந)

## இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

பி.ப.4 மணி
சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம்
எதிர்
விண்மீன் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

ஆலடி சிந்து விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரியால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

**மாலை 4.00 மணி (பெண்கள்)**
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி
எதிர்
திருக்குடும்ப கன்னியர் மடம் அணி

**மாலை 5.30 மணி (ஆண்கள்)**
கொக்குவில் இந்துக் கல்லூரி அணி
எதிர்
சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

(ந-23-228)

# பூநகரி கோட்ட கரப்பந்து வலைப்பந்து முடிவுகள்

பூநகரி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பவற்றின் முடிவுகள் வருமாறு-

கரப்பந்து

**15 வயது- ஆண்கள் பிரிவு**

1 ஆம் இடம்- நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை, 2 ஆம் இடம்- முக்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, 3 ஆம் இடம்- வலைப்பாடு றோ.க.த. பாடசாலை.

**17 வயது-ஆண்கள் பிரிவு**

1 ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம், 2ஆம் இடம்- நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் அ.த.க பாடசாலை, 3 ஆம் இடம்- முழங்காவில் மகா வித்தியாலயம்

**19 வயது-ஆண்கள் பிரிவு**

1 ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம், 2ஆம் இடம்- ஜெயபுரம் மகா வித்தியாலயம், 3 ஆம் இடம்- பூநகரி மகா வித்தியாலயம்.

**15 வயது- பெண்கள் பிரிவு**

1ஆம் இடம்- வலைப்பாடு றோ.க.த. பாடசாலை, 2ஆம் இடம்- முக்கொம்பன் அ.த.க. பாடசாலை, 3ஆம் இடம்- ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

**17 வயது- பெண்கள் பிரிவு**

1ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம், 2 ஆம் இடம்- முழங்காவில் மகா வித்தியாலயம், 3ஆம் இடம்- ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

**19 வயது -பெண்கள் பிரிவு**

1ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம், 2ஆம் இடம்- முழங்காவில் மகா வித்தியாலயம், 3ஆம் இடம்- ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

வலைப்பந்து

**15 வயது -பெண்கள் பிரிவு**

1 ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம், 2ஆம் இடம்- முக்கொம்பன் அரசினர் தமிழக் கலவன் பாடசாலை, 3 ஆம் இடம்- ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

**17 வயது -பெண்கள் பிரிவு**

1 ஆம் இடம்- முக்கொம்பன் பாடசாலை, 2 ஆம் இடம்- பூநகரி மகா வித்தியாலயம், 3 ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம்.

**19 வயது -பெண்கள் பிரிவு**

1 ஆம் இடம்- வேரவில் இந்து மகா வித்தியாலயம், 2 ஆம் இடம்- ஜெயபுரம் மகா வித்தியாலயம், 3 ஆம் இடம்- பூநகரி மகா வித்தியாலயம். (ந-422)

# கரைச்சிப் பிரதேச செயலக கழகங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் சில

யாழ்ப்பாணம், பெப்.14

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் சில ஆட்டங்களின் முடிவு வருமாறு:-

புதிய பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் எதிரணியை வீழ்த்தி வாகை சூடியது.

மற்றொரு ஆட்டத்தில் குறிஞ்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெயந்தி நகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் சளைக்காது சமபலத்தோடு பலப் பரீட்சை நடத்தின. எனினும் இறுதியில் ஜெயந்தி நகர் விளையாட்டுக்கழக அணி 1:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்னொரு ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியும் ஒன்றையொன்று எதிர்த்தாடின. இந்த ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

திருநகர் விளையாட்டுக் கழக அணிக்கும், மகாதேவா விளையாட்டுக்கழக அணி இடையிலான ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக்கழக அணி கோல் மழை பொழிந்து, எதிரணியை திக்குமுக்காடச் செய்தது. இறுதியில் திருநகர் விளையாட்டுக்கழகம் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்னொரு ஆட்டத்தில் திருவையாறுமத்திய விளையாட்டுக்கழக அணியும் உதய தாரகை விளையாட்டுக்கழக அணியும் மோதின இந்த ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி 4:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பின்னர் நடைபெற்ற ஆட்டமொன்றில் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும், ஸ்கந்தா விளையாட்டுக்கழக அணியும் ஒன்றையொன்று எதிர்த்தாடின. இந்த ஆட்டத்தில் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தா அணியை வீழ்த்தியது.

(ந 23)



பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட வீதியோட்டத்தில் முதலிடத்தை நா.இராமேஸ்வரனும், இரண்டாமிடத்தை பு.டக்சனும், மூன்றாமிடத்தை எஸ்.விமலூர் பெற்றுக் கொண்டனர். குறித்த வீதியோட்டத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட சுமார் 25 மாணவர்கள் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந 11)

# சாதனையுடன் தீவுகள் வெற்றி



16 வருடங்களுக்குப் பின்னர் ஆஸ்திரேலிய மண்ணில் வெற்றிக் கிண்ணமொன்றை சுவீகரித்து சாதனை ஒன்றை மேற்கிந்தியத் தீவுகள் நேற்றுப் பதிவு செய்துள்ளது. ஆஸி. அணிக்கெதிரான முதலாவது 20/20 ஆட்டத்தில் வென்றதன் மூலமே இந்தச் சாதனையை மேற்கிந்தியத் தீவுகள் படைத்தது.

ஆஸ்திரேலிய-மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரேயொரு 20/20 போட்டி நேற்று பிறிஸ்பேணில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் நம்பிக்கை நட்சத்திரமும் அதிரடி ஆட்டக்காரனுமாகிய கிறிஸ்கெயில் வெறும் 8 ஓட்டங்களுடன் வெளியேற மேற்கிந்தியத் தீவுகள் ஒருநாள் தொடரைப் போன்று 20/20 தொடரையும் இழப்பது நிச்சயம் என்றே கருதப்பட்டது. ஆனால் அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சாள்ஸ் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியைத் தூக்கி நிறுத்த உதவினார். அவருடன் இணைந்து டி.எம்.பிராவோவும்



போராடினார். இருவரும் இணைப்பாட்டமாக 88 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

சிறப்பாக ஆடி அரைச் சதம் கடந்த சாள்ஸ் 57 ஓட்டங்களுடன் களத்தை விட்டு அகன்றார். தொடர்ந்து டி.எம்.பிராவோவும் 32 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன் பின் வந்த துடுப்பாட்ட வீரர்கள் இலக்கு இழப்பு பற்றி கவலைப்படாமல் அதிரடி ஆட்டத்தில் குதித்தனர். இதனால் இலக்குகள் ஒருபுறம் இழக்கப்பட்டுக் கொண்டிருக்க மறுபுறம் மேற் கிந்தியத் தீவுகளின் ஓட்ட எண்ணிக்கை அசுர கதியில் உயர்ந்தது.

இதனால் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களை மேற்கிந்தியதீவுகள் பெற்றது.

கெரான் பொலார்ட் 17 பந்துகளில் 26 ஓட்டங்களையும், அன்ட்ரூ ரசல் 11 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும், டெரன் சமி 7 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பவுல்க்னர் 3 இலக்குகளையும், ஜோஷ் ஹேஷல்வூட், நெதன் கோல்ட்டர் நீல் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

192 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்கை 5 ஓட்டங்களுக்கே இழந்த ஆஸ்திரேலிய, இரண்டாவது இலக்குக்காக 74 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டிருந்தன. துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக அடம் வோஜஸ் 33 பந்துகளில் 51 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 11 பந்துகளில் 22 ஓட்டங்களையும், ஷோன் மார்ஷ் 19 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரான் பொலார்ட் 3 இலக்குக்களையும், சுனில் நரைன் 2 இலக்குகளையும், டெரன் சமி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கெரான் பொலார்ட் தெரிவானார். (ங)

## மாணவர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
(வயது-25), கலைப் பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கனகசுந்தரசுவாமி ஜனமேஜெயந் (வயது-25) ஆகிய இருவருமே நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் மாவீரர் தினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தீபம் ஏற்றினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்டிருந்த நான்கு மாணவர்களும் வெலிக்கந்தையில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அவர்களை விடுவிக்குமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் தொடர் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்கள் விடுவிக்கப்படாத நிலையிலேயே யாழ். பல்கலைக்கழகம் கடந்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகியது. அதன் பின்னர் கடந்த ஜனவரி 22 ஆம் திகதி சொலமன், பவானந்தன் ஆகிய இரு மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

எஞ்சிய இரு மாணவர்களையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் இருந்து அழைத்து வரப்பட்ட தர்ஷானந்த், ஜெனமேஜெயந் ஆகிய இருவரும் வவுனியா பூந்தோட்டம் பெண்கள் புனர்வாழ்வு முகாமில் வைத்துப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன் போது யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி வி.பி.சிவநாதன், வரலாற்றுத் துறை பேராசிரியர் நி.புஸ்பரட் ணம் ஆகியோரும் மாணவரின் பெற்றோரும் உடன் இருந்தனர்.

(த-4-5)

## குளவி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

தியாகராசா என்பவர் தனது காணியில் பற்றைகளை வெட்டி துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தார். இதன் போது மரப் பொந்தில் இருந்த கருங்குளவிகள் கலைந்து இவரைத் தாக்கியுள்ளன.

அலறி அடித்துக் கொண்டு ஓடிய தங்கராசாவை காப்பாற்ற அயலில் இருந்து வந்த திருநாவுக்கரசு குளவிகளுக்குள் அகப்பட்டுக் கொண்டார். குளவிகளால் கடியுண்ட இவர் மயக்கமுற்றார். வைத்தியசாலைக்கு அவரை உறவினர்கள் கொண்டு சென்றபோது அங்கு உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை காங்கேசன்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரு 36)

## கூட்டமைப்பை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ருந்தது. அதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். எங்களுக்கு முறைப்படி அழைப்பிதழ் அனுப்பப்பட வேண்டும். ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் அனுப்பி எங்களைப் பிரித்தாள முயன்றால் அது நடவாது-என்றார்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிக்கையில், எனக்கும், சக நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாகமூர்த்திக்கும், ஜனாதிபதியின் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது. ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை.இதனால் கட்சி முடிவுக்கு அமைய நான் குறித்த கூட்டத்துக்குச் செல்லவில்லை.

இது தொடர்பில் நான் விசாரித்த போது, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முதலில் ஜனாதிபதி செயலகத்தால் அழைப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால் பின்னர் குறித்த பொறுப்பு யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அரச அதிபர் அதன் பின்னர், அழைப்பு அனுப்புவது தொடர்பில் யாருடனாவது கலந்துரையாடியிருப்பார். அல்லது வேலைப்பழுவால் அந்தப் பணியை செய்யாமல் விட்டிருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

### ஏன் இந்தச் சுத்துமாத்து?

குறித்த அழைப்பிதழில், ஜனாதிபதி அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்தவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பெறுமதி யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு தெரியவில்லை.

தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கு கடந்த 11 ஆம் திகதி மாலை 5 மணிக்கு அரச அதிபர் அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழைப்பிதழ் கிடைத்துள்ளதா எனக் கேட்டுள்ளனர். அத்துடன் அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டது. இதிலிருந்தே தெரியவருகின்றது இவர்களின் சுத்துமாத்து - என்றார்.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், பிரதேச சபைகளின் துணைத் தவிசாளர்களுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்த போதும், துணை தவிசாளர்கள் எவருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை. இதிலிருந்தே நிகழ்வின் ஏற்பாடு எப்படிப்பட்டது என்று தெரிகின்றது என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். (த-5)

# தொழிற்பயிற்சிகள்

*ELECTRONICS
சகல இலத்திரனியல் பொருள்கள் (T.V, DVD,Phone) திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

*Mobile Phone Repairing
சகல Phone களின் Hardware, Softwareகள் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்

*Air Conditioning
சகல குளிர் சாதனங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.

**மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்-17.02.2013**

சகல பயிற்சிகளும் முழுநேர செயன்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடிவில் தொழில் வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

குறிப்பு: O/L படித்த மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

**சிங்கள வகுப்புகள்**

A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல உள்ள மாணவர்களிற்கு சிங்களம் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.

Batch: I-கிழமை நாள்கள் 9.00am - 11.00am (காலம் 3 மாதம்)
Batch : II -சனி, ஞாயிறு 4.30pm - 6.00pm (காலம்: 9 மாதம்)

ஆசிரியர் - K.R. சூரி    வகுப்புகள் ஆரம்பம்: 18.02.2013

(சி/6388)(8.6)

விவரங்களிற்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

இல.23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P:0718561654, 0778249949.

கிளை: NEW ASIAN CENTER 56/15 B, Stanley Road, Jaffna. 077 9254078.


# வளர்ந்து வரும் அணி அறிவிப்பு

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணிக்கும், இலங்கை வளர்ந்து வரும் அணிக்கும் எதிரான 3 நாள் பயிற்சிப் போட்டியில் பங்குகொள்ளவுள்ள இலங்கை வளர்ந்து வரும் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பயிற்சிப் போட்டிக்கான அணியே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியின் பயிற்றுவிப்பாளராக றொமேஷ் களுவிதாரண செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதோடு, முதலாவது டெஸ்ட்போட்டி மார்ச் 8ஆம் திகதி காலியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள 23 பேர் கொண்ட அணி:

ஆஷென் சில்வா, நிரோஷன் டிக்வெல்ல (வி.கா), உதர ஜெயசுந்தர, ஷெஹான் ஜெயசூரிய, அஞ்சலோ பெரேரா, கித்துருவான், ஆஷன் பிரியஞ்ச, றொமேஷ் புத்திக்க, கயான் மனிஷன் (வி.கா), சதுன் வீரக்கொடி, லஹிரு மதுஷங்க, இஷான் ஜெயரத்ன, துஷ்யந்த சமீர, விஷ்வா பெர்ணான்டோ, லஹிரு கமகே, கசுன் மதுஷங்க, லஹிரு ஜெயரத்ன, சத்துரங்க டீ சில்வா, றமித் றம்புக்வெல்ல, தரிந்து கௌஷால், துலஞ்சல மென்டிஸ், மதுக லியனபத்திரன, அகில தனஞ்சய. (ந)


**கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி**

**Mobile Phone Repairing Course**

Just 4 Days
ஆரம்பம் Feb:15,16, 17,18 ஆகிய நாள்களில்

பதிவுகளுக்கு விரையுங்கள்

கட்டணம் 9500/=

Sun British College, No.26Station Road,Vavuniya.T.P-0777929475

**மென்பந்து கிரிக்கெட்**

கொடிகாமம் மின்ஒளி நடத்தும் 7 பேர் கொண்ட பரிமாற்றம் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

இடம்: மிருசுவில் வைத்தியசாலை முன்பாக
காலம்: 17.02.2013 ஞாயிற்றுக்கிழமை
தொடர்பு: 077 711 1790

(டு/6375)(5-6-7)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமேஇச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093
1, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)



காதலர் தினத்தில் ......

மனதுக்குப் பிடித்தவர்களுக்குப் பிடித்தமான பரிசுகளை வழங்கி மகிழ்ந்திடுங்கள்,

உங்களது, உங்களுக்கு விருப்பமானவர்களது படங்கள் மற்றும் சின்னங்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசில்கள்......

மனதைக்கவரும் இனிய வாழ்த்து மடல்கள் .........

பெயர்பொறிக்கப்பட்ட நினைவு பரிசில்கள் என்பவற்றை விரைவாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்......




மாறாத அன்பு மறவாமல் நிலைத்திடும் அன்புப் பரிசுகளுக்கு அழையுங்கள்

Best Print 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

துரித அழைப்பு : 021 567 6722


# மரண அறிவித்தல்

## திருமதி ஸ்ரீவேணி தயாளன்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வதிவிடமாகவும், கனடா(ரொரண்டோ)வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீவேணி தயாளன் கடந்த (11.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், பூலோகம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், தயாளனின் அன்பு மனைவியும், கிருஷன், அபிரா ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஷ்ணவேணி, சத்தியவேணி, சிவசோதி, பால சோதி, குமாரசோதி, ஸ்ரீமுருகன்(அருள்)ஆகியோரின்சகோதரியும்,நேமிநாதன், யோகராசா, கல்யாணி, ஈஸ்வரி, ஜெயமதி, வினோதினி, ஸ்ரீதரன், ஜெயசீலன், அன்பழகி,அமுதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2013) வியாழக்கிழமை நடைபெறும். அவரின் பூதவுடல் கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17 B, மணல்தரை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(புளியங்கூடல்) 021 221 9056

தகவல்:
ஸ்ரீதரன் (சீராளன் மைத்துனர்),
கோவிதன் (கோபி பெறாமகன்)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தென்மராட்சிப் பிராந்தியக் கிளையின் விரிவாக்கத்திற்கு பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

01. நிலைய முகாமையாளர்
02. நிலையச் செய்தியாளர்கள்
03. இணையத்தள வடிவமைப்பாளர்
04. பொது லிகிதர்
05. கணக்கீட்டு உதவியாளர்கள்
06. வரைகலை (கிரபிக்ஸ்) நிபுணர்கள்
07. பக்கவடிவமைப்பாளர்கள்
08. தட்டெழுத்தாளர்கள்
09. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
10. அலுவலக உதவியாளர்



**அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**தகுதி, அநுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளப் பொதி காத்திருக்கின்றது.**

விண்ணப்பங்களைப் பெற்றுக் கையளிப்பதற்கு : **முதலாம் மாடி, நவீன சந்தை, சாவகச்சேரி**

078 284 5000 / 078 284 5030


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தியாகராசா



முகமாலை, எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் 60 பாகக் கிணற்றடி, பருத்தித்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தியாகராசா நேற்றுக் காலை (13.02.2013) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் செல்லம்மாவின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தங்கராசா, தம்பிராசா மற்றும் செல்வராசா (பளை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராகுலன் (அமெரிக்கா), றதனி (நோர்வே), சுகந்தராஜி (கொலண்ட்), கோகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேணுகா (அமெரிக்கா), கெங்காதரன் (துபா- நோர்வே), செல்வகுணசிங்கம் (துரை- கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனும் அகரன், அகர்ஷன் (நோர்வே), தக்ஷன், கிசோபிகன் (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2013) வெள்ளிக்கிழமை அவரின் புலோலி இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக பி.ப. 2 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

60 பாகக் கிணற்றடி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
021 226 3666, 0778828645.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.